# தமிழின் சிறப்பு



கி.ஆ.பெ.விசுவநாதம்

# தமிழின் சிறப்பு

முத்தமிழ்க் காவலர், கலைமாமணி,
டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், டி.லிட்.,

பாரி நிலையம்
184. பிராட்வே - சென்னை - 600001

| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | 1969 |
| இரண்டாம் பதிப்பு | : | 1979 |
| மூன்றாம் பதிப்பு | : | 1981 |
| நான்காம் பதிப்பு | : | 1985 |
| ஐந்தாம் பதிப்பு | : | 1993 |
| ஆறாம் பதிப்பு | : | 1998 |
| ஏழாம் பதிப்பு | : | 2000 |
| **எட்டாம் பதிப்பு** | : | **2003** |

உரிமை : ஆசிரியருக்கு

**விலை ரூ : 30/-**

*Laser by* : சூர்யா பிரதர்ஸ், சென்னை. போன் : 474 4185
*Printed by* : பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 13.

# முன்னுரை

தமிழின் 16 செல்வங்களைக் கொண்ட **"தமிழின் சிறப்பு"** என்ற இந் நூலைத் தமிழ்த்தாயின் திருவடிகளில் வைத்து வணங்குகிறேன்.

நான் ஓரளவு தமிழறிவு பெறுவதற்கு உறுதுணையாக இருந்துவந்த உயர்திரு. மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், நாவலர் ந.மு.வே. நாட்டார் ஐயா, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் ஆகிய தமிழ்ச் சான்றோர்களுக்கு இந் நூலைக் காணிக்கை யாக்குகிறேன்.

விரைந்து எழுதப்பெற்ற இந் நூலில் சில பிழைகள் இருக்கலாம். அவற்றை எடுத்துக்காட்டி இதன் அடுத்த பதிப்பு திருத்தமாக வெளிவரத் துணைபுரியுமாறு தமிழகப் புலவர் பெருமக்களை வணக்கமாக வேண்டுகிறேன்.

படிக்கத் தெரிந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந் நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்நூல் பாடநூலாகவும் அமையுமானால் நான் பெரிதும் மகிழ்வேன்.

இந் நூலை ஒப்புநோக்கி உதவிபுரிந்த தமிழறிஞர் திரு. வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும், மதிப்புரை வழங்கிய பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத் துரையார் அவர்களுக்கும், அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா அசச்கத்தாருக்கும், வெளியிட்டு உதவிய சென்னை பாரி நிலையத்தாருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

தி.பி. 2000, பங்.1 — தங்களன்பிற்குரிய,
திருச்சிராப்பள்ளி-8 — **கி.ஆ.பெ. விசுவநாதம்**

# பதிப்புரை

தமிழின் சிறப்பையே தம் வாழ்வின் சிறப்பாகக் கருதி, அல்லும் பகலும் அயராது உழைத்து வருபவர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ.பெ. விசுவநாதம் அவர்கள். தமிழ்நாட்டின் தமிழர்களின் உயர்வுக்கான அரும்பணிகளே இவர்தம் குறிக்கோள். இவருடைய பேச்சும் மூச்சும், சொல்லும் செயலும், எண்ணமும் எழுத்தும் எல்லாமே தமிழே. எப்பொழுதுமே இவர்தம் உள்ளத்தில் மேலோங்கி நிற்பது தமிழ் நலமும், தமிழர் நலமுமே.

இன்று இவர் தமிழின் சிறப்புகளைப் பல்வேறு வகைகளில் தக்க சான்றுகளை எடுத்துக்காட்டிச் சிறந்த முறையில் எல்லாருளமும் மகிழத் தமிழுலகிற்கு வழங்கின்றார். எளிய இனிய தமிழில், இளைஞர் தொடங்கி முதியர் ஈறாக ஆண் பெண் அடங்கலும் கற்று வியக்கும் வண்ணம் தமிழின் சிறப்புகளைத் தக்க ஏதுக்களும் எடுத்துக்காட்டுகளும் தந்து விளக்கிச் செல்கின்றார். முத் தமிழின் வித்தகங்களையும் இலக்கிய இலக்கணங்களின் அருமை பெருமைகளையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கண்டு தெளிந்து ஆசிரியர் அமைத்துத்தரும் செய்திகள் கற்பார்க்குக் கழிபேருவகை தருவன. இத் தமிழ்ப் பெருமகனாரின் கல்வி கேள்வி நுண்ணறிவுகளைத் தமிழுலகிற்குப் பறைசாற்றுகிறது இத் 'தமிழின் சிறப்பு'. இந் நூலகத்தேயுள்ள பதினாறு பிரிவுகளும் தமிழ்ப் பெருமக்களுக்குக் கிடைத்த பதினாறு பெரும் பேறுகள்.

வரலாற்றுப் புகழ்மணங் கமழும் 'தமிழின் சிறப்பு'ப் பற்றிய இந் நூலையும் எமது நிலைய வாயிலாக வெளிவர வாய்ப்பளித்த திருவாளர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களுக்கு எமது நன்றி உரியதாகுக. **'தமிழின் சிறப்பு'** கண்டு தமிழுலகம் மேன்மேலும் புதிய சிறப்புக்களையும் பேறுகளையும் பெற்று ஓங்கி வளர்வதாக.

சென்னை - 1. **பாரி நிலையத்தார்**

# மதிப்புரை

பன்மொழிப் புலவர்

**கா. அப்பாதுரை**

எம்.ஏ. (ஆங்கிலம்), எம்.ஏ. (தமிழ்), விசாரத் (இந்தி), எல்.டி.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், சோழன் கரிகாலன் பதினாறுகால் மண்டபம் ஒன்று எழுப்பி, அதில் அரங்கேற்றப் பட்ட பட்டினப்பாலையைப் பாடிய தமிழ்ப் புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குக் கால் தோறும் ஒரு நூறாயிரம் பொன் கிழி கட்டிவைத்து அப் பதினாறு நூறாயிரம் பொன்னையும் பரிசாக அளித்தான் என்று கலிங்கத்துப் பரணி கூறுகிறது.

இதனை நினைவூட்டும் வகையில், நம் தமிழக அரசு பரிசுத் திட்டம் என்ற பதினாறுகால் மண்டபம் நிறுவி, மாதம்தோறும் பதினாறு பேர்களுக்கு நூறாயிரம் நூறாயிரம் வெள்ளியாகப் பரிசளிப்பதை நாம் அறிவோம்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமிழின் சிறப்பு என்ற இவ்வேட்டைத் தமிழன்னை கோயில் கொள்வதற் குரிய ஒரு பதினாறுகால் மண்டபமாகப் பதிப்பித்து, அதன் கால்கள்தோறும் இலக்கம் வெள்ளி பொன் மணிக்கருத்துக்களாக் வரிந்துகட்டிப் பதினாறு சிறப்புகளைக் கூறித் தமிழில் பணி செய்பவர் கட்கெல்லாம் ஒரு பதினாறு நூறாயிரம் பொற்கிழி பரிசாக அளித்துள்ளார்.

தமிழின் சிறப்புகளைப்பற்றி எழுதியவர் ஏராளம். ஆனால் பதினாறு செல்வத்துடன் ஒப்பாகப் பதினாறு சிறப்புகள் என்ற வகுப்பு முறை புதிது. இதுமட்டுமன்று; ஒவ்வொன்றும் ஓரிலக்கம் அதாவது ஒரு நூறாயிரம் அடங்கிய பொற்கிழியின் மதிப்பு டையது. தமிழ்பற்றி வேறு எங்கும் கூறாத கருத்துகளும், கூறிய கருத்துகளிலும் எவரும் கருதாத சந்த முறை களும் அவற்றில் பக்கம்தோறும் பத்திதோறும் மிளிர்கின்றன.

ஓர் அகப்பைக்கு ஒன்று பதமாக இவற்றுட் சில காண்மின்கள்!

நமது நாட்டுக்குச் செந்தமிழ் நாடு என்று பெயர் வைத்தவர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். இதில் நாட்டிற்கு அடை மொழியாக நமது மொழியும், மொழிக்கு அடைமொழியாகச் செம்மையும் அமைந்திருப்பது பெரிதும் வியப்புக்குரியதாகும். (பக்கம்.10)

தமிழ் எழுத்துக்களை ஒலிப்பதில், தொண்டைக்குக் கீழே வேலையே இராது. (பக்கம்.16)

'தமிழ்ச் சொல்வளம் மிகுந்த மொழி (தனித் தமிழ்ச் சொற்களே 90,000). புதிதாகக் கலைச்சொல்லை எளிதில் உருவாக்கவும் ஏற்ற மொழி. (பக்கம். 25)

'தம்பி. நீ தமிழ் எழுத்துக்களை எழுத வேண்டுமானால், முதலில் சுழிக்கக் கற்றுக்கொள்.' (பக்கம் 35)

ஆங்கிலேயர் மொழி!

'அழகான பாஷைதான்; அதற்கேற்ற எழுத்துத்தான்.'

ஆனால்......

அவர்கிட்ட இருப்பதெல்லாம் ஒரே ஒரு ''எல்''லு தான் என்று பாடலாம்போலத் தோன்றுகிறது. (பக்கம் 37)

'ழ' என ஒலிக்க உலகில் எம்மொழியிலும் எழுத்தில்லை. (பக்கம் 38)

'உரை நடையிலுள்ள சொற்கள் உதிரிப்பூப் போன்றவை. கவிதையிலுள்ள சொற்கள் சரம் போன்றவை. (முன்னதில் ஒன்றை எடுத்தால் ஒன்றுதான் வரும். பின்னத்தில் எடுத்தால், கூடவே எல்லாம் வரும்.) (பக்கம் 53)

'2000 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து உலகில் ஆட்சி செய்துவந்த ஒரே நாடு தமிழகம்!' (பக்கம் 70)

'சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருப்பது வியப்புக்குரியது. (பக்கம் 72)

'தமிழர் திணைநிலம் ஐந்து எனக் கண்டு 3000 ஆண்டுகளுக்கு மேலாயின. இன்னும் ஆறாவது நிலப்பரப்பை எவராலும் காண முடியவில்லை.' (பக்கம் 80)

'மொகஞ்சதரோவில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற இசைக் கருவிகள் 5000 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழிசைக் கருவிகள் (பக்கம் 83). இவ்வாறு பிறக்கும் இசையின் (இராக வகையின்) எண்ணிக்கை 11991 ஆகும். இதற்கு எடுத்துக் காட்டாக உள்ள நூற்பாவும் சிதைந்து காணப்படுகிறது. (பக்கம் 89)

சிலப்பதிகாரத்தில் 'மெய்யிற்பொடியும்' எனத் தொடங்கி 'உயிர்' என முடியும் வெண்பாவிற்கு முத்தமிழ்க் காவலர் தரும் உரைவிளக்கம் முத்தமிழ் உரைவிளக்கமாகவே அமைகிறது. அதன் ஏழு நயங்கள், ஐந்து கருப்பொருள்கள், வாசகர்கள் வாசித்தே நுகர்வதற்குரியன. அதில் உயிர் பறிகொடுத்த மெய்யாக வந்த கண்ணகி, அரசியையும், அரசனையும் உயிரற்ற உடலாக்கிக் கூறும் பாட்டு என இம் முதலும் முடிவும் சுட்டுகிறது என்று அவர் குறிப்பிடும் எட்டாவது நயம். ஆறாவது கருத்துப்பொருள் அழகிது! அழகிது! அழகிது! (பக்கம் 57)

அழியாத தமிழ் ஏடுகளின் அழிவிலா அழகு வருணிக்கு முன், இவை தமிழர் செல்வத்தில் அழியாது எஞ்சிய சிலவே என்று காட்ட, அழிந்த தமிழ் ஏடுகள், அழிந்த சித்த மருத்துவ ஏடுகள், அழிந்த இசை நாடகச் செல்வங்கள் ஆகியவற்றின் பட்டியல் கூறும் நயத்தை, ஒரு முத்தமிழ்க் காவலரிடமின்றி வேறு யாரிடம் நாம் எதிர்பார்க்க முடியும்?

25-3-1969 **கா. அப்பாத்துரை**

# பொருளடக்கம்


1. பெயர்ச் சிறப்பு ........ 9
2. இனிமைச் சிறப்பு ........ 12
3. எளிமைச் சிறப்பு ........ 15
4. தனிமைச் சிறப்பு ........ 18
5. தொன்மைச் சிறப்பு ........ 26
6. சூழிச் சிறப்பு ........ 32
7. எழுத்துச் சிறப்பு ........ 36
8. சொற் சிறப்பு ........ 42
9. ஒலிச் சிறப்பு ........ 48
10. கவிதைச் சிறப்பு ........ 53
11. கலைச் சிறப்பு ........ 59
12. மருத்துவச் சிறப்பு ........ 71
13. இசைச் சிறப்பு ........ 79
14. நாடகச் சிறப்பு ........ 92
15. இலக்கியச் சிறப்பு ........ 108
16. இலக்கணச் சிறப்பு ........ 126

# 1. பெயர்ச் சிறப்பு

நமது தாய்மொழியின் பெயர் ''தமிழ்'' என்பது. தமிழை ''உயர்தனிச் செம்மொழி'' என்பர் அறிஞர். தமிழ் உயர்ந்த மொழி, தனித்த மொழி, செம்மையான மொழி என்பது இதன் பொருள்.

''தமிழ்'' என்பதற்கு ''அழகு'' எனவும் பொருள் உண்டு. இவ்வுண்மையைத் ''தமிழ் தழுவிய சாயல்'' என்பதால் நன்கறியலாம்.

தமிழுக்கு ''இனிமை'' எனவும் பொருள் உண்டு. இதை தேன்தமிழ், தீந்தமிழ் என்ற அடைமொழிகளே மெய்ப்பிக்கும்.

தமிழ் என்பதை தம்-இழ் எனப் பிரித்து, தம்மிடத்தில் ''ழ்''ழை உடையது தமிழ் எனப் பொருள் கூறுவதும் உண்டு.

தமிழுக்கு இனம் மூன்று. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவை. நமது மொழிக்குப் பெயர் வைக்க எண்ணிய தமிழ்ச் சான்றோர்கள், அக் காலத்திலேயே இனத்திற்கு ஒரு எழுத்தாக எடுத்து மூன்று இனங்களுக்கும் ''பிரதிநிதித்துவம்'' வழங்கிப் பெயர் வைத்திருப்பது எண்ணி எண்ணி மகிழ்வதற் குரியது. த-வ்ல்லினம், மி-மெல்லினம், ழ்-இடையினம்.

தமிழுக்கு ''முத்தமிழ்'' எனவும் பெயர் உண்டு. இது இயல், இசை, நாடகம் என்றாகும். இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்கும். இசைத் தமிழ் உள்ளத்தை உருக்கி ஒரு முடிவுக்கு வரச்செய்யும். நாடகத்தமிழ் நடந்து காட்டி மக்களை நல்வழிப்படுத்தும்.

எண்ணமும், துணிவுமின்றி எச்செயலும் நடைபெறாது. இது உளநூற் புலவர்களின் கருத்து. இதை நமது முன்னோர்கள் அன்றே அறிந்து பெயரிட்டிருப்பது அவர்களின் அறிவாற்றலை விளக்குகிறது.

சைவ சமய ஆச்சாரியராகிய ஞானசம்பந்தரை, நாம் ''திரு'' என்ற அடைமொழி சேர்த்து திருஞானசம்பந்தர் எனக் குறிப்பிடுகிறோம். ஆனால், அவரோ, தம் பெயருக்கு முன் ''தமிழ்'' என்பதையே அடைமொழியாகக் கொடுத்துத் ''தமிழ் ஞானசம்பந்தன்'' எனக் குறிப்பிட்டுக் கொண்டார். இது நமக்குத் தமிழையும் சம்பந்தரையும் ஒன்றாகக் காட்டுகிறது.

வைணவ சமய ஆச்சாரியராகிய ஆழ்வார்கள் பலரும் தமிழைத் ''தமிழ்'' எனக் கூறாது. பல்வேறு அடைமொழிகளிட்டு 'விட்டுசித்தன் விரித்த தமிழ், தேனாரின் செய்தமிழ், சொல்லில் பொலிந்த தமிழ், சீர்மலி செந்தமிழ், திருவரங்கத் தமிழ், கோதைவாய்த் தமிழ், நடைவிளங்கு தமிழ், நல்லியல் இன்தமிழ், சங்கத் தமிழ், சங்க முகத் தமிழ், சங்கமலி தமிழ், நா மருவு தமிழ், பாவளருந் தமிழ், இன்தமிழ், வியன்தமிழ், தூயதமிழ், நற்றமிழ், நல்லிசைத் தமிழ், ஒண்தமிழ், தண்தமிழ், வண்தமிழ், இருந்தமிழ்'' எனப் பலவாறாகப் போற்றியிருக்கின்றனர். இவை அனைத்தும் தமிழின் பெயரைச் சிறப்பிப்பன வாகும்.

நமது நாட்டிற்குச் ''செந்தமிழ் நாடு'' என்ற பெயர் வைத்தவர் தேசியகவி சுப்பிரமணி பாரதியார். இதில் நாட்டிற்கு அடைமொழியாக நமது மொழியும், மொழிக்கு அடைமொழியாகச் ''செம்மை''யும் அமைந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியதாகும்.

''தமிழுக்கு அமுதென்று பேர்.'' தமிழ், தமிழ் எனக் கூற அது அமிழ்து என ஒலிக்கும் எனக் கூறி மகிழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை. ''தமிழுக்கு அமுதென்று பேர்; அது எங்கள் உயிருக்கு நேர்'' எனவும் கூறி, உயிருக்கு ஒப்பாகத் தமிழைக் கூறி உயிர்விட்ட கவிஞர் அவர்.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழின் பெயர்ச் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

# 2. இனிமைச் சிறப்பு

''தமிழ்'' என்பதற்கு ''இனிமை'' என்றும் ஒரு பொருளுண்டு. இதனை ''இனிமையும் அழகும் தமிழ் எனல் ஆகும்'' என்பதனால் நன்கறியலாம். மேலே காட்டிய தீந்தமிழ், தேந்தமிழ் போன்ற அடைமொழிச் சொற்களும் இதனை மெய்ப்பிக்கும்.

''பசி இல்லாவிடில் இந்தப் பாலையாவது குடியுங்கள்'' என்ற தன் மனைவியை நோக்கிப் புலவர் ஒட்டக் கூத்தர் கூறியது இது:

''போடி பைத்தியக்காரி! இன்று அரசவையில் புகழேந்தி அரங்கேற்றிய நளவெண்பாவில் இரண்டொன்றைப் பிழிந்து கொடுத்தாலாவது அதன் சுவைக்காக உண்ணலாம். உன் பாலில் என்னடி சுவையாயிருக்கப் போகிறது?''

என்னே தமிழின் சுவை!

''அறம் வைத்துப் பாடியுள்ள இக் கலம்பகத்தைக் கேளாதீர்கள். கேட்டால் தங்களின் உயிரே போய்விடும்'' எனப் பாடிய புலவனே கூறித் தடுத்தபோதும், அதனைக் கேட்க விரும்பிய நந்திவர்ம மன்னன் கூறியது என்ன தெரியுமா?

''தமிழைச் சுவைப்பதன் மூலம் சாவே வரினும் அதனை மகிழ்வோடு வரவேற்பன்'' என்பதே.

என்னே தமிழின் இனிமை!

தன்னைப் ''பித்தன்'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் வைதபொழுது, இறைவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாராம். காரணம், ''தமிழால் வைதான்'' என்பதே. இதனாலேயே இறைவனுக்குத் ''தமிழால் வைதாரையும் வாழவைப்போன்'' என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது.

புதிதாக இல்லறத்தில் வலக்காலை எடுத்து வைக்கும் மணமக்களை நோக்கி, ''தமிழும், அதன் இனிமையும் போல ஒன்றுபட்டு வாழுங்கள்'' என்று நல்லறிஞர்கள் வாழ்த்துக் கூறி வருவது தமிழகத்தின் வழக்கமாக இருந்து வருகிறது.

நன்றி என்பதைக் குறிக்கும் ''தாங்க்ஸ்'' என்ற ஆங்கிலச் சொல்லும், நல்லது என்பதை குறிக்கும் ''அச்சா'' என்ற இந்திச் சொல்லும், அதன் வலிய ஒலியால் அச்சுறுத்துவது போலத் தோன்றும். தமிழில் நன்றி; வணக்கம் என்பது மட்டுமல்ல, ''இது மக்கள் தன்மைக்கு ஒவ்வாதது'' என்று வைவதுகூட அதன் மெல்லோசையால் வாழ்த்துவது போலத் தோன்றும். இது நமது மொழியில் இயல்பாகவே அமைந்துள்ள ஒன்று, என்னே தமிழின் இனிமை!

கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டு வரும்படி சொல்லியிருந்தேன். அவன் அன்று வராமல் மறுநாள் வந்து வெறுங்கையோடு நின்றதால் சிறிது கோபித்தேன். அவன் பேசினான்.

''நேற்றே மலைக்கு நடந்தேன். பலவிடங்களில் அலைந்தேன். இறுதியில் பெரும் பாறைத்தேன் கண்டு சிறிது மலைத்தேன். ஒரு கொடியைப் பிடித்தேன். ஏறிச் சென்று கலைத்தேன். சட்டியில்

பிழிந்தேன். நன்றாக வடித்தேன். அதனைக் கண்டு மகிழ்தேன். அதில் சிறிது குடித்தேன். களித்தேன். களைத்தேன். அயர்ந்தேன். மறந்தேன். இன்று காலை எழுந்தேன். நினைத்தேன். தேனை அடைத்தேன். எடுத்தேன். விரைந்தேன். நடந்தேன். வந்தேன். சேர்ந்தேன். இப்போதுதான் உங்கள் ஆளிடம் கொடுத்தேன்'' என்று.

நானும் இதைக் கேட்டு மகிழ்தேன். அவனுக்கு உரியதையும் தந்தேன் அடடா! எப்படி தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே? இதைப் பார்த்தேன், குடித்தேன் என்று கூறாமல் ''படித்தேன்'' எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படி 'தேன்' என ருசிக்கும். என்னே தமிழின் இனிமை!

# 3. எளிமைச் சிறப்பு

தமிழ்மொழியானது எழுதவும், படிக்கவும், பேசவும் மிகவும் எளிதானது. இதனாலேயே தமிழ் இனிய தமிழ் என்பதோடு, எளிய தமிழ் எனவும் கூறப் பெறுகிறது. இச் சிறப்பைப் பிற மொழிகளிற் காண இயலாது.

சீன சப்பானிய மொழிகளின் எழுத்துக்களைப் போல் மேலிருந்து கீழ்நோக்கி எழுதுகின்ற, அல்லது உருது மொழி எழுத்துக்களைப் போல வலப்புறமிருந்து இடப்புறம் நோக்கி எழுதுகின்ற கடினமான முறை தமிழுக்கு இல்லை. இடப்புறமிருந்து வலப்புறம் நோக்கி எளிதாக எழுதலாம்.

சில மொழிகளின், எழுத்துக்கள், எழுதுகோலைப் பல முறை எடுத்து, மேலும், கீழும், பக்கவாட்டிலும் சில புள்ளிகளையும் குறிகளையும் இட்டு எழுதியாக வேண்டும். தமிழ் எழுத்துக்களோ எனில், எழுத்தாணியையோ, எழுத்துக்கோலையோ எடுக்காமலேயே தொடர்ந்து எளிதாக எழுதிக் கொண்டே செல்லலாம். சில மொழி எழுத்துக்கள் ஒரு எழுத்தை எழுதவே பலமுறை எழுதுகோலை எடுத்தெடுத்துக் குறிகளிட்டு எழுதக் கூடியவை. இத் தொல்லை தமிழ் எழுத்துக்களுக்கு இல்லை.

தமிழ் எழுத்துக்களே மொத்தம் 31 தான். அவை அ, ஆ, இ, ஈ முதலிய உயிரெழுத்து 13ம்; க்,ங்,ச்,ஞ், முதலிய மெய்யெழுத்து 18ம் ஆகும். இந்த 31 எழுத்துக்களையும் தெரிந்து கொள்ளச் சில நாட்களே போதுமானவை, உயிரெழுத்தும், மெய்யெழுத்தும்

சேர்ந்தகூட்டு எழுத்துக்கள் 216. ''க் உ.கு'' ''ப்.அ.ப'' ''ம்.இ மி'' என்பனவே இவை. இவற்றுள் எந்த எழுத்தை எழுத வேண்டுமானாலும் ஆங்கிலத்தில் இரண்டிரண்ட எழுத்துக்களை எழுதியாக வேண்டும். க, கி, கு என எழுதவேண்டுமானால், ஆங்கிலத்தில் Ka,Ki,Ku, என ஆறு எழுத்துக்களளை எழுதியாக வேண்டும். ''தடி'' என எழுத வேண்டுமானால் தமிழில் இரண்டு எழுத்தே. ஆனால் ஆங்கிலத்தில் இதை, THADI என ஐந்து எழுத்துக்களில் தான் எழுத முடியும். ஆகவே, தமிழ் எழுத மிகவும் எளிது.

தமிழ் மொழியானது எழுத மட்டுமல்ல, படிக்கவும் எளிது. தமிழில் ஒரு எழுத்துக்கும் ஒரே ஒலியானதால் எவரும் எதையும் படிக்க முடிகிறது.

உயிரெழுத்து, மெய்யெழுத்து, கூட்டெழுத்து ஆகிய அனைத்தும் சேர்ந்து மொத்தம் 247 எழுத்துக்களே. இவைகளை அறியப் பெரியவர்களுக்குச் சில வாரங்களும், சிறியவர்களுக்குச் சில மாதங்களும் போதுமானது. பின் எடுத்த நூல்களையெல்லாம் படிக்கலாம். ஆகவே, தமிழ் படிக்கவும் எளிதானது.

தமிழ்மொழி பேசவும் எளிது. தமிழ்ச் சொற்களில் 100 சொற்கள் எடுத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு சொல்லாக ஒலித்துப் பாருங்கள். அவை ஒவ்வொன்றும் மேல் உதடு, கீழ் உதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனிநாக்கு, அடிநாக்கு, நடுநாக்கு, அண்ணாக்கு, உண்ணாக்குக் கொண்டே ஒலிப்பதாக இருக்கும். தொண்டைக்குக்கீழே வேலையேயிராது. பிறமொழிச் சொற்கள் சிலவற்றிற்கு 100-க்கு 30-40 வீதமும் சிலவற்றிற்கு 60-70

வீதமும் தொண்டைக்குக் கீழேயிருந்து வலிந்து ஒலித்தாக வேண்டும். அவை ''பஹறுத் அச்சாஹ்'' போன்றவை.

வடமொழிச் சொற்களில் பெரும்பான்மையானவை. அடிவயிற்றின் துணையின்றி ஒலிக்க முடியாதவை. இவ்வாறு வலிந்து ஒலிப்பதால் நாவும் உலர்ந்து, தொண்டையும் வறண்டு குடலும் காய்ந்து விடுகிறது. இவ்வுண்மையை வடமொழி அறிஞர்கள் ''கதா காலட்சேபம்'' செய்யும் பொழுது பசும்பாலை அடிக்கடி குடித்துக் குடலை நனைத்துக் கொண்டே பேசுவதிலிருந்தும், தமிழறிஞர்கள் பச்சைத் தண்ணீரும் அருந்தாமல் பல மணிநேரம் பேசுவதிலிருந்தும் கூட நன்கறியலாம்.

ஆகவே, இதுகாறும் கூறியவற்றால், தமிழ்மொழியானது எழுதவும், படிக்கவும், பேசவும் கூட மிகவும் எளிமையானது என நன்கறியலாம்.

# 4. தனிமைச் சிறப்பு

தமிழ்மொழி ஒரு தனி மொழி, தனித்துத் தோன்றித் தனித்து இயங்கும் மொழி. அதற்கு எந்த மொழியின் துணையும் அன்றும் தேவைப்பட்டதில்லை; இன்றும் தேவைப்படுவதில்லை.

இந்தியாவில் இன்று பேசப்பெற்று வரும் மொழிகள் அனைத்தும் இரண்டே இனங்களில் அடங்கிவிடும். ஒன்று ஆரியம்; மற்றொன்று தமிழ். தமிழுக்குத் திசை தெற்கு; மலை பொதிகை; நாகரிகம் காவிரி. ஆரியத்திற்குத் திசை வடக்கு; மலை இமயம்; நாகரிகம் கங்கை.

தமிழ்நாடு தமிழர் பிறந்து, வளர்ந்து ஆட்சி செய்து வாழ்கின்ற நாடு. எனினும் ஒருகாலத்தில் அவர்களின் ஆட்சி இமயம்வரை பரவியிருந்தது. தமிழ் மன்னன் ஒருவனுக்கு ''இமய வரம்பன்'' எனப் பெயர். இமயத்தில் கொடி கட்டி வாழ்ந்த தமிழ் மன்னர்களும் பலர்.

ஆசியர் மத்திய ஆசியாவிலிருந்து இந்நாட்டில் குடியேறியவர் ஆரிய மொழி இந்நாட்டில் குடியேறிய மொழி, ''சதுர் மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினது' எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்த்தாயை நினைந்து, வியந்து பாராட்டியுள்ள சொற்களும் இதனை மெய்ப்பிக்கும்.

பிற்காலத்தே தோன்றிய சமயாச்சாரியார்கள் பலர் இவை இரண்டையும் ஒன்றாக்க முயன்றனர். இறைவனைக் கூட

''ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்'' எனக் கூறியிருக்கின்றனர்.

வடக்கே ஆரியம் அங்கிருந்த பல மொழிகளிலும் பரவியது. சிலவற்றை விழுங்கியது. சிலவற்றை உருமாற்றிப் புதியமொழியாக உண்டு பண்ணியது. சிலவற்றைத் தன்னோடு இரண்டறக் கலக்கச் செய்துவிட்டது அத்தகைய மொழிகள் பலவற்றை இன்று வடக்கே காணலாம். ஆனால் தெற்கே தமிழ் மொழி சில மொழிகளைப் பெற்றது. அவை கன்னடம்,தெலுங்கு,மலையாளம்,துளு முதலியன. ''கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதிரத்து உதித்து எழுந்து ஒன்று பலவாயின'' என்ற சுந்தரம் பிள்ளை அவர்களின் தமிழ்தாய் வாழ்த்திலிருந்தும் இவ்வுண்மையை நன்குணரலாம்.

இம் மொழிகள்கூட மக்களின் விழிப்புக் குறைவினால், தமிழைவிட்டுச் சிறிது விலகி வடமொழியைச் சார்ந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு வரைகூட, இம் மொழிகளில் நூற்றுக்கு எழுபது, எண்பது தமிழ்ச் சொற்கள் காணப்பட்டன. வர வர 60,50,40 ஆகக் குறைந்துவந்து, இப்போது நூற்றுக்கு 40 தமிழ்ச் சொற்கள் மட்டுமே காணப்படுகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் இம் மொழிகள் ஆரியத்தால் விழுங்கப்பட்டு விடும் நிலையிலிருந்து வருகின்றன. மொழி அறிவும், வரலாற்று உண்மையும் அறியாத சிலர், ''இம் மொழிகள் ஆரியத்திலிருந்தே வந்தன'' என்றும் கூறிக்கொண்டிருக்கின்றனர். அந்த அளவுக்கு அம் மொழிகள் அழிந்து கொண்டிருக்கின்றன.

ஒரு மொழியின் தாய்மொழி எது? என்பதை எவரும் எளிதில் அறியமுடியும். அதற்குத் துணைபுரிபவை மூன்று:

1. அம் மொழியின் உயிர் எழுத்துக்கள்

2. எண்ணுகிற எண்கள்

3. மக்கள் உறுப்புகளின் பெயர்கள்

இம் மூன்றையும் ஆராயத் தொடங்கினால் உண்மை தானாகவே வெளிப்பட்டுவிடும். எடுத்துக்காட்டாக முதலில் மலையாள மொழியை ஆராய்வோம். அதன் உயிர் எழுத்துக்கள் அ முதல் ஔ -வரை; அனைத்தும் தமிழ் எழுத்துக்களே. ஒன்று,இரண்டு, பத்து, நூறு என எண்ணும் எண்கள் அனைத்தும் தமிழ் எண்களே. மக்கள் உறுப்புகளில் தலை, நெற்றி, மயிர், கண், மூக்கு, காது, வாய், நாக்கு, பல், உதடு, தொண்டை, கழுத்து, கை, நெஞ்சு, வயிறு, தொடை, கால், விரல், நகம் முதல் தோல் எலும்புவரை யாவும் தமிழ்ப் பெயர்களே. இன்னும் பார்க்க வேண்டுமானால், மலையாள மொழியில் வலிந்து ஏறிக்கொண்டிருக்கிற வடசொற்கள் சிலவற்றை நீக்கிவிட்டால், மீதியுள்ள அனைத்தும் தமிழ்ச் சொற்களாகவே காட்சியளிப்பதைக் காணலாம். கன்னடம், தெலுங்கு, துளு முதலியனவும் இப்படியே. ஆகவே, இம் மொழிகள் வடமொழியிலிருந்து தோன்றியவை எனக் கூறுவது சிறிதும் பொருந்தாததாகும்.

பிறமொழிகளின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பிய ஆரியர் அம் மொழிகளில் தங்களின் சொற்களைத் திணித்தனர். அதற்கு முன்னோடியாக அவர்களின் ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்ற வடமொழி எழுத்துக்கள் ஐந்தையும் முதலில் திணித்தனர்; வெற்றிபெற்றனர்.

தமிழிலும் திணித்துப் பார்த்தனர். பாவம், முடியவில்லை. அவர்கள் கண்டது தோல்வியே.

கடந்த நூற்றாண்டில் அவர்கள் தமிழை விழுங்கிவெற்றி பெற்றுவிடுவோம் என்றுகூட நம்பினர். ''பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால்தான், பிறமொழி எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களோடு சேர்ந்தால்தான், தமிழ்மொழி வளரும்.'' என்ற பொய்யான கூற்றை நமது முன்னோர்களில் சிலரும் நம்பிவிட்டதும், அவர்களுக்கு மகிழ்வைத் தந்தது. ஆங்கிலேயர் காலத்தில் பதவியில் இருந்தவர்களில் பெரும்பான்மையோர் அவர்களே ஆதலின் ''மென், உமன்'' என்பதைகூட ''ஆண், பெண்'' என எழுத விரும்பாமல், ''புருஷர்கள், ஸ்திரிகள்'' என்றே எழுதி, தமிழ்ச் சொற்களை அழிக்க முனைந்தனர் என்றாலும், தமிழறிஞர்கள் பலர் இவற்றைத் துணிந்து எதிர்த்தால் அவர்களின் எண்ணம் அடியோடு வீணாயிற்று.

இத்துறையில் எவர் துணையுமின்றித் தனித்துநின்று தமிழ் மக்களுக்கு ஒரு புதுவழி காட்டி வெற்றிபெற்றவர் மறைமலை அடிகளே யாவர். இன்றேல், தமிழும் பிறமொழிகளைப் போல் ஆரியத்தோடு இரண்டறக் கலந்து அழிந்துபோயிருக்கும். ''தனித்தமிழ் நடை'' என்பது அவர் திருப்பிவிட்ட ஒரு பெருந் திருப்பம். அந் நடை ''மறைமலையடிகள் நடை'' என்ற பெயரையும் பெற்று விட்டது. தமிழ் உள்ளவரை மறைமலையடிகளின் பெயரும் இருந்தே தீரும்.

சில ஆண்டுகளுக்கு முன்வரைகூட திருமண அழைப்புகளில் விவாகம், முகூர்த்தம், பத்திரிகை, வருஷம், மாஸம், தேதி, சிரஞ்சீவி, சௌபாக்யவதி, நிச்சயம், இஷ்ட, மித்திர, பந்து, ஜன,

ஸமேதராக, விஜயம் செய்து, வதூவரர்கள், ஆசிர்வதிக்க, பிரார்த்திக்கிறேன் என்ற சொற்கள் காணப்பெற்றன. இப்பொழுது இச் சொற்கள் அனைத்தும் விலக்கப்பெற்று தனித்தமிழ்ச் சொற்களாகிய திருமணம், அழைப்பு, ஆண்டு, திங்கள், நாள், திருவாளன், திருச்செல்வி, உறுதி, உற்றார் உறவினர், வந்திருந்து, மண மக்களை வாழ்த்தி, அருள வேண்டுகிறேன் என்பவை காணப்பெறுகின்றன.

தலைவர், சொற்பொழிவாளர், செயலாளர், பொருளாளர், நன்றிகூறல் என்பவைகளையெல்லாம் வடமொழியினர் அக்கிராசனாதிபதி, பிரசங்கியார், காரியதரிசி, பொக்கிஷதார், வந்தனோபசாரம் என்றெல்லாம் மாற்றிக் கூறி, அதைக் தமிழ் எனவும் கூறி ஏமாற்றிக் திணிக்கப் பார்த்தனர். இக் காலத் தமிழ்மக்களின் விழிப்புணர்ச்சி அதைத் தவிடு பொடியாக்கிவிட்டது.

தமிழ் எழுத்தாளர், மறுமலர்ச்சி எழுத்தாளர் என்ற போர்வைகளைப் போர்த்துக்கொண்டு, சில தமிழ்ப் பகைவர்கள், ''மன்னன் தன் தோள்களில் மலர்மாலை அணிந்து பல்லக்கு ஏறி ஊர்வலம் வந்தான்'' என்ற சொற்றொடரை ''ராஜன் தன் புஜங்களில் புஷ்பஹாரங்களைச் சூடிக்கொண்டு ரதம் ஏறிப் பவனி வந்தான்'' என்று கூட உளறி, தமிழ்ப் புலவர்களின் எதிர்ப்பை மட்டுமல்ல. பொது மக்களின் எதிர்ப்பையும் பெற்று அழிந்து ஒழிந்து போயினர். இவை அனைத்தும் தமிழோடு ஆரியம் புரண்ட கதை.

1938இல் சென்னைக் கடற்கரையில் இரு கல்லூரி மாணவர்கள் எனக்கருகில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். ''ஏன்

தம்பி, சென்ற வாரம் கடற்கரைக்கு வரவில்லை?'' என்று ஒருவன் மற்றொருவனைக் கேட்டான். ஆனால், அவன் கேட்டது, ''ஏன் பிரதர் லாஸ்ட் வீக் பீச்சுக்கு வரவில்லை?'' என்றுதான் அதற்கு மற்றவன் ''வரலாமென்றுதான் புறப்பேட்டேன். தாயாரும் வருவதாகப் புறப்பட்டார்கள். அதனால் நின்றுவிட்டேன்'' எனக் கூறினான். ஆனால், அதை, ''வரலாமென்றுதான் ஸ்டார்ட் பண்ணினேன். மதரும் பாலோ பண்ணினாள். பீமல்ஸ்களை அழைத்து வர்ரது நான்சென்ஸ் என்று ஸ்டாப் பண்ணிட்டேன் பிரதர்'' என்றே கூறினான். இதுவா தமிழ்? இது ஆங்கிலம் தமிழோடு கட்டிப் புரண்ட கதை!

''அரெ அத்தா மாடமே. மூணுகாசு ரத்தாய் நீ எடுத்துக்கிட்டு பகட்கோ துகான்கு ஜாகோ. எக்காஸ்கு உப்புபீ. எக்காஸ்கு பளிபீ. எக்காஸ்கு மிளகுபீ, வாங்கிக் கிட்டு பகடுகோ ஜல்தி ஓடிவா!'' என்று சிலர் பேசுகிறார்கள். இது இந்துஸ்தானியும் தமிழும் கட்டிப் புரண்ட கதை!

தமிழுக்கு உள்ள தனித்தன்மைபோல வடமொழிக்கும் ஒரு தனித்தன்மையுண்டு ''ஓம் கதலி பலம் சமர்ப்பியாமி! தாம்பூலம் சமர்ப்பியாமி! நாரி கேளம் சமர்ப்பியாமி! கந்தம் சமர்ப்பியாமி!'' என அர்ச்சிக்கும் பொழுது, அம் மொழியின் தனித்தன்மையில் ஓர் அழகும் அதன் ஓசையில் ஓர் இனிமையும் காணப்படுகிறது. அதை விட்டு, ''ஓம் பிளாண்டைன் புரூட் சமர்ப்பியாமி! பெட்டல் அண்ட் நட சமர்ப்பியர்மி! கோகனட் சமர்ப்பியாமி! சாண்டல் சமர்ப்பியாமி!'' எனக் கூறினால் ஆங்கிலத்திற்குத்தான் என்ன பெருமை? என்பதைச் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

''பிறமொழிச் சொற்களைக் கலந்தால்தான் தமிழ் வளரும்'' என்பது உண்மைக்கு மாறானது. ''கற்களைக் கலந்தால்தான் அரிசி வளரும்'' என்பதைப் போன்றது. தமிழ் வளரவேண்டிய நிலையில் இல்லை. அப்படியே வளர்க்க வேண்டுமானாலும் அதற்கு இவர்கள் தேவையே இல்லை. ஏனெனில் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி இன்னும் இளமை குன்றாமலிருந்து, எழுத்துலகிலும், பேச்சுலகிலும், இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கிவருகின்ற மொழி.

எந்த ஒரு மொழியாவது இன்று வளர்க்கவேண்டிய நிலையில் உள்ளதா? என்றால், அதற்கு சமற்கிருதம் என்றே விடைவரும். அதுதான் இன்று பேச முடியாமலும் உலக வழக்கு அழிந்தும். எழுத்தோடு நிற்கும் மொழி, அது மீண்டும் உயிர்பெற்றுப் பேச்சு வழக்கிலும் வர வேண்டுமானால், அதை வளர்த்துத்தான் ஆகவேண்டும். அதற்குப் பிறமொழிச் சொற்களும், வேற்றுமை உருபுகளும், எழுத்துகளும், ஒலிகளும் கட்டாயம் தேவைப்படும். அதையும், அம் மொழியினர் வேண்டுமானால், விரும்பினால் சேர்த்துக்கொள்ள முயலலாம். அதுவும் அவர்கள் விரும்பினால் தான். அவர்களைக் கட்டாயப்படுத்த எவருக்கும் உரிமையில்லை.

தமிழின் சிறப்பைக் கெடுக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொண்ட தமிழ்ப் பகைவர்கள் சிலர், ''தனித் தமிழ்ச் சொற்கள் சிலருக்குப் புரியவில்லை. ஆதலால் புரியும் தமிழில் எழுதுகிறேன்'' என்க் கூறிப் பிறமொழிச் சொற்களை வேண்டுமென்றே புகுத்தித் தமிழை அழித்து வருகின்றனர்.

புரியும் மொழி, புரியா மொழி என எந்த மொழியிலும் இல்லை. ஒரு மொழி புரியவில்லை என்றால், அவன் அந்த மொழியைப்

படிக்கவில்லை என்பது பொருள், தமிழ் தெரியவில்லை, புரியவில்லை என்றால் தமிழைப் படி. அதைவிட்டு நீயும் தமிழைப் படிக்காமல், தமிழ் அறியாதவனுக்குப் புரியும்படி எழுதுகிறேன் என்றால் அது எப்படி நியாயமாகும்? அப்படி எழுதினாலும் அது ஒரு புதுமொழியாக இருக்குமே யன்றி எப்படித் தமிழ் மொழியாக விருக்கும்? இக் கூற்று நல்லறிஞர்களால் நகைத்து ஒதுக்கத் தக்கதாகும்.

அட்காக் கமிட்டி, லோக்சபா, ஜனாதிபதி, மஜ்தூர், ஆகாசவாணி எல்லாம் புரியும்போது, தமிழனுக்குத் தமிழ் புரியாது எனக் கூறுவது வெட்கக்கேடானது. ஆங்கிலச் சொற்களையும், வடமொழிச் சொற்களையும் நன்கு உச்சரிக்கும் தமிழனுக்குத் 'தமிழ் உச்சரிக்க வராது' எனக் கூறுவது மானக்கேடாகும்.

தமிழ் சொல்வளம் மிகுந்த மொழி. புதிதாகச் சொல்லை உருவாக்கவும் ஏற்ற மொழி. இரயில் சைக்கிள் என்பன நம் நாட்டுப் பொருள்களல்ல. அதற்குத் தமிழில் புகைவண்டி, மிதிவண்டி என மிக எளிதாகப் பெயரிட்டு விட்டனர். ''அண்டர் கிரவுண்டு டிரையினேஜ்'' என்பதற்கு என்ன பெயரிடலாம் என எண்ணிக் கொண்டிருந்தேன். தமிழும் ஆங்கிலமும் அறியாத கொல்லி மலையிலிருந்து வந்த பட்டிக்காட்டு நண்பர் ஒருவர், நகரில் பல இடங்களில் குழிவெட்டியிருப்பதைப் பார்த்து, ''இங்கு என்ன, புதை சாக்கடை போடுகிறார்களா?'' எனக் கேட்டதும் வியந்து போனேன். எத்தனையோ கலைச்சொற்களை உருவாக்கலாம். உருவாக்க முடியும். அதற்கு எந்த மொழியின் துணையும் தேவையில்லை. இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் தனித்து இயங்கிவரும் ஓர் உயர்தனிச் செம்மொழி என நன்கறியலாம்.

# 5. தொன்மைச் சிறப்பு

*தொன்று நிகழ்ந்த தனைத்தும்*
*அறிந்துள தொல்புவி வாணர்களும் - இவள்*
*என்று பிறந்தவள்? என்றறியாத*
*இயல்பினள் எந் தமிழ்த்தாய்!*

*- தொன்மைச் சிறப்பு - பாரதி பாடல்.*

உலகில் முதல் முதல் மக்கள் தோன்றிய நாடு தமிழகமும், அதனையடுத்திருந்த கடல்கொண்ட தென்னாடுமே என நில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் நிலைத்து நின்று வாழும் தமிழ் மக்களைப் ''பதியெழு அறியாப் பழங்குடியினர்'' என இளங்கோவடிகள் கூறுகிறார். இதற்கு உரை கூறவந்த அடியார்க்கு நல்லார், ''படைப்புக் காலந்தொட்டே வாழுங் குடியினர்'' எனக் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் தோன்றிய காலத்தைக் குறிப்பிடும் பொழுது, ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர்'' என ஆசிரியர் பரிமேலழகர் கூறுகிறார். இது கற்பாறைகள் தோன்றிய காலத்திற்குப் பின்னும். அது மழை பெய்து பெய்து கரைந்து மணலாகத் தோன்றிய காலத்திற்கு முன்னும் உள்ள காலத்தைக் குறிப்பிடுவதாகும். இத்தகைய மக்கள் பேசிய மொழியே தமிழ்.

தமிழ் மொழியின் காலத்தை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை. ஏனெனில், அது ஒரு காலங்கடந்த மொழி. அதற்கு வரலாறு இல்லை. எனவே அதன் தொன்மையை ஆராய்ந்து கூறுவதற்கில்லை. எனினும், காவியமும், ஓவியமும், காவிரியும், வையையும், கட்டடமும், சிற்பமும், கல்வெட்டும், புதைபொருள்களும் ஒருவாறு அதன் தொன்மையைக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

உலக மொழி ஆராய்ச்சியாளரிற் சிலர், ''தமிழ் மொழியே உலகின் முதல்மொழி'' எனக் கூறுவர். இன்னுஞ் சிலர் ''இலத்தீன், கிரீக் மொழிகளுக்கு முந்திய மொழி'' எனக் கூறுவர். வேறு சிலர், ''இலத்தீன், கிரேக்க சீன மொழிகளோடு ஒத்த மொழி'' எனக் கூறுவர். இம் மூன்றில் எது உண்மையாகயிருப்பினும், இது தமிழின் தொன்மைச் சிறப்பைக் காட்டுவதாகவே இருக்கும்.

முற்காலத்திய சீன யாத்திரிகர், திரு.யுவாங் சுவாங், பாகியான் முதல், பிற்காலத்திய ஜி.யு. போப், கால்டுவெல், வின்ஸ்லோ, டேய்லர் வரையுள்ள வேற்று நாட்டினர். வேற்று நிறத்தினர், வேற்று மதத்தினர், வேற்று மொழியினர் ஆகிய பலரால் தமிழின் பண்பட்ட தன்மை போற்றிப் பாராட்டப்பெற்ற ஒரு மொழி உலகின் பழைய மொழிகளில் எதுவுமேயில்லை.

''தொன்னூல் விளக்கம்'' என்னும் ஓர் அருமையான நூல் இன்னும் தமிழகத்தில் இருந்துவருகிறது. இதை எழுதியவர் இற்றைக்கு 260 ஆண்டுகளுக்கு முன்னே இத்தாலி நாட்டிலிருந்து இங்கு வந்த ''பெஸ்கி பாதிரியார்'' என்கிற திரு. வீரமா முனிவர். இந் நூலைப் படிப்பதன் மூலம் மிகத் தொன்மையான பழந்தமிழ் நூல்களின் தன்மையை ஒருவாறு அறியலாம்.

கடந்த உலகப் போரில் ''அபிசினியா'' என்ற நாடு வீழ்ச்சியடைந்தது. அப்பொழுது ''ஓராயிரம்'' ஆண்டுகள் ஒரே இனத்தவரால் தொடர்ந்து ஆண்டுவந்த உலகின் பழமையான ஒரே நாடு வீழ்ச்சியடைந்தது' என ஐரோப்பியப் பத்திரிகையாசிரியர் ஒருவர் தனது இதழில் எழுதியிருந்தார் பாவம்! அவர் அறிந்தது அவ்வளவுதான். ''ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் ஒரே இனத்தவரால் ஒரே மொழியில் தொடர்ந்து ஆளப்பெற்று வந்த நாடு தமிழ்நாடு'' என்பதை அறிந்திருந்தால், அவர் அவ்வாறு எழுதுவாரா?

1700 ஆண்டுகளுக்கு முன்பு சோழ மன்னர்கள் பலர் மலாயாவை, கெடாவை, சயாமைக் கைப்பற்றி ஆண்ட செய்திகளும், அவர்களில் முதலாம் குலோத்துங்கன் பர்மாவை ஆண்ட செய்தியும், சோழன் கரிகாலன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட செய்தியும், இலக்கியங்களாலும், வரலாற்றுகளாலும், கல் வெட்டுகளாலும் அறியப்பெறும் உண்மைகளாகும். இதனால், தமிழ் மொழியானது அக் காலத்திலேயே உள்நாட்டை ஆட்சி. புரிந்ததும், வெளிநாட்டை ஆட்சி புரியும் ஒரு வல்லரசின் ஆட்சிமொழியாகவும் இருந்திருக்கிறது எனத் தெரிய வருகிறது.

2300 ஆண்டுகளுக்கு முன் கிரேக்கர்கள் இந்தியாவைப் பற்றி எழுதியிருக்கும் குறிப்புகளில் பல தமிழ்ப் பெயர்கள் காணப் பெறுகின்றன.

2300 ஆண்டுகளுக்கு முன்னே சில பிராமியக் கல்வெட்டுகள் தமிழ்மொழியிலேயே எழுதப்பெற்றிருக்கின்றன.

2400 ஆண்டுகளுக்கு முன்புள்ள பாணினி காலத்திலேயே தமிழில் நற்றிணை என்னும் சிறந்த தமிழ் நூல் தோன்றியிருக்கிறது.

2600 ஆண்டுகளுக்கு முன்னுள்ள வான்மீகி காலத்திற்கு முன்பே தமிழில் அகமும் புறமும் தோன்றியிருந்திருக்கின்றன.

2800 ஆண்டுகளுக்கு முன்பு ரோமாபுரியை ஆண்ட ஏழாவது சாலமொன் காலத்திலேயே தமிழ் நாட்டிலிருந்து, தமிழ்நாட்டுக் கப்பல்களில், தமிழ் நாட்டுப் பண்டங்களை, தமிழ்நாட்டு வணிகர்கள், கிரேக்க நாட்டிற்குக் கொண்டுசென்று தமிழ் மொழியிலேயே விலைபேசி விற்று வந்திருக்கின்றனர். அப் பொருள்களுக்கு இன்றும் தமிழ்ச் சொற்களே வழங்கப் பெற்று வருகின்றன. அரிசி ''ரைஸ்'' எனவும் மயில்தோகை ''டோகை'' எனவும், சந்தனம் ''சான்டல்'' எனவும், தேக்கு ''டீக்கு'' எனவும், கட்டுமரம் ''கட்டமரான்'' எனவும், இஞ்சி ''ஜின்ஜர்'' எனவும் அணைக்கட்டு ''அனைக்கட்'' எனவும், ஓலை ''ஒல்லா'', எனவும். கயிறு ''காயர்'' எனவும், வெற்றிலை ''வெற்றல்'' எனவும், மாங்காய் ''மேங்கோ'' எனவும் ஆயின. காலப்போக்கில் இத் தமிழ்ச் சொற்கள் அவர்களின் சொற்களாக மாறி பிரஞ்ச், ஆங்கில அகராதிகளிலும் புகுந்து கொண்டுவிட்டன.

3000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள நூல்களில் இன்று நம்மிடையே சிறிதும் அழியாமல் முழுவதுமாகக் கிடைத்துள்ள நூல் ''தொல்காப்பியம்'' ஒன்றே அதற்கு முன்னும் பல இலக்கண நூல்கள் தோன்றியிருந்திருக்கின்றன. இவ் உண்மையை ''என்ப'', ''என்மனார் புலவர்'', ''யாப்பென மொழிப் யாப்பறி புலவர்'',

''தோலென மொழிப தொன்மொழிப் புலவர்'' எனத் தொல்காப்பியரே தமது நூலில் கூறியிருப்பதால் நன்கறியலாம்.

3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதியாக நம்பப் பெறுகிற நூல்களில் ''அகத்தியம்'' எனப்படும். தமிழ் இலக்கணநூல் ஒன்று. அதை 5000 ஆண்டுகளுக்கு முன்புள்ளது; 7000 ஆண்டுகளுக்கு முன்புள்ளது; 9000 ஆண்டுகளுக்கு முன்புள்ளது எனக் கூறுவாரும் உண்டு. ''அகத்தியத்''தைச் செய்தவர் அகத்தியர். இவர் தான் தமிழ் மொழியை உண்டுபண்ணியவர் எனவும், இவர் அகஸ்தியர் என்ற வடமொழி அறிஞர் எனவும் சிலர் கூறுவர். அவர் அறியாதவர். அக் கருத்து நல்லறிஞர்களால் கொள்ளப் பெற்றதன்று. 'தமிழ் என்றும் உள்ளது. அகத்தியர் அம் மொழியைப் படித்து, அறிந்து, புகன்று புகழடைந்தவர்'' எனக் கூறியாக வேண்டும். இவ் உண்மையை ''என்றும் உள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்'' என்ற அகத்தியரைப் பற்றிய கம்பரது வாக்கே மெய்ப்பிக்கும்.

தமிழ் மன்னர்களைத் தமிழ்ப் புலவர்கள் வாழ்த்தும் பொழுது, அவரவர் ஆற்று மணல்களின் எண்ணிக்கையை விட அதிகமான ஆண்டுகள் வாழவேண்டும் என வாழ்த்துக் கூறுவது ஒரு மரபு. அவ்வாறு சேரருக்குப் ''பொருநை''யும், சோழருக்குக் ''காவிரி''யும் போல, பாண்டியருக்கு ''வையை''யைக் கூறாமல் ''பஃறுளி மணலினும் பலவாய்ச் சிறக்கநின் ஆயுள்'' எனக் கடல் கோளுக்கு முன்னுள்ள குடும்பத்துப் பாண்டியரைப் புலவர் நச்செள்ளையார் வாழ்த்தியிருக்கிறார் (புறம் 9). இதிலிருந்து இப் புறப்பாடல் தோன்றும் பொழுது, பஃறுளியாறும், குமரி மலையும், கபாடபுரமும் கடலால் அழியவில்லையெனத் தெரிகிறது.

தமிழகத்தில் மூன்று கடற்கோள்கள் அடுத்தடுத்துத் தோன்றிக் கடல்நீர் நாட்டிற் புகுந்து நிலப்பரப்பை, மக்களை, தமிழ்ச் சுவடிகளை அழித்துவிட்டன என்றும், இது நடந்தகாலம் 3000-ம், 5000-ம், 9000-ம் ஆண்டுகளாயின எனவும் கூறப்படுகிறது. மேலைநாட்டினர் இதை மறுத்து இரண்டே கடற்கோள்கள்தான் எனவும், அவை 5000-ம் ஆண்டுகளுக்கு முன்பும், 2000-ஆண்டுகளுக்கு முன்பும் எனக் கூறுகின்றனர். இதைக் கொண்டு ஆராய்வோம், தமிழ் நூல்களின் அழிந்த காலத்தையே நம்மால் அறிய முடியாதபோது அது தோன்றிய காலத்தை எவ்வாறு அறிவது? அதற்கு முன்னே இலக்கணம் தோன்றிய காலம், அதற்கு முன்னே இலக்கியம் தோன்றிய காலம், அதற்கு முன்னே எழுத்து உரைநடை தோன்றிய காலம், அதற்கு முன்னே எழுத்து தோன்றிய காலம், அதற்கு முன்னே மொழி தோன்றி காலம், எப்போது? என்பது எவர் எவ்வாறு அறிந்து கூற இயலும்? ஏதேனும் கூறவேண்டுமானால், தமிழ்மொழி தோன்றிய காலத்தை அறிந்து கூறுவ்து மனித அறிவிற்கு அப்பாற்பட்ட ஒன்று என்றே கூறியாக வேண்டும். இது காறும் கூறியவற்றால் தமிழின் தொன்மையைச் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

# 6. சுழிச் சிறப்பு

தமிழில் யார், எதை எழுதினாலும் முதலில் ஒரு சுழியைச் (உ) சுழித்துவிட்டே எழுதத் தொடங்குவர். அச்சியற்றப் பெற்ற நூல்களிலும்கூட இச் சுழியைக் காணலாம். இம்மாதிரி ஒரு சுழி பிறமொழி எழுத்துக்களில் இல்லை. இதனைப் பிள்ளையார் சுழி எனக் கூறுவதுண்டு.

தமிழகத்தில் பிள்ளையார் வணக்கம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் வந்தது. அதற்கு முன் இங்கு இல்லை. சங்க கால நூல்கள் எதிலும் ''விநாயகர்'', ''விக்கினேஸ்வரர்'' என்ற வடமொழிப் பெயர்கள் இல்லாவிட்டாலும் ''பிள்ளையார்'' என்ற தமிழ்ப் பெயர்கூடக் காணப்படவில்லை. இப்போது இங்கு ஆராய வந்தது பிள்ளையார் வணக்கத்தைப் பற்றியல்ல; பிள்ளையார் சுழியைப் பற்றியே. கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னுள்ள சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும்கூட பிள்ளையார் சுழி காணப்பெறுகிறது. இச் சுழி தமிழ் எழுத்து தோன்றியபோதே தோன்றியது எனக் கூறுவாறுமுளர்.

''பின்னே வந்த பிள்ளையாரின் பெயர் முன்னே உள்ள எழுத்துக்கு எப்படி வந்தது?'' என்பதே இங்கு நாம் ஆராய வேண்டியது.

தமிழ் மக்களல்லாத பிறர் தங்கள் எழுத்துக்களைக் கற்களிலும், மரப்பட்டைகளிலும், பட்டுத்துணிகளிலும் எழுதி வந்தனர்.

இந்தியாவின் வடபகுதியிலும்கூட தாழை மடல்களிலும், தாமரை இலைகளிலும் எழுதி வந்துள்ளனர். காலப்போக்கில் அவை தேய்ந்தும், உளுத்தும், இற்றும், அழிந்தும் போயின. தமிழ் மக்களோ தங்களின் எழுத்துக்களைப் பனைமரத்தின் உச்சியிலேறிக் குருத்து ஓலைகளைக் கொண்டுவந்து, அதில் கொல்லுலைக் கூடத்தில் வடித்த ஆணிகளைக் கொண்டு எழுதி வந்தனர். எழுதுகிற ஆணி ''எழுத்தாணி'' ஆயிற்று. தமிழ் மக்கள் தேடிக் கண்டுபிடித்து எழுதிய ஓலைகள் ஈராயிரம் ஆண்டுகள் ஆகியும் நிலைத்து நிற்கின்றன. அதற்குமுன் நமது முன்னோர்கள் எதில் எழுதினார்களோ? அவைகள் எல்லாம் பயனற்றவை எனக் காண எத்தனை ஆயிரம் ஆண்டுகளாயினவோ? இறுதியில் ஓலையில் எழுதுவதே நல்லது எனக் கண்டுபிடிக்கவும், இனி ஓலையில்தான் அனைவரும் எழுதவேண்டும் என முடிவு கட்டவும், மக்களுக்கு அறிவிக்கவும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆயினவோ? யாரால்? எவ்விதம் காணமுடியும்? ஆனாலும், ஓலையில் எழுதும் பழக்கம் தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்கிறது என்பது மட்டும் நன்கு விளங்கியது.

ஓலையில் எழுதுவதும் ஒரு கலை அதில் எல்லோராலும் எழுத இயலாது. ஓலை காய்ந்திருந்தாலும் எழுத வராது; பச்சையாக இருந்தாலும் எழுத வராது; எழுத்தாணி கூர்மையாக இருந்தாலும் எழுத வராது; மொக்கையாக இருந்தாலும் எழுத வராது. ஆகவே ஓலையை எழுத எடுத்ததும் அதன் பதத்தைப் பார்க்க ஒரு சுழியையும் கோட்டையும் இழுத்துப் பார்ப்பதுண்டு. ஓலை காய்ந்திருந்தால் முறியும்; பச்சையாகவிருந்தால் சிக்கும். உடனே

அதைத் தூக்கியெறிந்துவிட்டு, மற்றொரு பதமான ஓலையை எடுத்து, அதிலும் ஒரு சுழியைச் சுழித்துப் பார்ப்பதுண்டு.

எழுத்தாணி மொக்கையாக இருந்தால் வளவள என ஓடும். எழுத வராது. உடனே தீட்டிக் கொள்ளவார்கள். கூர்மையாக இருந்தால் ஓலையைப் பொத்துவிடும். பலகையில் ஒரு குத்துக் குத்தி மொக்கையாக் ஆக்கிக் கொண்டு, மறுபடியும் ஓலையில் ஒரு சுழியைச் சுழித்து இழுத்துப் பார்ப்பார்கள். இந்த முதல் சுழிதான் இறுதியில் பிள்ளையார் சுழி என்று ஆகியிருக்க வேண்டும் எனத் தோன்றியது. என்றாலும், இது என் அறிவுப் பசிக்கு முழு உணவும் அளிக்கவில்லை.

தமிழ் எழுத்துக்களுக்கெல்லாம் உயிராக இருப்பது அதன் உயிர் எழத்துக்களே. அவ் உயிர் எழுத்துக்கள் அனைத்தும் சுழியையே அடிப்படையாகக் கொண்டவை. ''அ'' ஒரு சுழி. ''ஆ'' இரு சுழி. ''இ'' சிறு சுழி ஒன்று பெருஞ் சுழி ஒன்று. ''இ'' அல்லது ''ஈ'' சிறுசுழி. மறுபடியும் ஒரு சிறு சுழி. ''உ'' ஒரு சுழி. ''ஊ'' இரு சுழி. ''எ'' ஒரு சுழி. ''ஏ'' ஒரு சுழி. ''ஐ'' நான்கு சுழி. ''ஒ'' ஒரு சுழி. ''ஓ'' இரு சுழி. ''ஔ'' மூன்று சுழி. ''ஃ'' மூன்று சுழி. எனவே தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் சுழியையை அடிப்படையாகக் கொண்டவை எனவும், முதலில் சுழிக்கக் கற்றுக்கொண்டால்தான், தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் எளிதாக எழுதலாம் எனவும் தோன்றின.

ஆங்கில எழுத்துக்களை எழுதச் சுழிக்க வேண்டுமென்பதில்லை. தீக்குச்சிகளைக் கொண்டே அவ்வெழுத்துக்களை அமைத்துவிடலாம். இரண்டு தீக்குச்சிகளைக் கீழ் நோக்கி வைத்தால், A இப்படியே அவற்றை மேல் நோக்கி வைத்தால்

V மூன்று குச்சிகளை வைத்தால் N அவற்றையே மாற்றி வைத்தால் Z நான்கு குச்சிகளைக் கீழ் நோக்கி வைத்தால் M அவற்றை மேல் நோக்கி வைத்தால் W தமிழ் எழுத்துக்களை, அதிலும் உயிர் எழுத்துக்களில் ஒன்றையாவது, அவ்வாறு அமைக்க இயலாது.

ஆகவே, ''தம்பி, நீ தமிழ் எழுத்துக்களை எழுத வேண்டுமானால், முதலில் சுழிக்கக் கற்றுக்கொள். பிறகு யாவும் எளிதில் எழுத வந்துவிடும்'' என்றெண்ணியே, நமது முன்னோர்கள் முதலில் சுழி எழுத்தை வைத்து, சுழிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்ற உண்மை விளங்கிற்று. இது எனது அறிவுப்பசிக்கு முழு விருந்தளித்தது. என்னே நமது முன்னோர்களின் அறிவாற்றல்! இதுவே தமிழ் எழுத்துக்களிலுள்ள சுழிச் சிறப்பு!

# 7. எழுத்துச் சிறப்பு

## ''ழ''

பிற மொழி எழுத்துக்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு தமிழ் எழுத்துக்களுக்கு உண்டு. அவற்றில் ஒன்று ''ழ'' என்ற எழுத்து. ''ல'' ''ள' என்ற இரு எழுத்துக்களோடு ''ழ''வும் நின்று, தமிழ் எழுத்துக்களுக்கே ஒரு தனிச் சிறப்பை அளித்து வருகிறது.

ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்க, சீன, ஜப்பானிய, அரேபிய, உருது, வங்காள, குஜராத்திய, மராட்டிய, சமற்கிருதம் போன்ற பழைய மொழிகளிலும், நேற்று வந்த இந்தி மொழியிலும்கூட ''ழ'' என்று ஒலிப்பதற்குரிய எழுத்து இல்லை.

உலகில் எந்த மொழியிலும் இல்லாத ஒரு சிறப்பு எழுத்து தமிழ்மொழியில் மட்டுமே இருந்து தமிழைச் சிறப்பித்து வருவதால், இது ''சிறப்பு ழகரம்'' எனக் குறிப்பிடப்பெற்று வருகிறது.

தமிழ் நடையில் ''பாதிரித் தமிழ்'' என்றும் ஒரு நடை உண்டு. அது ''பிறியமானவர்கலே நான் உங்கலைக் கேட்டுக் கொல்லுவது என்னவென்றால்...'' என்றிருக்கும். கொல்லுவது என்று வந்த பிறகு கேட்டுக் கொல்லுவானேன்; கேளாமலேயே கொல்லலாமே என்று எண்ணத் தோன்றும், பாவம், அவர்களைக் குறை கூறிப் பயனில்லை. அவருக்கு ''ள'', ''ல'', ''ழ'' என்ற எழுத்துக்களின்

வேற்றுமை தெரியாது. இம் மூன்று எழுத்துக்களுக்கும் அவர்களிடம் "எல்" என்ற ஒரே ஒரு எழுத்துத்தான் உண்டு. அந்த ஒன்றை வைத்தே இந்த மூன்று ஒலிகளையும் ஒலித்துத் தீர வேண்டிய நிலையில் இருந்து வருகிறார்கள்.

தமிழில் ஒரே சொற்றொடரில் இம் மூன்று எழுத்துக்களையும் காணலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, "மாலைப் பொழுதில் காளை வந்தது" என்பதைக் குறிப்பிடலாம். இதைப் பாதிரிமார்களில் சிலர் "மாலைப் பொழுதில் காலை வந்தது!" என்றே கூறுவர். "மாலையில் காலை எப்படி வரும்?" எனக் கேட்டால், அவர்களும் நம்மோடு சேர்ந்தே சிரித்து விடுவர்.

"தொழிலாளி" என்ற ஒரே சொல்லில் இம் மூன்று எழுத்துக்களையும் காணலாம். அவர்களின் எழுத்துக்களைக் கொண்டு "தொலிலாலி" என்றுதான் எழுதமுடியும். இதற்காக நாம் வருந்தாமல் அவர்கள் மீது இரக்கம் காட்டியே ஆகவேண்டும், காரணம், அவர்களிடம் இருப்பது ஒரே ஒரு "எல்' மட்டுமே யாகும். அதை எண்ணும் பொழுது,

> *"ஆங்கிலம்*
> *அழகான பாஷைதான், அதற்கேற்ற எழுத்துத்தான்*
> *அவர்கிட்ட இருப்பதெல்லாம் ஒரே ஒரு எல்லுதான்."*

என்று பாடலாம் போலத் தோன்றுகிறது.

"தமிழிசை இயக்கம்" என்ற ஓர் இயக்கத்தைத் தமிழறிஞர்கள் சிலர் கூடித் தமிழகத்திலேயே நடத்தித் தீர வேண்டிய இழிநிலை கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டிருந்தது. அதுபோது, "தமிழ் மக்கள் தமிழகத்தில் தமிழரிடையே நடத்தும் தமிழ்

விழாக்களில் தமிழறிஞர்களைக் கொண்டு தமிழ் மொழியில் பாடச் செய்து தமிழ் இசையை வளர்த்தாக வேண்டும்'' எனக் கூறி வந்தோம்.

தமிழில் பாடத் தெரியாத சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழ் பகைவர்களோடும் தமிழிசைப் பகைவர்களோடும் சேர்ந்து கொண்டு, ''தமிழில் இசை இல்லை'' எனக் கூறிவந்தார்கள். தமிழில் உள்ள 11,991, வகையான பண்களையும், தமிழிசையிலுள்ள இசை நுணுக்கங்களையும் கொட்டிக் குவித்துக் காட்டினோம். எதிர்ப்பு அயரத் தொடங்கியது.

சிறிது காலஞ்சென்று, சென்னையிலிருந்து எதிர்ப்பு ஒன்று கிளம்பி, ''தமிழில் இசை இருக்கலாம்; இசைப் பாடல்கள் இல்லையே'' எனக் கூக்குரலிடத் தொடங்கியது. சங்க காலத்துப் பரிபாடலிலிருந்து, சைவ வைணவ காலத்துத் தேவார திருவாசக நாலாயிரப் பிரபந்தங்களை எண்ணி; தாயுமான அடிகள், பட்டினத்தடிகள், இராமலிங்க அடிகள் ஆகியவர்களின் திருவடிகளைத் தொட்டு; அருணகிரி நாதரின் திருப்புகழைப் பாடி; அண்ணாமலையாரின் காவடிச் சிந்துகளை எடுத்து ஆடி; அருணாசலக் கவிராயரின் இராம நாடகத்தைப் பார்த்து, குணங்குடி மஸ்தான சாகிபு, மாயூரம் வேதநாயகம்பிள்ளை ஆகியவர்களின் பாடல்களைப் பாடிப் பாருங்கள்'' என ஒருப் பட்டியலையே தயாரித்து வெளியிட்டோம். எதிர்ப்புப் படுக்கைக்குப் போய்விட்டது.

மறுபடியும் கும்பகோணத்திலிருந்து ஒரு எதிர்ப்புக் கிளம்பி, இந்துப் பத்திரிகையின் துணை கொண்டுத் 'தமிழில் இசை இருக்கலாம்; இசைப் பாடல்கள் இருக்கலாம்; ஆனால், இசைக்

கருவிகள் இல்லையே'' எனக் கூறிக்கொண்டு வெளிவந்தது. இதைக் கண்டதும் 1800 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சிலப்பதிகாரத்தை எடுத்து முன் வைத்து சந்தனம், மூங்கில், வெண்கலம், சுருங்காலி, செங்காலி ஆகியவைகளால் செய்த துளைக் கருவிகளாகிய குழல்களை ஊதி,

7 - நரம்புகளுடைய செங்கோட்டு யாழ்
16 - நரம்புகளுடைய சகோடயாழ்
17 - நரம்புகளுடைய மகர யாழ்
21 - நரம்புகளுடைய பேரியாழ்

ஆகிய நரம்புக் கருவிகளை எடுத்து மீட்டி,

*''பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை*
*சீர்மிகு மத்தளம், சல்லிகை, கரடிகை,*
*தொக்க உபாங்கம், துடி, பெரும்பறை''*

என மிக்க நூலோர் விரித்துரைத்துக் காட்டிய தோற் கருவிகள் அனைத்தையும் கொட்டி முழக்கினோம். எதிர்ப்புச் சாகத் தொடங்கியது.

செய்தி இவ்வளவோடு நின்றுவிடவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு கும்பகோணத்திலிருந்து எவனாவது ஒருவன் தோன்றி, ''தமிழில் இசைக் கருவிகள் இல்லை'' எனக் கூறுவான் என்பதை அன்றே அறிந்த தமிழன், ''இந்த இசைக் கருவிகள் யாவும் தமிழகத்தில், தமிழனால் கண்டு பிடிக்கப் பெற்றவை என்பதை மெய்ப்பிக்க, அவற்றிற்குத் தமிழ் மொழி யிலேயே பெயரிட்டிருக்கிறான். அதுவும் தமிழுக்கே சிறப்பாக உள்ள சிறப்பு ''ழ'' கரத்தை ஒவ்வொன்றிலும் புதிய வைத்து,

*தோற்கருவிக்கு "முழவு" எனவும்,*
*துளைக் கருவிக்கு "குழல்" எனவும்,*
*நரம்புக் கருவிக்கு "யாழ்" எனவும்,*

பெயரிட்டு, இவை அனைத்தும் தமிழனின் சொந்தச் சொத்து என்பதையும் அன்றே பதிவு செய்து வைத்திருக்கிறான்" எனவும் மழையும் புயலும் கலந்த இடி இடியென இடித்தோம். எதிர்ப்புச் செத்து மடிந்து, மண்ணோடு மண்ணாய்ப் போய் விட்டது. எப்படி, தமிழிசை இயக்கம் வெற்றி பெற இந்த "ழ" கரம் செய்த உதவி!

தமிழ்ச் சொற்களைப் பல மொழிகள் கடன் வாங்கியிருக்கின்றன. வடமொழியில் "பழம்" என்ற சொல்லே இல்லை. அதனால், அவர்கள் தமிழ்ச் சொல்லையே கையாண்டு வருகின்றனர். சொல்லைக் கடன் வாங்கினாலும் எழுத்தைக் கடன் வாங்க முடியவில்லை. அவர்களிடம் "ழ" இல்லாததால் "ல" வை வைத்தே "பலம்" என்கின்றனர். இவ்வுண்மையை, "கதலீ பலம்" என்பதால் நன்கு அறியலாம்.

தமிழுக்கே சிறப்பாக உள்ள இச் சிறப்பு "ழ" கரம் தமிழரிடையே படும் பாடுகளை எண்ண எண்ண, நமதுள்ளமெல்லாம் புண்ணாகி விடுகிறது.

தமிழகத்தின் தெற்கே உள்ள சிலர் "ழ" வை "ள" வாக்கி, "ஐயா, கடைக்காரரே உம்மிடம் வாளப்பளம் உண்டுமோ?" என்று கேட்கின்றனர். கிழக்கே உள்ள சிலர் "ழ" வை "ஷ", வாக்கி, மார்க்ஷித் திருவிஷா" என்கின்றனர். வடக்கே உள்ள சிலர் "ழ" வை 'ஸ" வாக்கி, "இஸ்துகினு போய்ட்டான்" எனக் கூறுகின்றனர்.

மேற்கே உள்ள சிலர் ''ழ'' வை ''ய'' வாக்கி ''வாயப்பயம்'' என்று கூறுகின்றனர்.

கோவைப் பக்கத்தில் ஒருவன் ''வாயப்பயம்'', ''வாயப் பயம்'' என்று கூறிக்கொண்டே போனான். புண்பட்ட உள்ளத்தோடு அவனை அழைத்து, ''என்ன விற்கிறாய்?'' என்றேன். ''வாயப்பயம்'' என்றான் ''நீ எந்த ஊர்?'' என்றேன். ''கியக்க'' என்றான். ''இங்கே எதற்கு வந்தாய்?'' என்றேன். ''புயக்க'' என்றான். எனக்குக் கடுங்கோபம் வந்து, ''ஏனப்பா தமிழை இப்படிக் கொலை பண்ணுகிறாய்?'' என்று கேட்டேன். அதற்கு அவன் ''அது எங்க வயக்கங்க'' என்றான். அவ்வளவுதான். அதற்குமேல் நான் அவனிடம் பேசவில்லை; போய் விட்டேன், எப்படி, தமிழுக்கே சிறப்பாக உள்ள ''ழ'' கரம் தமிழரிடையே படும்பாடு!

''தமிழ்'' என்ற மொழிப் பெயரிலும், ''இந்த'' ''ழ'' எழுத்து இருக்கிறது. ''பேசு'' என்று ஏவுகிற ''மொழி'' என்ற சொல்லிலும், இந்த ''ழ'' எழுத்து இருக்கிறது. இது தம்மிடத்தில் ''ழ'' வை உடைய மொழி ''தமிழ்''என்ற பொருளையும் காட்டி நம்மை மகிழ்விக்கிறது. இது காறுங் கூறியவைகளால் தமிழ் மொழியின் எழுத்துச் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

# 8. சொற் சிறப்பு

தமிழ் மொழிக்குள்ள சிறப்புகளில் ''சொற்சிறப்பு'' என்பதும் ஒன்று. இச் சிறப்பு ஒரு தனித்தன்மை வாய்த்தது. இதனைப் பிறமொழிகளில் காண இயலாது.

தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 90,000 மட்டுமே. இதில் எந்தச் சொல்லும் ஏழெழுத்துக்கு உட்பட்டதே. தமிழில் 8 எழுத்துச் சொல்லைக் காண முடியாது. ஆங்கிலத்தில் 20, எழுத்துக்களுக்கு மேற்பட்ட சொற்கள் பலவற்றைக் காணலாம். 23 எழுத்துச் சொல்லும் உண்டு. அது ''எக்சாமெதலனெட் டெட்ராமைன்'' என்பது. தமிழில் இத் தொல்லை இல்லை.

6,7 எழுத்துள்ள சொற்களும் மிகச் சில. 5 எழுத்துள்ள சொற்களும் சிலவே. 4-எழுத்தள்ள சொற்கள் பல. 3,2 - எழுத்துள்ள சொற்களே மிகப் பல. ஓரெழுத்து ஒரு சொல் என்பதும் தமிழில் உண்டு, அவை:

| | | | |
|---|---|---|---|
| ஆ | = பசு, | கோ | = மன்னன் |
| நா | = நாக்கு | தீ | = நெருப்பு, |
| பை | = சாக்கு, | மை | = கருமை |
| வா | = வரவேற்றல், | வை | = ஏவுதல், |
| போ | = விரட்டுதல், | ஈ | = ஓர் உயிரி, |
| கை | = ஓர் உறுப்பு, | பூ | = மலர், |
| தா | = கொடு, | மா | = குதிரை, |
| கா | = காத்தல், | தை | = ஒரு மாதம், |

என்பன. இவை எழுத்தின் சுருக்கத்தையும் சொல்லின் பெருக்கத்தையும் மொழியின் வளத்தையும் ஒருங்கே காட்டுவனவாம்.

பிற மொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டுவன. தமிழ்மொழிச் சொற்கள் உருவத்தையும், பருவத்தையும் சேர்த்துக் காட்டக் கூடியன.

''பெண்'' ஆங்கிலேயர் ''உமென்'' என்பர். வடமொழியினர் ''ஸ்திரீ'' என்பர். இவை இரண்டும் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன; பருவத்தைக் காட்டவில்லை. காட்ட வேண்டுமானால், ''யங், ''ஓல்டு'' என்பதையோ, ''பால்ய, வயோதிக'' என்பதையோ சேர்த்துக் கூறியாக வேண்டும். இவை அம் மொழிகளின் சொற்சிறப்பைக் காட்டுவதாக இல்லை. தமிழிலுள்ள சொற்கள் உருவத்தோடு அதன் பருவத்தையும் காட்டுவதைக் கண்டு மகிழுங்கள்.

| | |
|---|---|
| பேதை | பெண் 5 வயதுக்கும் கீழ் |
| பெதும்மை | பெண் 10 வயதுக்கும் கீழ் |
| மங்கை | பெண் 16 வயதுக்கும் கீழ் |
| மடந்தை | பெண் 25 வயதுக்கும் கீழ் |
| அரிவை | பெண் 30 வயதுக்கும் கீழ் |
| தெரிவை | பெண் 35 வயதுக்கும் கீழ் |
| பேரிளம் பெண் | பெண் 45 வயதுக்கும் கீழ். |

பெண் என்ன? ஆண் என்பதைத்தான் பாருங்கள்.

| | |
|---|---|
| பாலன் | ஆண் 7 வயதுக்கும் கீழ் |
| மீளி | ஆண் 10 வயதுக்கும் கீழ் |
| மறவோன் | ஆண் 14 வயதுக்கும் கீழ் |
| திறலோன் | ஆண் 15 வயதுக்கும் கீழ் |
| காளை | ஆண் 16 வயதுக்கும் கீழ் |
| விடலை | ஆண் 30 வயதுக்கும் கீழ் |
| முதுமகன் | ஆண் 30 வயதுக்கும் மேல் |

இவ்வாறு பன்னிருபாட்டியல் ஆண்களுக்கும் ஏழு பருவப் பெயர்களைத் தருகிறது. மேலும், ஆண்களின் பருவத்தைப் பின்வருமாறும் கொண்டு கூறலாம்.

| | |
|---|---|
| பிள்ளை | ஆண் - குழந்தைப்பருவம் |
| சிறுவன் | ஆண் - பாலப் பருவம் |
| பையன் | ஆண் - பள்ளிப் பருவம் |
| காளை | ஆண் - காதற் பருவம் |
| தலைவன் | ஆண் - குடும்பப் பருவம் |
| முதியோன் | ஆண் - தளர்ச்சிப் பருவம் |
| கிழவன் | ஆண் - மூப்புப் பருவம். |

இவையனைத்திற்கும் ''மேன்'' என்ற ஆங்கிலச் சொல்லோ, ''புருஷன்'' என்ற வடமொழிச் சொல்லோ பொருந்துமா? என எண்ணிப் பாருங்கள்: இவை அம்மொழிகளின் சொற்பஞ்சத் தையே காட்டுகின்றன.

ஆண் பெண் மட்டுமல்ல; ''பூ'' என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். ''ஃப்ளவர்'' என்பர் ஆங்கிலேயர்; ''புஷ்பம்'' என்பர் வடமொழியாளர். அவ்வளவுதான். உருவத்தையும் பருவத்தையும் சேர்த்துக்காட்ட அவர்களிடம் சொற்களில்லை. தமிழிற் பாருங்கள்:

| | | |
|---|---|---|
| அரும்பு | பூ | அரும்பும் நிலை |
| மொட்டு | பூ | மொக்குவிடும் நிலை |
| முகை | பூ | முகிழ்க்கும் நிலை |
| மலர் | பூ | மலரும் நிலை |
| அலர் | பூ | மலர்ந்த நிலை |
| வீ | பூ | வாடும் நிலை |
| செம்மல் | பூ | வதங்கும் நிலை |

எப்படி, தமிழில் உள்ள சொற்களின் சிறப்பு! பூவை விட்டு இலையைத்தான் எடுங்கள். வடமொழியனிர் இதைப் ''பத்திரம்'' என்பர். ஆங்கிலேயர் ''லீவ்ஸ்'' என்பர். இச் சொற்கள் இரண்டும் ''இலை'' என்ற உருவத்தைக் காட்டவில்லை. தமிழ்ச் சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி மகிழ்விக்கின்றன.

| | | |
|---|---|---|
| கொழுந்து | இலை | குழந்தைப் பருவம் |
| தளிர் | இலை | இளமைப் பருவம் |
| இலை | இலை | காதற் பருவம் |
| பழுப்பு | இலை | முதுமைப் பருவம் |
| சருகு | இலை | இறுதிப் பருவம் |

தமிழிலுள்ள இச் சொற்களின் உருவம், பருவம் ஆகிய இரண்டையும் ஒருங்கே கண்டுகளியுங்கள்.

இதிலும் ஆல், அரசு, அத்தி, மா, பலா, வாழை முதலியவை களின் இலைகளுக்கு மட்டுமே ''இலை'' என்று பெயர்.

அகத்தி, பசலி முதலியவற்றின் இலை இலையாகாமல் ''கீரை'' எனப் பெயர் பெறும். மண்ணிலே படர்கின்ற கொடிவகை இலைகளுக்குப் ''பூண்டு'' என்று பெயர். அறுகு, கோரை

முதலியவைகளின் இலைகள் ''புல்''லாகி விடும். நெல், வரகு முதலியவற்றின் இலைகள் ''தாள்'' என்றாகும்.

மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் ''இலை'' அல்ல. அவற்றின் பெயர் ''தழை'' சப்பாத்தி, கள்ளி தாழை இனங்களின் இலைகள் இலையாகா; அவற்றின் பெயர் ''மடல்'' கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகள் இலையாகா; அவற்றின் பெயர் ''தோகை''. தென்னை, பனை, ஈந்து, கமுகு முதலியவைகளின் இலைகள் இலையெனப் பெயர்பெறா. அவற்றின் பெயர். ''ஓலை'' என்னே தமிழின் சொல்வளம்!

இவையனைத்திற்கும், ''லீப்'' என்ற ஆங்கிலச் சொல்லோ, ''பத்திரம்'' என்ற வடமொழிச் சொல்லோ பொருந்துமா? எனப் பாருங்கள். அப்பொழுதுதான் தமிழ் மொழியின் சொல்வளம் நன்கு விளங்கும்.

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் ''ரைஸ்'' என்பது, சோற்றைக் குறிக்கும் சொல்லும் ''ரைஸ்''தான். இது ஆங்கில மொழியின் சொற்பஞ்சத்தையே காட்டுகிறது. இதனால், சோறு கேட்பவர்களுக்கு அரிசியும், அரிசி கேட்பவர்களுக்குச் சோறு கிடைத்து விடலாம்.

தமிழில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்பதும் உண்டு. அவற்றுள் ''மா'' என்பது ஒரு சொல் அது.....அழகு, அளவு, அறிவு, ஆணி, இடித்தமா, இடை, கட்டு, கறுப்பு, மாமரம், குதிரை, சீலை, செல்வம், தாய், நிறம், பரி, பெருமை, மேன்மை, வண்டு, வயல், வலி, விலங்கு முதலியவற்றைக் குறிக்கும்.

அடுத்து, தமிழில் ஒருபொருள் குறிக்கும் பல சொல் என்பதும் உண்டு. அவற்றுள் வேழம், கயிறு, கரி; கைம்மா, நடைமலை,

கைம்மலை, கறையடி, அறுகு, ஆம்பல், நந்தி, தும்பி, தூங்கல் எனும் இவையனைத்தும் யானையைக் குறிப்பன. இவை தமிழின் சொற்சிறப்பைக் காட்டுவனவாம்.

''இராம ஜெயம்'' என்பது வடமொழியிலுள்ள இரு சொற்களைக் கொண்ட ஒரு சொற்றொடர். இதன் பொருள் என்ன? ''ராம வெற்றி'' என்பதே. இது பொருளைத் தெளிவாக விளக்கவில்லை. ஏனெனில், இது வேற்றுமையுருபு இல்லாதது. தமிழில் வேற்றுமை உருபு கலப்பதால் அது பொருளை நன்கு விளக்கிக் காட்டுகிறது. எவ்விதமெனில்,

இராமனை வெற்றி, இராமனால் வெற்றி.
இராமனுக்கு வெற்றி, இராமனின் வெற்றி
இராமனது வெற்றி, இராமனுடைய வெற்றி
இராமனிடத்தில் வெற்றி, இராமா வெற்றி.

என்ற எட்டும் வேற்றுமை உருபு கலந்தவை. இந்த எட்டில் ''இராம ஜெயம்'' என்பது எதைக் குறிக்கிறது? தமிழில் உள்ள சொற்சிறப்பைக் காட்ட இவை போதுமானவை.

'தமிழ மொழியில் 86200 சொற்கள் உள்ளன என்பது மறைமலையடிகளின் கருத்து. இவையனைத்தும் தமிழ் மொழிக்கே உரியன. இந்த அளவு அதிக எண்ணிக்கையுடைய சொந்தச் சொற்கள் உள்ள மொழி, உலகில் வேறு எந்த மொழியும் இல்லை.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் மொழியின் சொற் சிறப்பை நன்கறியலாம்.

# 9. ஒலிச் சிறப்பு

1. தமிழ் மொழியின் ஒலியே ஒரு தனி ஒலி. அது மிக இனிமையானதொரு ஒலி. தமிழுக்கு உள்ள சிறப்புகளில் அதன் ஒலிச் சிறப்பும் ஒன்று.

2. அதன் உயிர் எழுத்துக்கள் அனைத்தும் உதடுகளாலேயே ஒலிக்கக் கூடியவை. பல்லுக்கும், தொண்டைக்கும் வேலையையில்லை.

3. இரண்டு உதடுகளையும் திறக்கும் பொழுதே ''அ'' ஒலி உண்டாகிவிடுகிறது. இரண்டு உதடுகளையும் இளிக்கும் பொழுது ''இ'' ஒலி உண்டாகிறது. இரண்டு உதடுகளையும் குவிக்கும் பொழுது ''உ'' ஒலி உண்டாகிறது அவற்றை அப்படியே உயர்த்தும் பொழுது ''ஒ'' ஒலி உண்டாகிறது. ''ஆ, ஈ, ஊ, ஏ, ஓ'' என்பன இவற்றின் நீண்ட ஒலிகளே. இவை முறையே ''குறில்'' ''நெடில்'' என ஆகும். இந்தப் பத்து எழுத்துகளுக்குள்ளாகவே தமிழின் உயிர் ஒலிகள் அனைத்தும் அடங்கிவிட்டன. ''அய்'', ''அவ்'', ''அக்'', என்ற மூன்றும் கூட்டு எழுத்துக்களும், கூட்டு ஒலியுமாகும்.

4. இந்த உயிரோடு சேர்ந்து ஒலிக்கக்கூடிய தமிழ் ஒலிக்குரிய உடம்பு எழுத்துக்கள் 18 மட்டுமே. இதனாலேயே. இவ்வெழுத்துக் களை ''மெய்''யெனக் கூறுவர். இவற்றுள்ளும் வலிந்து ஒலிக்கக் கூடியவை. 6- ''க்,ச்,ட்,த்,ப்,ற்''. மெலிந்து ஒலிக்கக் கூடியவை 6- ''ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்''. இரண்டிற்கும் இடையே ஒலிக்கக் கூடியவை

6 - ய்,ர்,ல்,வ்,ழ்,ள்'' இவற்றை வலிந்தும், மெலிந்தும் இடையிலும் ஒலிக்க வேண்டும் என மூன்று வகையாகப் பிரித்து, அவற்றை மூன்று இனமாக்கி, அவற்றிற்கு வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பெயரிட்டிருப்பது ஒரு வியப்பு. அதைவிட வியப்பு அதிலுள்ள எந்த இனமும் ஏற்றத் தாழ்வினை அடையாமல் ஒவ்வொரு இனமும் அவ்வாறு எழுத்துக்களையும் ஒலியையும் பெற்றிருப்பது.

5. உயிர் ஒலிகள் அனைத்தும் உதடுகளால் மட்டும் ஒலிக்கக் கூடியவை என்பது கண்டோம். இந்த ''மெய்'' ஒலிகள் அனைத்து உதடு, பல், நாக்கு, மூக்கு தொண்டைகளால் மட்டுமே ஒலிக்கக் கூடியவை. இவற்றுள் எந்த ஒலியை ஒலிக்கவும் தொண்டைக்குக் கீழ் வேலையே இல்லை. சில மொழி ஒலிகளை அடிவயிற்றிலிருந்து ஓசைகளைக் கிளப்பி, ஹ, ஹா, க்ஷ, க்ஷா என ஒலித்தாக வேண்டும். இத் தொல்லை தமிழ் ஒலிக்கு இல்லை.

6. ஒவ்வொரு மெய்யின்மீதும், ஒவ்வொரு உயிர் ஏற, உயிர் மெய் எழுத்தும், ஒலியும் தோன்றும். அவை ''க்உ-கு'' ''ப்இ-பி'' ''ச்எ-செ'' என்பன. இவ்வாறு 18 மெய்களிலும் 12 உயிர்கள் ஏறி 216 எழுத்துக்களாக, ஒலிகளாக அமைந்திருக்கின்றன. இது தமிழ் மொழிக்குள்ள சிறப்பு. இவ்வெழுத்துக்களை உயிர் மெய்யெழுத் துக்கள் தனியாக இல்லாமையால், அவ்விரண்டையுமே அவர்கள் தனித்தனியே சேர்த்து ஒலித்து வருகிறார்கள். ''மி' என எழுத ''எம் இ'' என இரண்டு எழுத்தையும், ''கு'' என எழுத ''கே உ'' என இரண்டு எழுத்தையும் பயன்படுத்தி வருவதைக் காணலாம்.

7. ''ழ'' என ஒலிக்க உலகின் எம்மொழியிலும் எழுத்துக்களில்லை. ''ழ'' ஒலி தமிழின் தனிச்சிறப்பான ஒலி,

இதனாலேயே தமிழ் அறிஞர்கள் இதனைச் சிறப்பு ''ழ'' கரம் எனக் கூறுவதுண்டு. மொழியின் பெயராகிய ''தமிழ்'' என்ற சொல்லிலும் ''பேசு'' என்கிற ''மொழி'' என்ற சொல்லிலும் இந்த ''ழ'' ஒலி ஒலித்துக் கொண்டிருப்பது வியப்பிற்குரியதாகும்.

8. வல்லோசையுடைய எழுத்துக்கள் ஆறில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் மூன்று. அவை க,த,ப என்பன. இம் மூன்றுமே மொழிக்கு முன்னே வரும்பொழுது மெல்லொலியும் இடையில் வரும்பொழுது மெல்லொலியும் அமைந்து வரும். இவ்வுண்மையை ''காகம்'' ''தாதன்'' ''பாபம்'' என்ற சொற்களை ஒலித்துக் காணலாம். இது தமிழ் ஒலிக்கு இயல்பாகவே அமைந்துள்ள ஒரு தனிச் சிறப்பாகும்.

9. இவை தவிர ''ங்'' ''ஞ்'' என்ற இரு எழுத்துக்கள் தமிழில் இருந்து ''க'' வுக்கும் ''ச'' வுக்கும் ஒரு புதிய ஒலியை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. கங்கணம், பங்கஜம், சங்கு, வங்கி என்பதிலுள்ள ''க''வின் ஒலியைக் காணுங்கள். அவ்வாறே ''பஞ்சு'' ''நெஞ்சி'' என்பதிலுள்ள ''ச'' வின் புதிய ஒலியைக் கண்டு மகிழுங்கள். இவை, ஆங்கில எழுத்தின் எ யின் ஒ யின் ஒலிகள்.

10. தமிழ் எழுத்துக்களை மட்டும் புரிந்து கொண்டால் எவ்வளவு பெரிய நூல்களையும் படித்துவிடலாம். காரணம் அதிலுள்ள எந்த எழுத்துக்கும் இரண்டு மாறுபட்ட ஒலிகளில்லை. அவ்வாறு ஆங்கில எழுத்துக்களை மட்டும் புரிந்துகொண்டு, ஆங்கில நூல் எதையும் படித்து விட முடியாது. அதிலுள்ள ''ஸி'' எழுத்துக்கு ''ஸ்'' ஒலியும ''க்'' ஒலியும் வரும். இவ்வுண்மையை ''பாலஸ்'' ''அக்கவுண்ட்'' என்பதால் நன்கறியலாம். அவ்வாறே

''ஜி'' ஒலியும் ''கே'' ஒலியும் வரும். இவற்றை ''கெம்'' என்பதாலும் ''ஜெம்'' என்பதாலும் அறியலாம். சில ஆங்கிலச் சொற்களுக்கு எழுத்து இருக்கும்; ஒலியிருக்காது. டால்க் என எழுதி ''டாக்'' எனவும், ''வால்க்'' என எழுதி ''வாக்'' எனவும் ஒலித்தாக வேண்டும். ''டி'' எழுத்துக்கு சிலவிடத்தில் ''ட்'' ஒலியும் சிலவிடத்தில் ''ஷ்'' ஒலியும் வரும். இதனை ''மோடிவ்'', மோஷன்'' என்பதால் நன்கறியலாம். தமிழ் ஒலியில் இத் தொல்லை இல்லை.

''எஸ்.ஏ.என்'' என்பதையும் ''எஸ் யூ என்'' என்பதையும் ''எஸ். ஓ. என்'' என்பதையும் ''சன்'' என்றே ஒலித்தாக வேண்டும். இந்த மாறுபட்ட எழுத்துக்களை எழுதி, ஒன்றுபட்ட ஒலியால் ஒலித்து, வேறுபட்ட பொருள்களைக் காண வேண்டும். ஏன் எப்படி? எதற்காக இப்படி ஒலித்தாக வேண்டும்? என்பதற்கு விதியும் இல்லை. இத் தொல்லையும் தமிழ் ஒலிக்கு இல்லை.

11. தமிழில் ஒலி இலக்கணம் ஒன்றுண்டு. அது எந்த எழுத்தை எவ்வளவு காலம் ஒலிக்க வேண்டும் என்பது, ''அ,இ,உ,எ,ஒ'' என்ற குறில் எழுத்துக்களை ஒலிக்கும் அளவு ஒரு மாத்திரை. ''ஆ,ஈ,ஊ,ஏ,ஓ'' என்ற நெடில் எழுத்துக்களை ஒலிக்கவேண்டிய கால அளவு இரண்டு மாத்திரை. ''க்,ப்,ம்,ச்,ட்'' போன்ற மெய்யெழுத்துக்களை ஒலிக்கும் கால அளவு அரை மாத்திரை. மாத்திரை என்பது நொடிப்பொழுது. அது நடுவிரலையும் பெருவிரலையும் சேர்த்து நொடிக்கும் காலம்.

இந்த நொடிப் பொழுதையும் கால, அரை, முக்கால், ஒன்று என நான்காகப் பிரித்து கணக்கிட்டிருப்பது பெரு வியப்பைத் தருவதாகும். நொடிக்க வேண்டும் என எண்ணுவது கால்

மாத்திரை. இரு விரல்களையும் தூக்குவது அரை மாத்திரை. சேர்த்து அழுத்துவது முக்கால் மாத்திரை. நொடிப்பது முழு மாத்திரை என்றாகும். இதற்குரிய இலக்கண நூற்பா, ''எண்ணல் கால், எடுத்தல் அரை, முறுக்கால் முக்கால்அ விடுத்தல் ஒன்று'' என்பதே இதுபோன்று தமிழ் மொழிக்கு ஒலி இலக்கணம் அமைந்து மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாயிற்று.

12. அலறினான், அழுதான், அறைந்தான், இளித்தான், இசைத்தான், இயம்பினான், உறுமினான், உளறினான், ஊளையிட்டான், கத்தினான், கனைத்தான், கிளறினான், கீச்சிட்டான், கூறினான், கூவினான், சாற்றினான், சிரித்தான், சீறினான், செப்பினான், படித்தான், பழித்தான், பிதற்றினான், பேசினான், புலம்பினான், விளக்கினான், விளம்பினான், வைதான், வாழ்த்தினான் என்ற சொற்கள் அனைத்துமே ''சொன்னான்'' என்ற ஒரே பொருளில் வருவன. எனினும் அவை தமிழின் ஒலியையும், ஒலியின் தரத்தையும், ஒலிப்பவனது உதட்டையும் முகத்தையும் மட்டுமல்ல. அவனது உள்ளத்தையும் கூடக் காட்டுவனவாகும். இவை அனைத்திற்கும் ''சப்தித்தான் அல்லது கர்ஜித்தான்'' என்ற வடமொழிச் சொற்கள் பொருந்துமா? என்று பாருங்கள். இவற்றிற்கு ஆங்கிலத்தில் சொற்களுண்டோ? எனத் தேடுங்கள். இவ் ஒலிகளை ஒலிக்க, குறிக்க, இந்தியில் சொற்கள் இருக்குமா? என எண்ணிப் பாருங்கள். இவை போன்ற பலவற்றாலும் தமிழ் எழுத்தின் ஒலியையும், தமிழ் மொழியின் ஒலியையும், தமிழ் ஒலியின் தனிச் சிறப்பையும் ஒருவாறு காணலாம். இது தமிழின் ஒலிச் சிறப்பு ஆகும்.

# 10. கவிதைச் சிறப்பு

கவிதை புனைவது ஒரு கலை. பூக்களைக் கட்டுவதும் ஒரு கலை. சொற்களைக் கட்டுவதும் பூக்களைக் கட்டுவதும் ஒன்று போன்றதே. கட்டப்பெற்ற பூக்களுக்குச் ''சரம்'' என்று பெயர்; கட்டப்பெற்ற சொற்களுக்குக் ''கவிதை'' என்று பெயர்.

உரைநடையில் உள்ள சொற்கள் உதிரிப் பூ போன்றவை. கவிதையில் உள்ள சொற்கள் சரம் போன்றவை.

உதிரிப் பூக்களில் ஒன்றைத் தொட்டு எடுத்தால் அது மட்டுமே வரும். அடுத்த பூ வராது. கட்டப்பெற்ற பூக்களில் ஒன்றைத் தொட்டெடுத்தால், அதைத் தொடர்ந்து ஆயிரம் பூக்களும் வரும். உரை நடைச் சொற்களில் ஒன்றை நினைத்தால் அது மட்டுமே நினைவுக்கு வரும். கவிதையில் உள்ள ஒரு சொல்லைத் தொட்டால் கவிதையின் கடைசிச் சொல்வரை நினைவுக்கு வந்துவிடும்.

நேற்றுப் படித்த நாளிதழ்களிலுள்ள உரைநடை இன்று நினைவிலிராது. நாற்பதாண்டுகளுக்கு முன்னே படித்த ஒரு கவிதை நமது நினைவில் இருக்கும்.

தமிழ்ப் புலவர்களில் பலர் உளநூற் புலவர்கள். அவர்கள் கண்ட கனவே கவிதை. அது சொற்களைக் குறைப்பதற்காகவும் நினைவுக்குக் கொண்டு வருவதற்காகவும் தோன்றியது.

உரைநடையில் நாற்பது வரிகளில் வரும் சொற்கள், கவிதைகளில் நான்கு வரிகளில் அடங்கிவிடும். உரைநடையில் நூறு சொற்களை ஓலையில் எழுதி வைப்பதைவிட, அவற்றைப் பத்துச் சொற்களில் கவிதையாக்கி ஓலையில் எழுதி வைப்பது நல்லதெனக் கண்டனர். அதில் ஓலையும் குறைவு; வேலையும் குறைவு. மேலும் மனப்பாடம் செய்ய உரைநடையைவிடக் கவிதை எளிது.

பழந்தமிழ் மக்கள் வீரத்தை-காதலை-கொடையைப் பொன்னேபோல் போற்றினர். ஒழுக்கத்தைப்-பண்பாட்டை உயிரேபோல் போற்றினர்.

இவைபற்றி அவர்கள் ஆராய்ந்து கண்ட உயர்ந்த கருத்துச் செல்வங்களைத் தமக்கு பின்வரும் தலைமுறையினர்க்கு வழங்க எண்ணினர். அதற்காக அவர்கள் கண்டுபிடித்து அமைந்த சிறந்த பாதுகாப்புக் கருவூலங்களே கவிதைகள்.

பூக்களைக் கட்டுவதற்கு நார் அமைதல் போலச் சொற்களைக் கட்டுவதற்குச் சந்தி அமைகிறது. சந்தி என்பது ஒரு சொல்லோடு மற்றொரு சொல்லை ஒட்டுகின்ற பசையாகும். அங்கு-இருக்கும் என்பவற்றை அங்கிருக்கும் என ஒன்றாக்கும்; சங்கு-ஊதும் என்பவற்றைச் சங்கூதும் என ஒன்றாக்கும்; பங்கு-ஆளி என்பவற்றைப் பங்காளி என ஒன்றாக்கும். இச் சந்தியினால் கவிதைக்கு இரண்டுவித நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று, முதல் சொல்லின் இறுதி எழுத்தையும், வரும் சொல்லின் முதல் எழுத்தையும் சேர்த்து ஒரு சொல்லாக ஒட்டுவது. மற்றொன்று, இச் சொற்களின் பொருள் கெடாமலும் ஓசை கெடாமலும் அவற்றிலுள்ள ஒவ்வொர் எழுத்தைக் குறைத்துவிடுவது

மேலேயுள்ளவற்றில் எட்டு எழுத்து ஏழானதையும், ஆறெழுத்து ஐந்தானதையும், ஐந்தெழுத்து நான்கானதையும் கண்டு இவ்வுண்மையை உணரலாம்.

நினைவறாற்லுக்குக் கவிதைகள் துணைசெய்கின்றன என்பதை மேலே கண்டோம். கவிதைக்குத் துணை செய்வன அதிலுள்ள எதுகையும் மோனையுமே யாகும். எதுகையும் மோனையுமின்றிக் கவிதை அமையாது. அமைந்தாலும், அது நினைவில் அமையாது.

எடுத்துக்காட்டாக, ஒரு கவிதையிலுள்ள முதல் சொல்லைத்தொடுங்கள். அதுவும் பூவாகவே இருக்கட்டும். மல்லிகையைத்தான் தொடுங்களேன்.

*"மல்லிகையே வெண்சங்கா வண்டுத வான்கரும்பு*
*வில்லி கணைதெரிந்து மெய்காப்ப-முல்லைமலர்*
*மென்மாலை தோளசைய, மெல்ல நடந்ததே*
*புன்மாலை அந்திப் பொழுது"*

பல ஆண்டுகளுக்குப் முன்பு படித்த புகழேந்தியின் இந்த வெண்பா மல்லிகையைத் தொட்டதும், பொழுதில்தான் வந்து நின்றது. இடையில் எங்கும் தடைபடாமல் ஆற்றொழுக்காகச் சொற்கள் பின்னிப் பின்னி நடந்து, 'பொழுதில்' வந்து நின்றதற்குக் கவிதையிலுள்ள எதுகையும் மோனையும் துணை செய்தன. மல்லிகை-வண்டு, வில்லி-மெய், மென்-மெல்ல, புன்-பொழுது என்பன மோனைகள்; மல்லிகை-வில்லி, மென்மாலை-புன்மாலை என்பன எதுகைகள். இத்தகைய எதுகையும் மோனையும் சந்தியும் பிறமொழிகளுக்கு இல்லை.

ஆங்கிலத்தில் எதுகை கடைசி எழுத்தாக மட்டுமே அமையும். இந்தியில் சிறந்த் இலக்கியக் கவிதைகள் தோன்றாமைக்குக் காரணமும் இதுவேயாகும்.

"தன் கணவன் கொலையுண்டான் எனக் கேள்விப்பட்ட கண்ணகி, தெருவிலுள்ள புழுதியெல்லாம் தன் மேனியில் பட, உடல் பதைபதைத்து, மன்னன் அரண் மனையை நோக்கி ஓடினாள். அவளது கூந்தல் அவிழ்ந் தலைந்தது. மற்றொரு சிலம்பையும் கையோடு கொண்டு போனாள். கண்களிலிருந்து நீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது. அவளது கணவன் அவளை விட்டுப் போய் விட்டதுபோல் அவளது உடம்பை விட்டு அவளது ஆவியும் குடிபோனது போன்று தோன்றியது. இவற்றைப் பாண்டிய மன்னன் அரசிருக்கையில் இருந்து கண்டான். கண்ட உடனேயே அவளது தோற்றத்திலிருந்து தனது ஆட்சியில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது எனக் கலங்கிவிட்டான். 'தேரா மன்னா!' என அவள் அழைத்து உண்மையை விளக்கியதை அவன் தன் காதுகளில் கேட்டான். கேட்ட அளவிலேயே உயிரையும் விட்டு விட்டான்" என்பது சிலப்பதிகாரத்திலுள்ள ஓர் அரசவைக் காட்சி.

மேலே உள்ள காட்சியை விளக்கி எழுதப்பெற்ற சொற்றொடர்களின் எழுத்துக்களை எண்ணிப் பாருங்கள் 320 எழுத்துக்கள். இவற்றை 74 எழுத்துக்களாகச் சுருக்கிப் பொருள் கெடாமல் கட்டப்பெற்ற கவிதையே இது:

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்-வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான் அக்காரிகைதன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்.**

1. இவ் வெண்பாவில் 320 எழுத்துக்களை 74 எழுத்துக்களாகக் குறைத்தும் பொருள் குறையவில்லை.

2. கவிதையாக அமைக்கப்பெற்றால் நினைவாற்றலுக்குள் அடங்குகிறது; ஆனால் மேலே உள்ள உரைநடை அடங்காது.

3. மெய்-விரி; புகை-கண்; கண்ட-காரி-உண்ட-உயிர் என்பன மோனைகள்.

4. மெய்யில்-கையில்; கண்ட-உண்ட என்பன எதுகைகள், இவை நினைவாற்றலுக்குத் துணை செய்பவை.

5. கண்ட+அளவு; கண்டளவு; உண்ட+அளவு உண்டளவு; ஆனது சந்தியினால், இது கவிதைக்குள் சொற்களை ஒட்டும் பசை.

6. கவிதையோ மெய்யில் தொடங்கி உயிரில் முடிகிறது.

7. மெய்-உயிர் என்பதால் உடம்பைக் கண்டு உயிர் போயிற்று என்பதும், உண்மையைக் கண்டு உயிர் போயிற்று என்பதும் பொருள் நயங்கள்.

8. உடலிற் புழுதி அவள் ஓடிவந்த தோற்றம்; அவிழ்ந்த கூந்தல் கணவனிழந்த தோற்றம்; கையிலுள்ள சிலம்பு தன் கணவன் கள்வனல்லன் என்பதற்குச் சான்று; கண்களிலிருந்து வழியும் நீர் வாழ்விழந்த தோற்றம்; காரிகையின் சொற்களில் உண்மை; இந்த ஐந்தையும் கண்டதுமே மன்னன் உயிரையும் தோற்றான் என்பது கருத்து நயம்.

9. மன்னன் தன்மீது பழிபோக்கும் முன்னே உயிர் போக்கி கொண்டது ஒரு தமிழ்ப் பண்பாடு.

இந்த ஒன்பதுவகை நயங்களையும் இவ் வெண்பாவிற் காணலாம். பிறமொழிக் கவிதைகளில் இவற்றுள் இரண்டொன்றை மட்டுமே காணலாம். சிலவற்றில் மூன்றும் காணலாம். இவை முழுதும் காணவேண்டுமானல் தமிழ்க் கவிதைகளில்தான் காண முடியும், என்னே தமிழ் மொழியின் கவிதைச் சிறப்பு! பழந்தமிழ்ப் பெருமக்கள் சொற்களைக் குறைத்து எழுத்துச் சுருக்கமாகக் கவிதைகளாகக் கட்டிவைக்க மட்டும் கற்றுக் கொண்டில்லை; கட்டப்பட்ட கவிதைகளை விரிக்கவும் கற்றிருந்தனர். ஓலைச் சுவடியின் கட்டை அவிழ்த்து விரிப்பது மட்டும் அல்ல விரிவு; அதிலுள்ள கவிதையின் பொருளை விரிப்பதும் விரிவாகும். அவ்வாறு செய்வது விரிவுரை; செய்பவர் விரிவுரையாளர். என்னே தமிழ் மக்கள் கண்ட கவிதை!

இதுகாறும் கூறியவாற்றால் தமிழ்க் கவிதைகளின் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

# 11. கலைச் சிறப்பு

கலை பல வகை, அதில் தமிழின், தமிழரின், தமிழகத்தின் கலை ஒரு தனி வகை. அதில் எழுத்துக் கலை, சொற்கலை, கவிதைக்கலை, மருத்துவக் கலை, இசைக்கலை, நடனக்கலை, நடிப்புக்கலை முதலியவற்றை இந் நூலின் பிற பகுதிகளில் காணலாம். இவற்றைத் தவிரக் காவியக் கலை, ஓவியக் கலை, கட்டடக்கலை, சிற்பக்கலை, வானநூற்கலை, கணிதநூற்கலை, உளநூற்கலை, உடற் பயிற்சிக்கலை, கைத்தொழிற்கலை, உழவுத்தொழிற் கலை, நுண்கலை, சாகாக்கலை, பாசனக்கலை, ஆட்சிக் கலை ஆகிய கலைகள் இருபத்தொன்றும் தமிழுக்கே உரிய கலை என நல்லறிஞர் கூறுவதுண்டு. அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்.

## ஆய்வுக்கலை

தமிழ்மக்கள் எதனையும் துருவி ஆராய்ந்து கண்டெடுத்து, அவற்றைத் தொகைப்படுத்தி, முறைப்படுத்தி, வகைப்படுத்தி, பெயர்ப்படுத்திச், செயல்படுத்துவதில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தலை சிறந்து விளங்கி வந்தனர்.

1. மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனவும், காடும் காடுசார்ந்த இடமும் முல்லை எனவும், மணலும் மணலைச் சார்ந்த இடமும் பாலை எனவும், வயலும் வயலும் சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் நிலத்தை ஐந்தாக ஆய்ந்து கண்டனர். கண்டு 3000-ம்

ஆண்டுகளுக்கு மேலாயின. இன்னும் ஆறாவது நிலப் பரப்பை எவராலும் காண முடியவில்லை.

2. கிழக்கே இருந்து வருகிற காற்று ''கொண்டல்'' எனவும், அது மேகத்தின் மூலம் கடல் நீரை அள்ளி மழையாகப் பொழிந்து முல்லை நிலத்தை வாழ்விக்குமெனவும்; மேற்கே இருந்து வருகிற காற்று ''கோடை'' எனவும், அது ஆற்றின் மூலம் நீரைக் கொண்டுவந்து மருத நிலத்தை வாழ்விக்குமெனவும்; வடக்கே இருந்து வருகிற காற்று ''வாடை'' என்வும், இது பயிர்களை வளர்க்கும் எனவும், தெற்கே இருந்து வருகிற காற்று ''தென்றல்'' எனவும், அது மக்களை வளர்க்கும் எனவும் ஆய்ந்து, தமிழகத்துக்கு நான்கு புறத்திலிருந்தும் காற்றுகள் வருமெனக்கண்டு, அவற்றை வகைப்படுத்தி, தொகைப்படுத்தி, பெயர்ப்படுத்தி, செயற்படுத்தி வந்திருக்கின்றனர்.

3. உலகில் பேசப்படும் மொழிகள் இர்ண்டாயிரத்துக்கு மேற்பட்டவை எனவும், அவற்றில் எழுத்துள்ள மொழிகள் எழுநூற்றுக்கும் உட்பட்டவை எனவும், அதிலும் இலக்கண இலக்கியம் அமைந்த மொழிகள் இருநூற்றுக்கு மேற்பட்டவை எனவும் மொழி அறிஞர் கூறுவர். இவற்றுள், எந்த மொழியும் மூன்றாகவோ இரண்டாகவோ இருக்கவில்லை. எல்லாம் ஒன்றாகவே இருக்கிறது. தமிழ் மொழி ஒன்றை மட்டுமே இயல், இசை, நாடகம், என ஆய்ந்து வகைப்படுத்தி பின் தொகைப்படுத்தி, மூன்றாக அமைத்துக் கூறியுள்ளனர்.

4. எல்லா மொழிகளுக்கும் இலக்கணம் ஒன்றாகவே அமைந்துள்ளது. தமிழ்மொழிக்கு மட்டும் இலக்கணம் கண்ணாற் காணப்படுபவை மனத்தால் நினைக்கப் படுபவை என்

பிரிக்கப்பெற்று, அகம் புறம் என இரண்டாக வகுக்கப் பெற்றுள்ளது.

5. நிலத்தை ஐந்தாக, காற்று நான்காக, மொழியை மூன்றாக, இலக்கணத்தை இரண்டாகக் கண்ட தமிழ் மக்கள், ஒழுக்கத்தை ஒன்றாக வைத்து, மனிதனோடு வைத்து இணைத்து இழைத்து விட்டனர். திணை என்றால் ஒழுக்கம்; உயர்திணை என்றால் ஒழுக்கம் உள்ளவை எனவும், அஃறிணை என்றால் ஒழுக்கமற்றவை எனவும் பொருள் படும்.

இவை அனைத்தையும் கண்டு மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாயின. இவற்றில் மாற்றம் எதையும் எவராலும் காண முடியவில்லை. இது ஒன்றே போதுமானது தமிழ்மக்களின் ஆய்வுக் கலையை அறிந்து மகிழ.

## கட்டடக்கலை

1. திருச்சிக்குக் கிழக்கே பன்னிரண்டு மைல் தொலைவில் கல்லணை ஒன்று கட்டப்பட்டுள்ளது. உலகிலேயே தரையில் கட்டப்பட்டுள்ள அணை இது ஒன்றே. அதிலும் இரு புறங்களிலும் ஐந்தடிக்கு மேற்படாத கரையை வைத்துக்கொண்டே தண்ணீரைத் தேக்கி அத் தண்ணீரை ஆறு பகுதிகளுக்குப் பிரித்து அனுப்புகின்ற கலை ஒரு தனிக்கலையேயாம். மற்ற அணைகள் எல்லாம் இரு புறங்களிலும் மலைகலையே கரைகளாகக் கொண்டதாகவும், பெரும் பள்ளத்தாக்குகளில் நீரைத் தேக்குவதாகவும் அமைந்திருக்கும்.

இதைக் கட்டியவர் கரிகாற்சோழன் என்றும், இவரது காலம் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுவர். இரும்பும்

சிமெண்டும் இல்லாமல், இக் காலப் பொறியியல் வல்லுநர் எவராலும் அணை கட்ட இயலாது. இவ்விரண்டுமே இல்லாது செங்கலும் சுண்ணாம்பும் கொண்டே இவ்வணை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

எப்பொழுதும் நீர் ஓடிக்கொண்டிருக்கும் காவிரியில் எப்படி "அஸ்திவாரம்" போட்டார்கள்? எப்படிக் கட்டினார்கள்? எத்தனை ஆயிரம்பேர் கட்டினார்கள்? கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டி உயர்ந்து கொண்டிருக்கும் அந்த ஈரக் கட்டடம் அடிக்கடி பெருக்கெடுத்து ஓடிவரும் வெள்ளத்தால் எப்படி அழிக்க முடியாமல் இருந்தது? சதுப்பு நிலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் சில ஆண்டுகளுக்குள்ளாகவே வெடிப்பிட்டுப் போவதைக் காணும் நமக்குத் தண்ணீரிலேயே "அஸ்திவாரம்" போட்ட கட்டடம் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் வெடிப்பு ஏற்படாமல் எப்படி இருக்கிறது? என்பன போன்றவைகளை எண்ணும்போது நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. இது பற்றிய பெரிய பெரிய பொறியில் வல்லுநர்களும் புரியாது தவிக்கின்றனர்.

2. கி.பி.1003 ஆம் ஆண்டில் தொடங்கி, 1009க்குள் இராசராச சோழ மன்னனால் கட்டிமுடிக்கப் பெற்ற தஞ்சைப் பெருவுடையார் கோவில் தமிழ் மக்களின் கட்டடக்கலைக்கு ஒரு பெரும் சான்று. இதன் கோபுரத்தின் உயரம் 216 அடி. அதன் உச்சியில் வைக்கப்பெற்ற கல் $25^1/_2$ அடி சதுரமுள்ள ஒரே கல். அதன் எடை 80 டன். அதில் நான்கு புறமும் சுற்றி வைத்திருக்கும் நந்திகளின் எண்ணிக்கை எட்டு. அவை ஒவ்வொன்றின் உயரமும் $5^1/_2$ அடி? நீளம் $6^1/_2$. இவைகளை உச்சிக்குக் கொண்டு போக நான்கு மைல் தூரத்திலிருந்து சாரம் கட்டத் தொடங்கிய இடத்திற்கு

'சாரப்பள்ளம்' என்ற பெயர். இன்றும் இருந்து வருகிறது. இரும்பும் சிமெண்டும் இல்லாத ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கட்டப்பெற்ற இக் கோபுரம் இன்னும் பழுதடையாமல் இருந்து வருவது. தமிழ் மக்களுடைய கட்டடக் கலையின் உயர்வையே காட்டுவதாகும்.

3. திருச்சிக்கு வடக்கே நான்கு மைல் தொலைவில் ஸ்ரீ ரங்கம் என்று ஓர் ஊர் உள்ளது. அது நான்கு புறமும் நீர் சூழ்ந்து ஒரு தீவு. அது ஆற்றிடையிட்ட மேடு; ஆதலின் அரங்கம் எனப் பெயர் பெற்றது. அதனாலேயே அதிலுள்ள திருமாலும் திரு அரங்கர் என்றானார்.

ஊருக்கும் கோயிலுக்கும் ஒரே பெயர். அது திருவரங்கம் என்பது, இக் கோயிலுக்கு ஏழு மதில்கள் உள்ளன. இம் மதில்களுக்குள்ளாகவே வீடுகளும் தெருக்களும் கடை வீதிகளும் அடங்கியுள்ளன.

தெற்குக் கோபுரத்திற்கு மொட்டைக் கோபுரம் என்று பெயர் காரணம், கோபுரம் கட்டப்படாமல் கோபுரத்திற்குரிய அடித்தளம் மட்டும் கட்டப்பட்டிருப்பதே. நாற்புறமும் நான்கு கற்றூண்கள் நிற்கின்றன. கோயிலைச் சுற்றி நான்கு வெளிக்கோபுர வாயில்களிலும் பதினாறு கற்றூண்கள் நிறுத்தப்பெற்றுள்ளன. ஒவ்வொரு தூணின் அகலம் மூன்றடி, நீளம் மூன்றடி, உயரம் 62 அடி, மேலே 42 அடி தெரிவதால் மூன்றில் ஒரு பங்கு இருபதடியாவது மண்ணில் புதைந்திருக்க வேண்டும். இன்றேல் அது வலுவாக நிலைத்து நில்லாது. இவ்வாறு 16 தூண்கள் ஒரே அளவில் எவ்வாறு கிடைத்தன?

இருபுறமும் காவிரியும் கொள்ளிடமும் உள்ள மணற் பரப்பில் 20 அடி ஆழம் எப்படி வெட்ட முடிந்தது? மூன்று அடியிலேயே தண்ணீர் இருக்கும்பொழுது அதற்கும்கீழ் எப்படித் தோண்ட முடிந்தது? அக்காலத்தில் எந்த இயந்திரம் தண்ணீரை இறைத்தது? எந்த இயந்திரம் மணலைக் கொண்டு வந்தது? அல்லது மக்கள்தான் மணலையும் தண்ணீரையும் 20 அடி ஆழத்திலிருந்து எப்படிக் கொண்டு வந்தார்கள்? இவ்வளவு நீளமுள்ள கல் தூண்களை எந்த இயந்திரம் தூக்கி நிறுத்தியது. அல்லது மக்கள்தாம் எப்படித் தூக்கி நிறுத்தினார்கள்?

ஒரு தூணைப் படுக்கவைத்து 20 அடி நீளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்து, பெரிய வடக்கயிற்றைத் தூணில் கட்டி, பல்லாயிரம் பேர் தூக்கி நிறுத்தி இருக்கலாம் என்று ஒரு என்ஜினீயர் சொன்னார். அதன் படி ஒன்றைப் பறித்து நிறுத்தலாம். அதன் பக்கத்திலும் அவ்வாறே மற்றொன்றும் பறித்து நிறுத்தலாம். ஆனால் இவற்றின் எதிர்ப்பக்கத்தில் இரண்டு தூண்களை எப்படி நிறுத்தமுடியும்? என்று வினவியதற்கு, அதை யோசிக்க வேண்டியதுதான் என்று கூறிப் போய்விட்டார்.

திருவரங்கம் ஒரு தீவு என்பதை மேலே கண்டோம். இத்தீவுக்குள் மலைகள் எதுவுமில்லை. இருந்த அறிகுறியுமில்லை. இதற்குள் இவ்வளவு பெரிய தூண்கள் எப்படி உண்டாயின? வெளியிலிருந்தே வந்திருக்கவேண்டும். அக்காலத்தில் ஆறுகளுக்குப் பாலம் கிடையாது. இத்தீவுக்குள் எப்படி இவைகள் வந்தன? தெப்பத்திலும் இவைகளை ஏற்ற முடியாது. மணலிலும் இவைகளை உருட்டிக் கொண்டு வரமுடியாது. இது முடிந்த முடிவு. பின் எப்படி வந்தன?

திருச்சியிலுள்ள தாயுமானவர் மலையையுடைத்தாலும் இவ்வளவு நீளத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தூண்கள்தான் கிடைக்கும். மற்றது முப்பது அடி நாற்பதடியிலும், வலுவற்றுப் பொரிந்து போயும். குட்டை நெட்டையாகவும்,கிடைக்கும். உயரத்தில் மட்டுமல்ல; அகலத்திலும் நீளத்திலும் கூட அளவு வேறுபட்டிருக்கும். யாவும் ஒரே அளவில் அமையாது. ஆனால் திருவரங்கத்தில் தூக்கி நிறுத்தப் பெற்றுள்ள பதினாறு தூண்களும் அகலத்திலோ நீளத்திலே உயரத்திலோ அளவு வேறு பாடின்றி ஒரே அளவாக அமைந்திருப்பது நமக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது. இன்றைய தினம் ஒரு கட்டட ஒப்பந்தக்காரரிடம் இம்மாதிரி பதினாறு தூண்கள் திருவரங்கத்திற்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று ஒரு கட்டட ஒப்பந்தஞ் செய்ய முடியுமா? எத்தனை லட்சம் கொடுத்தாலும் அவை வந்து சேருமா என்பது ஐயப்பாடு. தமிழ் மக்களின் கட்டடக்கலை உயர்வை உலகத்திற்குக் காட்டிக் கொண்டிருக்க இது ஒன்றே போதுமானது.

## சிற்பக் கலை

தமிழகத்தின் சிற்பக்கலை உலகம் முழுவதும் நன்கறிந்த ஒன்று. அது கட்டடக்கலையிலும் மிக உயர்ந்து. தமிழகத்துச் சிற்பக்கலையின் உயர்வைக் காட்டுவது தமிழகத்தின் கருங் கற்களே. பிற இடங்களில் காணும் கருங்கற்களைவிடத் தமிழகத்தின் கருங்கற்கள் தொன்மை வாய்ந்தவை. ஆதலின், அவை வன்மையும் திண்மையும் வாய்ந்து காணப்படுகின்றன.

கருங்கற்களின் தன்மைகளை ஆய்ந்து கூறுகின்ற கலை மிகக் கடினமானது. அது வைரக்கற்களை ஆய்ந்து கூறும் முறையினும் கடினமானது. எந்தக் கல் எதற்கு உரியது என்பதைத்

தேர்ந்தெடுப்பதே ஒரு கலை. அக் கலையில் சிற்பக்கலையினர் சிறந்து விளங்குகின்றனர். மற்றக் கலைகளைவிடச் சிற்பக்கலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கருங்கல் நல்ல வைரம் பாய்ந்தவையாக இருக்க வேண்டும். மிக நுணக்கமான வேலைப்பாடுகளுக்கு அதிக வலிமையுள்ள கருங்கற்களே ஏற்றவை. இன்றேல் அவற்றில் நல்ல உரு அமையாது. அமையவும் அக்கற்கள் சிதறுண்டுவிடும் சிதறாது இருந்தாலும், மிகக்குறைந்த காலத்திலேயே அச் சிற்பங்கள் தேய்ந்தோ உடைந்தோ போய்விடும்.

தமிழ் மக்களின் சிற்பக்கலையைத் தமிழகத் திருக்கோயில் தூண்கள் அனைத்திலும் காணலாம். இவற்றுள் பேரூர்கோயில், மதுரைக் கோயில் தூண்களிலுள்ள சிற்பங்கள் மிகமிக உயர்ந்தவை. உலகம் முழுவதும் உள்ள கலைஞர்களையும் அறிஞர்களையும் இச் சிற்பங்கள் வியப்படையச் செய்து வருகின்றன. காரணம் இக் கருங்கல் தூண்கள் உலகில் சில இடங்களில் காணப்படினும் இது போன்றதொரு சிற்பக்கலை உலகெங்கும் காணமுடியாதது என்பதே.

சில கோயில் தூண்கள் இசைக்கருவிகளாக அமைந்திருக்கின்றன. ஒரே தூணில் பதினாறு வகையாகப் பிரித்துச் செதுக்கப்பெற்றிருக்கிறது. அது இரம்பம் போட்டு அறுத்ததுபோல் காணப்படுகிறது. ஆனால் இரம்பம் நுழைய இடம் இல்லை என்பது மட்டுமல்ல. கண்பார்வை கூட நுழைய இடமில்லை. கண்பார்வை நுழைய முடியாவிடத்தில்கூட கை வேலைகள் நுழைந்திருக்கின்றன. ஒவ்வொரு சிறுபகுதியும் தட்டத்தட்ட ஒவ்வொரு ஒலி கிளம்புகிறது. அனைத்தையும் தட்டி அருமையான இசையை முழக்க முடிகிறது. நமது முன்னோர்களான சிற்பக் கலையினரும் இசைக் கலையினரும்

சேர்ந்து இதை எப்படி ஆய்ந்து கண்டு அமைத்தனர் என்பதை, இன்னும் நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை.

கற்றூண்கள் இசைபாடும் கலைக்காட்சியை மதுரை, திருநெல்வேலி, சுசீந்திரம், ஆழ்வார் திரு நகரி முதலிய திருக்கோயில்களில் இன்றும் கண்டு மகிழலாம். இவற்றுள் நெல்லைக்கோயில் தூண்கள் மிகச் சிறந்தவை.

## ஓவியக் கலை

தமிழ் மக்களின் ஓவியக்கலையும் உலகில் பெயர் பெற்றது. ஒவ்வொரு ஓவியக்கலையிலும் காவியக் கலையைக் காணலாம். காவியத்தில் ஓவியத்தையும் ஓவியத்தில் காவியத்தையும் காண்பதே தமிழ் மக்களின் காவியக் கலையுமாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் முன்னே தமிழ் மக்கள் ஓவியக்கலையில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். ஒவ்வொரு காலத்து ஓவியங்கள் ஒவ்வொரு சிறப்பை உடையவை. இன்று நம் முன்னே பல்லவர் காலத்து ஓவியங்களும், சோழர் காலத்து ஓவியங்களும் காணக் கிடைக்கின்றன. இவற்றுள் சிலவற்றைத் திருச்சிக்குத் தெற்கே புதுக்கோட்டையை அடுத்து 10 மைல் தொலைவிலுள்ள சிற்றன்னை வாயிலிலும், தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் காணலாம். இவ்வோவியங்கள் எழுதப் பெற்று 1300 ஆண்டுகளுக்கு மேலாகியும் வண்ணம் அழியவில்லை. ஓவியத்தில் காணப்படும் நடனமங்கை, அரச அரசியரின் உருவங்களும், அல்லித் தாமரை பூத்த குளத்தின் உருவங்களும், நம் உள்ளத்தைக் கொள்ள கொள்வனவாக அமைந்திருக்கின்றன.

இக்காலத்தைப் போல வெளிநாடுகளிலிருந்து அக்காலத்தில் வண்ணம் வருவதில்லை. எல்லா வண்ணங்களும் தமிழகத்தில் செய்யப் பெற்றவையே. எந்தெந்த மூலிகையிலிருந்து எந்தெந்தச் சாற்றை எடுத்தார்களோ எந்தெந்தச் செடியின் வேரும் பட்டையும் எடுத்தார்களோ? எந்த அளவிற்கு எடுத்தார்களோ? எவ்வளவு காலம் கலந்தார்களோ? எவ்வளவு பொழுது காய்ச்சினார்களோ? ஒன்றும் நம்மால் அறியமுடியவில்லை. இந்த ஒரு கலையை நாம் அறிந்து கொண்டால் இந்த வண்ணக் கலவையை அனுப்பி, உலக முழுவதுள்ள செல்வங்களை இந்தியாவிற்கு நாம் கொண்டுவர முடியும் என் செய்வது? அறிந்தவரும் இல்லை; இதுபற்றி இருந்த நூல்களும் அழிந்து போயின. இதை எண்ண, எண்ண உள்ளம் புண்படுகிறது.

இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் இக்கலை இந்தியாவில் திரும்ப மலரும் என்ற நம்பிக்கையும் அதற்குத் தமிழகம் துணை செய்யும் என்ற நம்பிக்கையும எனக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னே தமிழகத்தின் ஓவியக் கலை!

## சாகாக் கலை

தமிழ்க்கலையில் சாகாக்கலை என்பதும் ஒன்று. இக்கலை தமிழ் மொழியில் மட்டுமே இருந்தது. அது இன்று அழிந்து ஒழிந்தது. எனினும் அக் கலையின் நிழலைப் பதினெட்டுச் சித்தர் பாடல்களில் காணலாம். சாகாக் கலையின் ஆசிரியர்களே சித்தர்கள். அக் கலையின் முடிவெல்லாம் ஒன்றேயொன்று: ''அது அருமையாகப் பெற்ற இவ்வுடலைப் பல நூற்றாண்டுகள் அழியவிடாமல் பாதுகாக்க முடியும்'' என்பதே. அவ்வாறு செய்யாமல் பலர் தமது உடல்களை அழிய விடுவதைக் கண்டு அவர்கள் வந்திருக்கின்றனர்.

"இசைவான் கப்பலினை ஏக வெள்ளத்தில்
எந்நாளும் ஓடாய் என்று
ஆடாய் பாம்பே"

என்பது பாம்பாட்டிச் சித்தர் வாக்கு. இந்த உடம்பில் இந்த உயிர் என்றென்றும் தங்கி இருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

"நந்தவனத்திலோ ராண்டி
நாலாறுமாதமாய் குயவனை வேண்டிக்
கொண்டுவந்தான் ஒரு தோண்டி-அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"

என்பது மற்றொரு சித்தரின் வாக்கு. "இவ்வுலகத்தில் ஒரு ஆன்மா, பத்து மாதமாய்த் தவமிருந்து பிரமாவை வேண்டி ஓர் உடம்பைக் கொண்டு வந்தான். அதைப் பாதுகாக்கத் தெரியாமல், இவ்வுலக இன்பதுன்பங்களில் உழன்று, அடியோடு, போட்டு உடைத்தான்" என்பது இதன் பொருள். இதிலிருந்து மனிதன் இவ்வுடம்பைப் பெற்றது அதை அழியவிடுவதற்கன்று என்பது பெறப்படுகிறது. இன்னும் சில சித்தர்கள் அட்டமாசித்திகளை இக் கலையின் தொடர்பாகக் கூறி இருக்கின்றனர். அவை அரிமா, கரிமா, யகிமா, மகிமா போன்றவை. அரிமா என்பது எறும்பைப் போல உடம்பைச் சிறுத்துக் காட்டுவது. கரிமா என்பது யானையைப் போல உடம்பைப் பெருத்துக் காட்டுவது. லகிமா என்பது காற்றைப் போல உடம்பை எளிதாக்கிக் காட்டுவது. மகிமா என்பது இரும்பைப் போல உடம்பைக் கனமாக்கிக் காட்டுவது. கூடுவிட்டுக் கூடுபாய்ந்து என்பது ஆன்மா ஓர் உடம்பை விட்டு மற்றொர் உடம்பில் பாய்தல் என்பதாகும். இதுவும் சாகாக் கலையின்

மற்றொரு பகுதி. இதன் சாயலை, கருத்தை, இராமலிங்க சுவாமிகளின் அருட்பாக்களில் பல இடங்களிற் காணலாம்.

## ஆட்சிக் கலை

கடந்த இரண்டாவது உலகப் போரில் அபிசீனியா நாடு வீழ்ச்சியுற்ற போது மேலை நாட்டுப் பத்திரிகை ஒன்று தனது தலையங்கத்தில் 1000 ஆண்டுகள் தொடர்ந்து ஒரே ஆட்சியாக அரசு செலுத்திவந்த உலகின் ஒரே நாடு வீழ்ச்சியடைந்தது' என எழுதியிருந்தது. அது உண்மையை உணர வில்லை என்றே தோன்றியது.

2000 ஆண்டுகளுக்கு மேலாகவே தொடர்ந்து ஆட்சி செய்து வந்த உலகின் ஒரே நாடு தமிழகம். பாரத இராமாயண காலத்திலும் தமிழகத்தின்மீது எவரும் படை எடுத்து வந்ததாகச் செய்தியில்லை. அலெச்சாண்டரின் படை காவிரிக் கரையைக்கூடக் கடக்கமுடியவில்லை. இந்தியா முழுவதும் அசோகருடைய கொடி பறந்து கொண்டிருந்த போதும் தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் கொடியே பறந்து கொண்டிருந்தது. அது மட்டுமல்ல, இலங்கை, மலாயா, சிங்கப்பூர், கெடா, பர்மா, ஜாவா முதலிய நாடுகளையும் தமிழகம் ஆண்டு வந்திருக்கிறது. ஆகவே, தமிழ் மொழியில் நாடாளும் கலையுண்டா? என்பது, ஒரு கேள்வியே இல்லை. ஏனெனில், அது நாடாண்ட மொழி; உள் நாட்டை மட்டுமல்ல, வெளிநாடு களையும் ஆண்டுவந்த ஒரு வல்லரசு மொழியும் ஆகும்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் மக்களின், தமிழகத்தின், தமிழ் மொழியின் பல்வேறுகலைகளையும் ஒருவாறு அறியலாம்.

# 12. மருத்துவச் சிறப்பு

## காலம்

சித்த மருத்துவமும் தமிழ் மருத்துவமும் ஒன்றே. இம் மருத்துவம் பிறந்த காலத்தை அறிந்து கூற இயலாது. கூறவேண்டுமானால் தமிழகத்து மண்ணில் செடி கொடிகள் தோன்றிய காலமே தமிழ் மருத்துவம் தோன்றிய காலம் என்று துணிந்து கூறலாம்.

## மொழி

நாட்டு வைத்தியம் என்று பொதுவாகக் குறிப்பிடப்படுவது மூன்றை; ஒன்று சித்த மருத்துவம்; இரண்டு ஆயுர்வேதம்; மூன்று, யூனானி, தமிழ் மருத்துவத்துக்கு மொழி தமிழ்; ஆயுர்வேதத்திற்கு மொழி வடமொழி; யூனானிக்கு மொழி உருது. யூனானிக்குத் திசை மேற்கு; ஆயுர்வேதத்திற்குத் திசை வடக்கு; சித்த வைத்தியத் திற்குத் திசை தெற்கு.

## மருந்து

தமிழ் மருந்துகள் பெரும்பாலும் பொடியும் கியாழமுமாக இருக்கும். இதனை பசுபம் (ப்ஸ்பம்) என்றும் கசாயம் என்று சொல்வர். ஆயுர்வேத வைத்யம் பெரும்பாலும் தைலமும் திராவகமுமாக இருக்கும். யூனானி மருந்துகள் பெரும்பாலும் அல்வாவும் லேகியமுமாக இருக்கும்.

## பசுபம் (பஸ்பம்)

இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு முதலிய உலோகங்கள் ஒன்பது, முத்து, மணி, பவழம் முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாசாணங்கள் ஒன்பது. இதனை முறையே நவலோகம், நவஇரத்தினம், நவபாசாணம் என்பர். இந்த மூவொன்பது இருபத்தேழையும் பசுபமாக்கும் முறை சித்த வைத்தியத்தில் மட்டுமே உண்டு. பிற மருத்துவ முறைகளில் இவற்றில் சில பசுபமாகச் செய்யப்படும். எனினும், அதன் மூலம் சித்தவைத்திய முறையாகவே அமைந்திருக்கும்.

## எளிது

அலபதி முறையில் ஆங்கிலேயர்கள் இவற்றில் சிலவற்றைப் பசுமாக்குகிறார்கள். ஆனால், விலையுர்ந்த இயந்திரங்களில், அதிகச் சம்பளம் வாங்குகிறவர்களின் கண் காணிப்பில், பெரும் பொருட் செலவில் அவை செய்யப் பெறுகின்றன. சித்த வைத்திய முறையிலோ இரண்டு மூன்று 'வரட்டி'களைக் கொண்டு, மூலிகைகளின் சாறுகளைத் தடவி, எளிய முறையில், குறைந்த செலவில், சுருங்கிய நேரத்தில், இவை அனைத்தும் பசுபமாக்கப் பெற்று வருகின்றன.

## உணவே மருந்து

சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருப்பது வியப்பபுகுரியது. காய்கறிகளெல்லாம் மருந்து, கீரை வகைகளெல்லாம் மருந்து, கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், சுக்கு, திப்பலி முதலிய கடைச் சரக்குகளெல்லாம் மருந்து, எள்ளு, கடலை, இலுப்பை, வேம்பு முதலிய எண்ணெய்

வகைகளெல்லாம் மருந்து. சுருக்கமாகச் சொல்லப்போனால் பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் அனைத்துமே மருந்து. எனவே மருந்தாக அமைகின்ற இவையே சித்த வைத்திய முறையாகும். தமிழகத்தைத் தவிர பிறநாடுகளில் உணவுப் பொருள்களே மருந்தாக அமைகின்ற முறையைக் காணமுடியாது. தமிழகத்துத் தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்ப, தமிழ் மக்களுக்குத் தோன்றும் பிணிகளுக்குத் தமிழகத்து மண்ணில் முளைக்கின்ற செடி கொடிகளை மருந்தாகத் தருவதே தமிழ் மருத்துவ முறையாகும்.

## கை வைத்தியம்

தாய்வழி மகள், காதுவழி கேட்டுக் கை வைத்தியமாகச் செய்யப்படுகின்ற ஒரு முறையும், தமிழகத்தில் உண்டு. இதையே சித்த வைத்தியம் என்றும், தமிழ் மருத்துவம் என்றும், வீட்டு வைத்தியம் என்றும் கூறுவதுண்டு. இந்தத் தலைமுறையில் நகரங்களில் வாழ்கின்ற படித்த பெண்கள் இம் முறைகளை அடியோடு கைவிட்டு விட்டனர். எனினும் சிற்றூர்களிலுள்ள எளிய குடும்பங்களில், இம் முறை இன்னும் இருந்து வருகிறது.

## சிறப்பு

சித்த வைத்தியம், காலத்தால் முந்தியதும், விலையால் குறைந்ததும், கையாள்வதில் சிறந்ததும், பலனால் மிகுந்தமும், தகுதியால் உயர்ந்ததுமாகும். இவ்விதமிருந்தும், மக்களின் உணர்ச்சிக் குறைவும், மருத்துவர்களின் முயற்சிக் குறைவும், அரசினர் கவனக்குறையும் ஒன்று சேர்ந்ததினாலேயே, இச் சித்தவைத்திய முறை அழியத் தொடங்கிவிட்டது.

## ஒத்தை மருந்து

சித்த வைத்தியத்தில் ஒத்தை மருந்து என்றும் சில மருந்து உண்டு. அது பூண்டு ஒரு மருந்து. கடுகு ஒரு மருந்து. வெங்காயம் ஒரு மருந்து. தேங்காய் ஒரு மருந்து. அந்த ஒன்றையும் எதையும் சேர்க்காமல், அரைக்காமல், காய்ச்சாமல், நிறுக்காமல், உருக்காமல் அப்படியே கொடுக்கச் சிற்சில நோய்கள் தீரும். இதை வட மொழியினர் 'ஏக மூலிகைப் பிரயோகம்' என்பர்.

## அவற்றுள் சில

1. பாம்பு கடித்தால் வாழைப்பட்டையில் உள்ள சாற்றைப் பிழிந்து கொடுக்க, உடனே குணமாகும்.

2. பூரான் கடித்தால் பனைவெல்லத்தையுண்டால் அதன் தடிப்பு உடனே மாறும்.

3. பிறந்த குழந்தை தவறிப்போய் பெற்ற தாய்க்குப் பால்கட்டி முலைக் குத்தல் ஏற்பட்டால், மல்லிகைப்பூ வைத்துக்கட்ட உடனே குணமாகும். மல்லிகைப் பூ கிடைக்காத காலத்தில் வாழைப் பிஞ்சை அரைத்துத் தடவிக் குணங் காணலாம்.

4. நட்டுவாக்காலி கடித்தால், கொப்பரைத் தேங்காயை மென்று தின்ன, உடனே குணங் காணலாம்.

இந்த ஒத்தை மருந்தும் ஒரே வேளைதான். இரண்டாம் வேளை மருந்து தேவையே இல்லை.

இம்மாதிரி முறைகள் நூறு 'தமிழ் மருந்துகள்' என்ற நூலில் என்னால் வெளியிடப் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு சித்த வைத்திய

சங்கத்தின் தலைவர், அமரர், டாக்டர் எஸ்.எஸ். ஆனந்தம் அவர்களால் பாராட்டப் பெற்றிருக்கிறது.

உயர்ந்த அறுவை மருத்துவ முறைகள் சித்த வைத்திய முறையில் உண்டு. என்பதைக் கண்டு கூறியவரும் அவரே.

## அழிவு

தமிழ் மருத்துவ முறை அழிவதற்குத் தமிழ் மருத்துவர்களும் ஒரு வகையில் காரணராயினர். வறுமை வாய்ப்பட்ட மக்களிற் சிலர், தங்களை மருந்துவர் என்று சொல்லியும், தங்களிடமிருந்து மருந்து என்று கூறியும் தவறு செய்தமையால், பொதுமக்களின் நம்பிக்கை கெடத் தொடங்கியது. மருத்துவ நூல்களில் உள்ள கவிதைகளையும், அதில் மறைபொருளாகச் சொல்லப் பட்ட மருந்துகளின் பெயர்களையும் அறியாமலும் புரியாமலும் இளம் மருத்துவர்கள் சிலர் தவறு செய்யத் தொடங்கினர். இதனால் பொதுமக்கள் சிலர் சிறந்த பண்டிதர்களையும், உயர்ந்த மருத்துவர்களையும், அவர்களிடம் உள்ள தகுந்த மருந்துகளையும் சந்தேகிக்கத் தொடங்கினர். இவையும் சித்த வைத்திய முறை அழிவுக்குக் காரணம்.

## புதைந்து போனது

சித்த வைத்திய முறையில் சிறந்து விளங்கிய மருத்துவ மேதைகளும் பண்டித மணிகளும் பலர், தங்களிடமுள்ள உயர்ந்த முறைகளை வெளியே காட்டாமலும், பிறருக்குச் சொல்லாமலும், தமக்குப்பின் வாரிசாக ஒருவரைத் தேர்ந்தெடுத்துச் சொல்லி வைக்காமலும், அரசினருக்கு அறிவிக்காமலும், நூல்களாக எழுதி

வைக்காமலும் மறைந்து போயினர். மறைய மறைய, ஒவ்வொரு சித்த வைத்தியரையும் புதைக்கப் புதைக்க, சில சித்த வைத்திய முறைகளும் புதைக்கப்பெற்றே போயின.

## அழிந்த காரணம்

இந்தத் தவறை நமக்கு முன்னே வாழ்ந்த பெரியோர்கள் செய்யவில்லை. அவர்கள் தாங்கள் கண்ட அருமையான முறைகளைச் சுவடிகளில் எழுதிவைத்தனர். ஆனால் பாவம், அச்சுப் பொறிகளின்மையாலும், ஓலைகளிலேயே எழுதிக் குவிக்கவேண்டியிருந்தமையாலும், விரிந்த சொற்களில் உள்ள பரந்த முறைகளை, சொற்களைக் குறைத்துக் கவிதைகளாய் அமைத்துச் சுவடிகளாக்கி வைத்துப் போயினர். தமிழ் மன்னர்களுடைய ஆட்சி அழிந்தமையினாலும், ஆங்கில ஆட்சியினரின் அக்கறைக் குறைவினாலும், காலத்தால் பாழ் பட்டும், கடற் கோள்களின் அழிவிற்குள்ளாகியும், கறையான்களால் தின்னப்பட்டும் அவற்றுட் பல சுவடிகள் அழிந்துபோயின. இவை அனைத்திற்கும் தப்பிச் சில நூல்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. இவற்றையுங்கூட, 'பழஞ்சுவடிகளை ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டால் புண்ணியம்' என்று ஒரு கொள்கை பரப்பப் பட்டதினால், அந்தப் புண்ணியத்திற் காசைப்பட்டு மீதமிருந்த பழஞ்சுவடிகளையும் சிலர் ஆற்றில் அள்ளிப் போட்டுவிட்டு அமைதி அடைந்தனர்.

## அழிந்துபோன நூல்கள்

இவ்வாறு அழிந்துபோன மருத்துவ நூல்கள் பல அவையாவன:

1. அகத்தியர் பன்னிருகாண்டம்
2. போகர் எண்ணாயிரம்
3. கோரக்கர் மூலிகைப் பயன்-ஆயிரம்
4. கொங்கணவர்-மூவாயிரத்து நூறு
5. கோரக்கர் வெண்பா-ஏழாயிரம்
6. மச்சமுனி-ஏழு காண்டம்
7. சிவவாக்கியம் - ஐந்து காண்டம்
8. காசிபர் வண்ணம்
9. உரோமமுனி வடுகம்
10. இராமதேவர் சந்தப்பா
11. நந்தீசர் சந்தம்
12. சங்குமாமுனி கலித்துறை
13. திருமூலர் திருமந்திரம்-எண்ணாயிரம்
14. பதஞ்சலி-ஏழு காண்டம்
15. சட்டமுனி நிகண்டு
16. சட்டமுனி - இரண்டாயிரத்து எழுநூறு
17. காலங்கிநாதர்-நாலுகாண்டம்
18. போகர்-எழுநூறு முதலியன.

## இரத்தக் கண்ணீர்

இவை அனைத்தும் தமிழகத்துச் சான்றோர்களாகிய சித்தர் பெருமக்களால் தமிழ் மொழியில் தோற்றுவிக்கப் பெற்றவை. இவையனைத்தும் அழிந்துபோயின என்பது சிற்சில பாடல்கள் கிடைத்திருப்பதாலும், சிற்சில நூல்களில் மேற்கோளாக வந்திருப்பதாலும் அறிய முடிகிறது. இன்னும் என்னென்ன

பெயரில் இருந்தனவோ? அவற்றுள் என்னென்ன புதையல்கள் இருந்தனவோ? அவற்றின் ஆசிரியர்கள் யார் யாரோ? அறிய முடியவில்லை அவை அனைத்தும் இன்று இருந்தால்......? நினைத்தால் நெஞ்சம் புண்ணாகிறது. அழுதால் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீரே சொட்டுகிறது. என்ன செய்வது?

## முடிவு

இந்த நிலை மாறவேண்டும். மக்கள் சித்த வைத்தியத்தின் அருமை பெருமைகளை உணரவேண்டும். தாய்வழி மகள் வாய்வழி கேட்டுக் கை வைத்தியமாகச் செய்யும் முறை தமிழகத்தின் மலரவேண்டும். மருத்துவத்திற்காகச் செலவழிக்கும் பெரும்பொருள் மிச்சப்பட வேண்டும். சிற்றூர்களிலெல்லாம் தமிழ் மருத்துவ மனைகள் திறக்கப்பட வேண்டும். சித்தவைத்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும் தமிழகத்தில் பெரும்பான்மையாகத் திறக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, சித்த வைத்தியத்திற்கு என ஓர் வாரியம் அமையவேண்டும். இதுவே தமிழக மக்களின் விருப்பம். இதை இன்று நமது தமிழக அரசு செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வாழ்க தமிழினம்! வளர்க தமிழ் மருத்துவம்!

# 13. இசைச் சிறப்பு

இசை பலவகை. அதில் தமிழிசை ஒருவகை. இரண்டெழுத்துள்ள இச்சொல் பொருள் அமைதியுடையது, சுதி, பாட்டு, பண், தாளம், பக்கயியம், பாடுவோர் உள்ளம், கேட்போர் உள்ளம் ஆகிய அனைத்தும் இசைந்தால்தான் அதற்கு இசையென்று பெயர். இல்லாவிட்டால், அதன் பெயர் "இரைச்சல்" என்றாகிவிடும்.

இசைக்குப் 'புகழ்' என்றும் பெயர் உண்டு 'ஈதல்' இசைபட வாழ்தல்' என்ற சொற்றொடரும் இதனை மெய்ப்பிக்கும். 'இசையென்னும் எச்சம் பெறாவிடின் வசையென்ப வையத்தார்க் கெல்லாம்' என்பதும், 'வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்' என்பதும், வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய வாழ்வாரே வாழாதவர் என்பதும் வள்ளுவர் வாக்கு. இதிலிருந்து வசைக்கு எதிர்மறை இசை என்பதை நன்கறியலாம். அக்காலத்து மன்னர்களைப் பாணரும் புலவரும் இசையின் மூலமே புகழ்ந்ததால், இப் பொருள் வந்தது போலும்!

இறைவனையே இசைமயமாகக் கண்டவர்கள் தமிழ் மக்கள். ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவனே இறைவன் எனக் குறிப்பிட்டனர். இறைவனை இசை கொண்டு பாடியே வணங்கினர். இம்முறையில் பண்ணோடு கூடிய பக்திப்பாடல்கள் பல தமிழ் மொழியில் உள்ளன. இவற்றுள் தேவாரம், திருவாசகம்,

நாலாயிரப்பிரபந்தம், திருப்புகழ் முதலியவை குறிப்பிடத்தக்கன. இந் நூல்களின் உள்ள பக்திப் பாடல்கள் தமிழ்த்தேனொடு இசைத் தேனையும் கலந்து சுவை தருவன வாகும்.

தமிழிசை தோன்றிய காலம், தமிழ்மொழி தோன்றிய காலமே! தமிழ் மக்களின் எண்ணம், சொல், செயல், வாழ்வு அனைத்தும் இசை கலந்தவையாகவே காட்சியளிக்கின்றன, இவற்றுள் பிறந்த நாள் இசை, பாலூட்ட இசை, தாலாட்ட இசை, சோறூட்ட இசை, (திருப்பள்ளி இசை), படுக்க இசை, இறங்க இசை, பள்ளியில் வைக்க இசை, நாற்று நட, களை பிடுங்க, கதிரறுக்க, தாளடிக்க, போரடிக்க வண்டியோட்ட, நெல்லுக்குத்த, சுண்ணம் இடிக்க, ஏற்றம் இறைக்க எல்லாவற்றிற்குமே இசை!

திருமணத்தில் நலங்கு இசை, வளைகாப்பில் இசை, வாழ்த்த இசை! எல்லாம் இசைமயமே யாம். சுருக்கமாகக் கூறவேண்டு மானால், தமிழகத்தில் கல்லும் இசைக்கேட்டு நகருகிறது (ஏலக்கத்தா); கப்பலும் இசை கேட்டு ஓடுகிறது. (ஜலசா); பாம்பும் இசைக் கேட்டு ஆடுகிறது. (மகுடி); பசுவும் இசை கேட்டுக் கறக்கிறது (கறவைப் பாட்டு); தமிழகத்தில் செத்த பிணமுங்கூட ஒப்பாரி இசை கேட்டுத்தான் சுடுகாட்டுக்குப் போகிறது என்றும் கூறலாம்.

இசை என்பது வாயினால் பாடுவது மட்டுமல்ல; கருவியினால் இசைப்பதும் இசையேயாகும். அவை தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி என மூவகைப்படும். இவற்றை விழா நாட்களில் மட்டுமல்ல, பிற நாட்களிலும் இசைத்து முழக்குவது மட்டுமல்ல, பிற நாட்களிலும் இசைத்து முழக்குவது உண்டு. மணப்பறை, பிணப்பறை, போர்ப்பறை, விழாப்பறை என்ற சொற்கள் இவற்றை மெய்ப்பிக்கின்றன.

தமிழ் இசை வேறு கருநாடக இசை வேறு எனச் சிலர் கருதுகின்றனர். அது தவறு. தமிழ் இசை என்பது தான் கருநாடக இசை; கருநாடக இசை என்பதுதான் தமிழ் இசை இரண்டும் வேறுபட்டவை அல்ல; ஒன்றே.

வடக்கில் உள்ள பல நாடுகளில் கடல் இல்லை. அதனால் கடற்கரையும் இல்லை. தமிழகமோ மூன்று பக்கங்களிலும் கடல்களையும் கடற்கரைகளையும் கொண்டது. சோழ மண்டலக் கடற்கரை, பாண்டி மண்டலக் கடற்கரை, சேர மண்டலக் கடற்கரை என்ற பெயர்கள் இன்றும்கூட மக்கள் துறையிலும் ஆட்சித் துறையிலும் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும் இதனால் தமிழகத்தைக் 'கரை நாடு' என்றும், தமிழிசையைக் 'கரை நாட்டு இசை' என்றும் வடக்கேயுள்ளவர் குறிப்பிட்டனர். அதையே பலரும் கர்நாட்டிசை யென்றனர். ஆங்கிலேயனும் அதை 'கர்நாட்டிக் இசை' என்றான். ஆகவே கரை நாட்டு இசை என்பது தமிழ் இசையைக் குறிப்பதே.

காலப்போக்கில் வடமொழியின்மீது பற்றும், வட நாட்டின்மீது காதலும் கொண்ட சிலர், கரைநாட்டு இசையை வடநாட்டு இசை என்றும், தமிழ் இசை இதற்கு முற்றும் மாறானது என்றும் கூறத் தலைப்பட்டு விட்டனர். தமிழில் உள்ள இசைக்கலை நூற்கள் அனைத்தையும் வடமொழியில் பெயர்த்து எழுதினர். இந்த அளவோடு அவர்கள் நின்றுவிடவில்லை. தமிழ் மொழியில் உள்ள பாடல்களை வெறுத்து ஒதுக்கவும் தொடங்கினர். உயர்ந்த பக்திப்பாடல்களை இசையரங்கில் பாடாது விட்டனர். உயர்ந்த கருத்துக்கள் அமைந்த சித்தர்களின் பாடல்களையும், நாட்டுப்பாடல்களையும் அவர்கள் நாடோடிப் பாடல்கள் என்று எழுதியும் பேசியும் வந்தனர். இது தமிழை வெறுப்பதும், தமிழ்

அறிஞர்களை இழிவுபடுத்துவதுமாகுமெனவும், தமிழ் மக்களும் தமிழறிஞர்களும் நாடோடிகளல்லர் எனவும், அவர்கள் தமக்கென்று ஒரு நாடும் தமக்கென்று ஒரு மொழியும் உள்ளவர் எனவும், தமக்கென ஒரு நாடும் மொழியும் இல்லாதவரே நாடோடிகள் எனவும் முழக்கிய பின்னரே, தமிழ்ப் பாடல்களை 'நாடோடிப் பாடல்கள்' எனக் கூறிய நாடோடிகள் திருந்தினர். அரசாங்கத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பதிவேட்டிலும் இந்த நாடோடிப் பாடல் என்ற சொல் அழிக்கப்பெற்று. 'நாட்டுப்பாடல்' என்று திருத்தப்பெற்றது. கலைக்களஞ்சியத்தில் உள்ள நாடோடிப் பாடல்கள், நாடோடி இலக்கியங்கள், நாடோடி ஓவியங்கள் என்பனவும், அதன் மறுபதிப்பில் திருத்தப் பெற வேண்டும்.

தமிழ் இசைக் கருவிகள் தமிழகத்தில் தமிழனால் கண்டுபிடிக்கப் பெற்றவை. அவை மூவகை என மேலே கண்டோம். அவற்றிற்குப் பெயரிட்ட தமிழ் மக்களும்; தமிழுக்கே சிறப்பாக உள்ள 'ழ' என்ற எழுத்தை அச்சொல் ஒவ்வொன்றிலும் வைத்துத் தோல் கருவிக்கு 'முழவு' என்றும், துளைக்கருவிக்கு 'குழல்' என்றும், நரம்புக் கருவிக்கு 'யாழ்' என்றும் பெயரிட்டிருக்கின்றனர். இவை தமிழனின் சொந்தச் சொத்து. தமிழனால் கண்டு பிடிக்கப் பெற்றவை. தமிழ் எழுத்து உள்ளவை என அன்றே பதிவு செய்திருப்பது எண்ணி எண்ணி வியக்கக் கூடியதாகும்.

இக் கருத்தைப் பின்வரும் தமிழ்ப் பாடல் ஒன்று ,அரண் செய்கிறது. ''மக்கள் முதல்முதல் விலங்குகளை வேட்டையாடி, இறைச்சிகளை உண்டு, அதன் தோல்களை மரக்கிளைகளில் காய வைத்தனர். காய்ந்த தோலின்மீது உலர்ந்த குச்சிகள் உராய்வதைக்கொண்டு தமிழன் தோற்கருவியைக்

கண்டுபிடித்தான். வேட்டையாடுகின்றபொழுது, வில்லின் நாணினின்று வெளிவரும் ஒலியைக்கொண்டு, நரம்புக் கருவியைக் கண்டுபிடித்தான். ஆற்றின் இரு கரைகளிலும் இருக்கின்ற நாணற்செடிகளில் உள்ள தீஞ்சுவையை வண்டுகள் துளைத்து உண்டபிறகு, அதனுள்ளே தென்றல் காற்று புகுந்து ஓசையிடுவதைக் கண்டு, தமிழன் துளைக் கருவியைக் கண்டுபிடித்தான்.''

'ஏழிசை மோகன்' என்பது ஒரு சோழ மன்னனது பெயர் இராவணன் தென்திசை மன்னன். அவனுக்குத் 'தென்னவன்' என்றும் பெயர். அவனது யாழிசையைக் கேட்டு, இறைவன் மகிழ்ந்து வரம் அளித்தான் என்பது இராமாயண வரலாறு. இதிலிருந்து தமிழிசையின் காலம் இராமாயண காலத்திற்கும் முற்பட்டது என்று தெரிகிறது, மொகஞ்சதரோவில் அகழ்ந்து எடுக்கப் பெற்ற இசைக் கருவிகள், 5000 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழிசைக் கருவிகள்.

தமிழிசையிலும் இசைக் கருவிகளிலும் யாழுக்கு முதன்மையுண்டு யாழ் நான்கு வகைப்படும். அவை செங்கோட்டி யாழ், மகர யாழ், சகோட யாழ், பேரியாழ் எனப் பெயர் பெறும். ஒவ்வொன்றிற்கும் நரம்புகளின் எண்ணிக்கையும், நீளத்தின் அளவும் உண்டு. அந் நரம்புகளை மிழற்றுவதற்கும் இலக்கணம் உண்டு. இசையறிஞர்கள் அவற்றைத் துருவி ஆராய்ந்து, மூவகைப் படுத்தி நல்ல தமிழாலே அவற்றிற்குப் பெயரும் கண்டிருக்கின்றனர். அவை தெறித்தல், வருடுதல், உராய்தல் என்பன. யாழ் செய்யும் முறையையும், குழல் செய்யும் அளவையும், முழவு செய்யும் வகையையும், இவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும், பண் முதலியவைகளுக்கு

இலக்கணங்களையும் வகுத்துத் தமிழ் இசை அறிஞர்கள் பல்வேறு நூல்களை இயற்றி இருந்தனர். அவைகளிற் பல அழிந்தொழிந்து போயின.

அவற்றில் என்னென்ன செல்வங்கள் இருந்தனவோ? அதன் ஆசிரியர் எவரெவரோ? அவை தோன்றிய காலம் எதெதுவோ? அவை போன்ற நூல்கள் இன்னும் என்னென்னவோ? அவை அழிந்தது எப்படியோ? யார் காண்பது? எவ்ரால் அறிய முடியும்? மேலே கண்ட நூல்கள் இருந்து அழிந்தன என்பதைச் சில நூல்களில் காணப்படும் உரைகளால், உரைகளில் காணப்படும் மேற்கோள்களால், அறிய முடிகிறது.

அழிந்தவை போக இருக்கின்ற நூல்களாலும், உரைகளாலும், பாரம்பரியமாகக் கையாளப்பெற்று வருகிற இசை மரபுகளாலும், தமிழிசையின் தொன்மையை, சிறப்பை, தகுதியை, முறையை, அளவை, உயர்வை, ஒருவாறு காணமுடிகறிது. அவற்றுள் அடியில் குறிப்பிடுவன சில. அவையும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

## இசைக்கலை மூவகை

அவை ஆடல் பாடல், கொட்டு எனப் பெறும்.

### 1. ஆடல்

இக் கூத்து 11 வகைப்படும். இவற்றுள் நின்றாடுதல் ஆறும், வீழ்ந்து ஆடுதல் ஐந்தும் ஆகும். இவற்றை (அ) ''அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல்லுடன் நின்றாடலாறு'';

(ஆ) துடி, கடையம், பேடு, மரக்காலே, பாவை, வடிவுடன் வீழ்ந்தாட லைந்து'' என்ற நூற்பாக்களால் அறியலாம்.

## 2. பாடல்

பாட்டு என்பது அக நாடகங்களுக்கும் புற நாடகங்களுக்கும் உரிய உருவாகும். அக நாடகங்களுக்குரிய உரு, 'கந்தம்' முதல் 'பிரபந்தம்' ஈறாக உள்ளவை 28; புறநாடகங்களுக்குரிய உரு, 'தேவபாணி' முதலாக 'அரங்கொழிச் செய்யுள்' ஈறாகச் செந்துறை விகற்பங்கள் அனைத்துமாகும். (அ) 'கந்தம்' என்பது அடிவரையறையுள்ளது; ஒரு தாளத்தாற் புணர்ப்பது. (ஆ) 'பிரபந்தம்' என்பது அடிவரையறை இல்லாதது; பல தாளத்தாற் புணர்ப்பது.

## 3. கொட்டு

கொட்டு என்பது கொட்டப்படுகின்ற இசைக் கருவிகள்; இவை பாட்டுகுரியன; நாட்டியத்திற்குரியன; இவ்விரண்டிற்கும் உரியன என மூவகைப்படும். (அ) பாட்டிற்குரியன 'கீதாங்கம்' எனப்படும். பாடல் என்பது இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம் உச்சம் ஆக எண்வகைப் பயனுடையதாகும். (ஆ) நாட்டியத்திற்குரியவை, 'நிருத்தாங்கம்' எனப்படும். இது அகக்கூத்து, புறக்கூத்து இரண்டிற்கும் உரியது. கீற்று, கடிசரி முதலிய தேசிக்குரிய கால்கள் 14, சுற்றுதல், எறிதல் முதலாகிய வடுகுக்குரிய கால்கள் 14. உடல் தூக்கு முதலாகிய உடல் வர்த்தனை 9–ஆக 47ம் இதற்குரியன. (இ) இரண்டிற்கும் உரியது. ஆடலுக்கும், பாடலுக்கும் உரிய இது 'தாளம்' ஆகும். கொட்டு, அசை, தூக்கு, அளவு என இது நான்கு நிலைகளையுடையது.

'கொட்டு' ஆவது அமுக்குதல். 'அசை' ஆவது தாக்குதல் 'தூக்கு' ஆவது தூக்கித் தாக்குதல். 'அளவு' ஆவது, ஓசையின் எல்லை.

## 4. ஓசையின் அளவு

கொட்டு அரை மாத்திரை, அசை ஒரு மாத்திரை, தூக்கு இரண்டு மாத்திரை. அளவு மூன்று மாத்திரை. கொட்டுக்கு வடிவு க. அசைக்கு வடிவு எ. தூக்கு வடிவு உ. அளவுக்கு வடிவு ஃ

## 5. தாள வகை

அரை மாத்திரையுடைய ஏகதாளம் முதல், 16 மாத்திரையை யுடைய உலோசனம் வரையுள்ள 14 தாளங்களும் புறக்கூத்துக்கு உரியன. ஆறன் மட்டம், எட்டன் மட்டம், தாள வொரியல், தனிநிலை வொரியல் என்பனவும், ஒன்றன்பாணி முதல் எண்கூத்துப்பாணி வரையுள்ள பதினொரு தாள விகற்பங்களும், முதல், நடை, வாரம் முதலியனவும் அகக் கூத்துக்கு உரியன.

## 6. தூக்கு

இத் தாளங்களின் வழி வரும் தூக்குகள். அவை செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத் தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத் தூக்கு, கழாத் தூக்கு, நெடுந்தூக்கு என எழுவகைப்படும்.

## 7. பிண்டி, பிணையல்

பிண்டி என்பது எழிற்கை. பிணையல் என்பது தொழிற்கையாகும். பிண்டி, ஒரு கையால் காட்டும் அவிநயங்கள்;

பிணையல் இரு கைகளால் காட்டும் அவிநயங்கள் என்றாகும். இவற்றுள் ஒற்றைக்கை அவிநயம் 33 வகை: அவை, 1. பதாகை, 2. திரிபதாகை, 3. கத்திரிகை, 4. தூபம், 5. அராளம், 6. இளம்பிறை, 7. சுகதுண்டம், 8. முட்டி, 9. கடகம், 10. சூசி, 11. கமல கோசிகம், 12. காங்கூலம், 13. கபித்தம், 14. விற்பிடி, 15. குடந்தை, 16. அலாபத்திரம், 17. பிரமரம், 18. தாம்பிரசூடம், 19. பசாசம், 20. முகுளம், 21. பிண்டி, 22. தெரிநிலை, 23. மெய்நிலை, 24. உன்னம், 25. மண்டலம், 26. சதுரம், 27. மான்தலை, 28. சங்கு, 29. வண்டு, 30. இலதை, 31. கபோதம், 32. மகரமுகம், 33. வலம்புரி என்பவை. இரட்டைக்கை அவிநயம் 15 வகைகளாகும். அவை: 1. அஞ்சலி, 2. புட்பாஞ்சலி, 3. பதுமாஞ்சலி, 4. கபோதம், 5. கற்கடம், 6. சுபத்திகம், 7. கடகா வருத்தம், 8. நிடதம், 9. தோரம், 10. உற்சாவிகம், 11. புட்டபுடம், 12. மகரம், 13. சயந்தம், 14. அபயவத்தம், 15. வருத்தமானம் என்பவை. இவை 48ம் எவ்விதம் கை விரல்களால் காட்டுவது என்பதற்கு நூற்பாக்கள் இன்னும் இருக்கின்றன.

## 8. குரவை, வரிக்கூத்து

குரவைக் கூத்து வரி கூத்து என்பன அவரவர் பிறந்த நிலத்துத் தன்மையும், தொழில் தன்மையும் தோன்ற நடித்தல் வரி என்பது பெரும்பாலும் வேற்றுருத் தாங்கி நடிப்பது முல்லை நிலத்தில் ஆய்ச்சியர் குரவையும், குறிஞ்சி நிலத்தில் குன்றக் குரவையும், நெய்தல் நிலத்தில் கானல் வரியும், பாலை நிலத்தில் வேட்டுவ வரியும், மருத நிலத்தில் ஊர்சூழ் வரியும் நிகழ்ந்தனவாகச் சிலப்பதிகாரத்தில் அமைத்திருப்பதை அறிந்து மகிழுங்கள்.

## 9. யாழ்

பேரியாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என யாழ் நால்வகைப்படும் பேரியாழுக்கு நரம்பு, 21. மகர யாழுக்கு நரம்பு 17 சகோட யாழுக்கு நரம்பு 16. செங்கோட்டி யாழுக்கு நரம்பு 7. ஆகும்.

## 10. குழல்

இது புல்லாங்குழல், வேய்ங்குழல், வங்கியம், வேணு எனப் பெயர் பெறும். அது மூங்கிலாலும் வெண்கலத்தாலும்; சந்தன மரம், செங்காலி மரம், கருங்காலி மரம், ஆகிய மரங்களாலும் செய்யப்பெறும். இவற்றுள் மூங்கில் உயர்தரம்? வெண்கலம் நடுத்தரம்; மற்றவை கீழ்த்தரம் ஆகும்.

## 11. முழவு

முழவு என்பது தோல் கருவிகளாகும். இவை அகமுழவு, அகப்புற முழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமை முழவு, நாண் முழவு, காலை முழவு, என ஏழு வகைப்படும் (அ) 'அகமுழவு, மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படாகம், குடமுழா என்பன (ஆ) 'அகப்புறமுழவு' தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் என்பன. (இ) 'புறமுழவு' கணப்பறை முதலியன. (ஈ) 'புறப்புறமுழவு' நெய்தற்பறை முதலியன (உ) 'பண்ணமை முழவு' நிசாளம், துடுமை, முரசு திமிலை என நான்கு (ஊ) 'நாண்முழவு' நாழிகைப்பறை. (எ) 'காலை முழவு' துடி என்றாகும். இவற்றுள் (அ) உயர்தரம், (ஆ) நடுத்தரம், (இ) கடைத்தரம்.

## 12. ஏழிசை

ஏழிசைகளும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனக் குறிப்பிடப்பெறும். இதனை, வடநூலார் சட்சம், ரிடபம், மத்திமம், காந்தாரம், பஞ்சமம், தைவதம், நிடாதம் எனப் பெயரிட்டு, இச் சொற்களின் ஏழு முதல் எழுத்துக்களைக் கொண்டு ச,ரி,க,ம,ப,த,நி, எனச் சுர வரிசையிட்டனர். இது தமிழிசையாய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழிசையாகும். இதனை 'ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ வெனும் இவ்வேழெழுத்தும் ஏழிசைக்கு குரிய'' என்ற திவாகரச் சூத்திரம் மெய்ப்பிக்கும்.

## 13. பெயர்

தமிழில் இசை, பண் என்பவைகளை வடமொழியாளர் சுரம், இராகம் எனக் கூறுவர். தமிழில் அலகு என்று சொல்லப்படுவதே வடமொழியில் சுருதி என்றாகும். தமிழில் ஆளத்தி என்று கூறுவதையே வடமொழியினர் ஆலாபனம் எனக் கூறுகூர்.

## 14. அலகுகள்

ஏழிசைகளாகிய குரல், துத்தம் முதலியவைகளுக்குத் தமிழில் 22 அலகுகள் கூறப்பட்டுள்ளன. வடமொழியிலும் இவ்வாறே 22 சுருதிகள் கூறப்பட்டுள்ளன. என்றாலும், தமிழ் அலகுகள் 4,4,3,2,4,3,2; வடமொழி அலகுகள் 4,3,2,4,4,3,2, என ஆகும். இந்த இசை வரிசையைத் தமிழில் கோவையெனவும் கூறுவதுண்டு. இவ்வரிசை அமைப்புகள் ஆயப்பாலை, சதுரப்பாலை, வட்டப்பாலை திருகோணப்பாலை என நால்வகைப்படும். இவற்றினின்றும் தோன்றுவதே இசையாகும்.

## 15. இசையின் எண்

இவ்வாறு பிறக்கும் இசையின் எண்ணிக்கை 11991 ஆகும். இதற்கு எடுத்துக் காட்டாக உள்ள நூற்பா அடியிற் கண்டவாறு சிதைந்து காணப்படுகிறது.

*உயிர் மெய் அளவு உரைத்த ஐம்பாரிலும்*
*உடல் தமிழ் இயல் இசை ஏழுடன் பகுத்து*
*மூவேழ் பெய்த.................*
*தொண்டு மீண்ட பன்னீராயிரம்*
*கொண்டனர் இயற்றல் சொல வல்லோர் கடனே!*

இதில் தொண்டு மீண்ட என்பது 'ஒன்பது குறைந்த' என்றாகும். உயிர் மெய் அளவு ஆவது அவரவர் விரற் கிடையில் 96 விரற்கிடையாம், மேலே $47^1/_2$யும் கீழே $47^1/_2$யுமாக விரற்கிடை அளவுகளைக் கழித்தால், இடையில் இருக்கிற ஒரு விரற்கிடை அளவே மீதியாகும். இந்த விடத்தில்தான் மூலாதாரம் இருக்கிறது. இந்த மூலாதாரத்திலிருந்துதான் ஒலி கிளம்புகிறது.

இம் மேற்கோளாக வந்த நூற்பாவும், சுவை 9-க்கும் நடிப்பு 24-க்கும் மேற்கோளாக வந்த நூற்பாக்களும் எவர் பாடியதோ? நூல் எதுவோ? எக் காலத்ததோ? எப்பொழுது, எவ்வாறு அழிந்ததோ? அறிய முடியவில்லை.

இன்னும், இசை இலக்கணத்தில் கவிஞன் அமைதியும், ஆடலாசிரியன் அமைதியும், பாடலாசிரியன் அமைதியும், யாழ் ஆசிரியன் அமைதியும், குழல் ஆசிரியன் அமைதியும், முழவு ஆசிரியன் அமைதியும், ஆடு மகளிர் அமைதியும், பாடு மகளிர்

அமைதியும், அரங்கின் அமைதியும், குழல் செய்யும் முறையும் கூறப்பெற்றுள்ளன. இவை அனைத்தும் விரிக்கிற் பெருகும்; நினைக்கில் நெஞ்சு இளகும்.

## 16. அழிந்துபோன இசை நூல்கள்

சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசைநுணுக்கம், இசை விளக்கம், பஞ்சமா பாரதீயம், பண்அமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக் கூறு, பாடற்பண்பு, தாளவகையோத்து, தாளசமுத்திரம், கருவி இலக்கணம், ஆளத்தி அமைப்பு முதலியன. அவையும் இன்று இருந்தால்.....?

இதைப் படிக்கும் தமிழ் மக்கள், தமது முன்னோர்கள் துருவி ஆராய்ந்து கண்டுபிடித்து எடுத்து வகைப்படுத்தி, தொகைப்படுத்தி, முறைப்படுத்தி, பெயர்ப்படுத்தித் தந்துள்ள தமிழிசைச் செல்வத்தைக் கண்டு மகிழ்ந்து அவர்கட்குக் கலை வணக்கமும், தலைவணக்கமும் செய்தாக வேண்டும்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழிசையின் பெருமையை ஒருவாறு அறியலாம்.

# 14. நாடகச் சிறப்பு

பழம் மூன்று; மா, பலா, வாழை, தமிழ் மூன்று: இயல் இசை, நாடகம், இரண்டுக்கும் உள்ள தொடர்பு மூன்று. இயற்றமிழ் மிகக் கடினம்; அது பலாப்பழத்தைச் சுவைப்பது போன்றது. பலாப்பழத்தைத் தூக்கினால் கனமாக இருக்கும்; அழுத்தினால் முள் குத்தும்; கிழித்தால் பால் வடியும்; உள்ளே கையை விட்டால் சக்கை வரும். அதனையும் மீறிச் சுளையை எடுத்தாலும் கொட்டையையும் கொப்பூழையும் நீக்கித்தான் சுவைக்க முடியும். இசைத் தமிழ் அவ்வளவு கடினமானதன்று; அது மாம்பழத்தைப் போன்றது. இராகத்தோடும் தாளத்தோடும் இணைந்துள்ள இசையைச் சுவைப்பது தோலொடும் கொட்டையோடும் இணைந்துள்ள சதையைச் சுவைப்பது போன்றது. நாடகத் தமிழ் இவ்விரண்டையும்விட மிகமிக எளிது. அது வாழைப்பழத்தைத் போன்றது. தோலை உரித்ததுமே முழுதும் சுவைக்கலாம்; நாடகத்தைப் பார்த்ததுமே, முழுதும் சுவைக்கலாம். எப்படி இம் முக்கனியும், முத்தமிழும்?

"நாடகம்" என்பதை நாடு-அகம் எனப் பிரித்தால், அகத்தில் நாடுதல் என்றாகும். உள்ளத்தே உணர்ச்சியைத் தூண்டுவது என்று பொருள்படும். நாம் ஒரே இடத்தில் இருந்து கொண்டு காடு, மலை, நாடு, நகர், ஆறு, அரண்மனை அனைத்தையும் ஒரே இடத்தில் பார்த்தும், பல வகையான வேடங்களைத் தாங்கிய பல்வேறு மக்களின் போக்கு, பேச்சு, குணம், செயல் அனைத்தையும் ஒரே நேரத்தில் கண்டும், கேட்டும், உணர்ச்சி பெறுகிற ஒரே கலைக்கூடம் நாடகமேயாகும்.

நடிப்பது என்பது ''போலி''; அதாவது உண்மையல்லாதது என்று பொருள்படும். நடிப்பு அனைத்தும் நடிப்பாகி விடாது. நடிப்பில் ஒரு துடிப்புக் காணப்பெறுவதே நடிப்பாகும். அத் துடிப்பும் ஆரவாரத்தில் தோன்றாமல் அமைதியில் தோன்றியாக வேண்டும். அதை உணர்ச்சியற்ற நடிகரிடத்தில் ஒருபோதும் காண முடியாது.

மாற்று உடை, மாற்று நடை, மாற்று வேடம், மாற்றுப் பேச்சு மட்டும் ஒரு நடிகனுக்குத் துணை செய்யாது. அவன் மாற்று மனமும் படைத்தாக வேண்டும். இன்றேல் நடிப்பு நடிப்பாயிராது, தேவையெல்லாம் ''உணர்ச்சி'' ஒன்றேயாகும், உணர்ச்சியற்ற நடிப்பில் உயிர் தோன்றாது. உயிர்த் துடிப்போடு ஒருவன் நடிக்க வேண்டுமானால், அவன் தன்னை அடியோடு மறந்து, தன் வேடத்திற்குரிய பாத்திரமாகவே மாறிவிட வேண்டும்.

''சத்திரமதி வேடம் பூண்ட ஒருவன் ஐந்து பிறவியெடுத்தாக வேண்டும். முதலில், அவன் தன்னைப் பெண்ணாகவே நினைத்துக் கொள்ள வேண்டும். (2) அதுவும் அரசனுடைய மனைவியாக எண்ணிக் கொள்ள வேண்டும். (3) அதுவும் ஒரே குழந்தையுள்ளவளாகக் கருதிக்கொள்ள வேண்டும். (4) அதுவும் இறந்துவிட்டதாக அறிய வேண்டும். (5) அதுவும் திடீரெனப் பாம்பு கடித்து இறந்ததாக உணர வேண்டும். அப்போதுதான் சந்திரமதி வேடம் பூண்டவனிடம் நடிப்பில் ஒரு துடிப்பும், சிறப்பும் காணப் பெறும். இன்றேல் சேலையணிந்து வந்து ஒரு பொம்மை, ''அப்பா மகனே பாம்பு'' எனப் பாடிப் போனதாகவே தோன்றும்.

''மகா பாரதம்'' நாடகம் நடந்து கொண்டிருந்தது. அதில் ''சகுனி'' யாக நடித்துக் கொண்டிருந்தவரைக் கண்டு, முன்

வரிசையில் உட்கார்ந்திருந்த ஒருன் ஆத்திரப்பட்டு, அவர்மீது தன் மிதியடியை யெடுத்து வீசி விட்டான். அதை அந்த நடிகர் எடுத்துக் கண்ணாடிப் பெட்டியில் வைத்து, தான் பெற்ற பரிசுகளுள் எல்லாம் மிக உயர்ந்த பரிசாக எண்ணி மகிழ்ந்து, நீண்ட நாள் பாதுகாத்து வந்தார்; நடிகரும் தன்னைச் சகுனியாகவே மாற்றிக் கொண்டார். மிதியடியை வீசியவரும் அவரை உண்மையான சகுனியென்றே நினைத்து விட்டார். இன்றேல் அந்த நடிகருக்கு இவ்வளவு உயர்ந்த பரிசு ஒருபோதும் கிடைத்திராது.

60 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் திரு. சீனிவாசம் பிள்ளை நாடகக் கம்பெனியின் சம்பூரண இராமாயணத்தைக் காணும் பேறு பெற்றேன். பரதன் இராமனைத் திரும்பவும் நாட்டிற்கு அழைக்க வரும் காட்சி அண்ணனைக் காட்டிற்கு அனுப்பியதோடு நில்லாமல், கொல்லவும் வருகிறான் பரதன் என்பது இலக்குவனின் எண்ணம். தன் வில்லில் நாணேற்றி, பரதனையும் அவனோடு வருகிறவர்களையும் கொன்றுவிடத் துடிக்கிறான். ''என்னத்திற்குப் பரதன் படை வந்தது?'' என்ற பாட்டு, ஆர்ப்பாட்டமான நடிப்பு; அரங்கே நடுங்குகிறது. இராமனின் இடதுகை இலக்குவனின் முதுகைத் தடவுகிறது. சிறிது அமைதி எனினும், இலக்குவனுடைய பெருமூச்சு அடங்கவில்லை. பரதன் வந்தான்; இராமனுடைய திருவடிகளில் வீழ்ந்தான். இராமன் இலக்குமணனைக் கடைக்கண்ணால் நோக்கினான். அவ்வளவுதான்; இலக்குவனுடைய தலை இடப்புறம் சாய்ந்தது; கோதண்டம் தரையில் ஊன்றியது. அதன் நுனியிற் கட்டியிருந்த மணி ஓர் அடி அடித்தது. சபையின் கைதட்டல் ஒலிவானைப் பிளந்தது. ஆடாமல் பாடாமல் அசையாமல் பேசாமல் இராமன் வேடந்தாங்கியவனுடைய கைகளும், கண்களும், நடித்த நடிப்பு எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. இக்

காட்சி இன்னும் என்னுள்ளத்தை விட்டு அகலவில்லை. அது நடிப்பு! அவன் நடிகன்!

திருச்சியில் மணிக்கூண்டருகில் பட்டப்பகல் 12 மணிக்கு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி. சித்திரை மாத வெயில் கொதிக்கும் தரையில் பத்துமாதம் நிறைந்த பிள்ளைத்தாய்ச்சி மகப்பேறு பெறும் நிலையிலே மயக்கமிட்டுக் கிடக்கிறாள். அருகில் மூன்று குழந்தைகள். அடுத்துக் கணவனின் கவலை கொண்ட முகம். பெருங்கூட்டம் கூடிவிட்டது. காசுகள் குவிந்தன. சிறிது நேரத்தில் அவளும் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். மக்களனைவர்க்கும் ஒரே மகிழ்ச்சி நானும் அவள் கணவனிடம் மெதுவாக அந்தப் பிள்ளைத்தாய்ச்சியை வீட்டுவரை அழைத்துவரச் சொன்னேன். அவள்மிகவும் தொல்லைப்பட்டு வருந்தி மெதுவாக நடந்து வந்தாள். என் மனைவி அவளைக் கண்டதுமே கலங்கிப் பழைய சோறும், பழைய சேலையும் வழங்கினாள். அவளும் வாய் நிறைய வாழ்த்தினாள்.

உடனே என் மனைவியிடம், ''அவள் பிள்ளைத் தாய்ச்சியல்ல; வயிற்றில் துணிமூட்டை வைத்துக் கட்டியிருக்கிறாள்; எடு அதை'' என்றேன். என் மனைவி நம்பவில்லை பின் கட்டாயப் படுத்தினேன். எடுக்கப் போனாள். அவ்வளவுதான்; அவள் துள்ளியெழுந்து தன்னையும் தன் கணவனையும் மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டு உண்மையையும் ஒப்புக் கொண்டாள். மிகுந்த கட்டாயத்தின் பேரில் வயிற்றில் கட்டியிருந்த துணியையும் எடுத்துக் காட்டினாள். பசிக் கொடுமையால் செய்த இத் தவறை மன்னியுங்கள் என்றும் வேண்டினாள். அவளுக்கு அடி விழும் என அனைவரும் நம்பினார்கள்.

இறுதியில் நான் ஐந்து ரூபாயும் கொடுத்து அனுப்பி வைத்தேன். என் மனைவி கேட்டாள்; ''நான்தான் ஏமாந்து சேலையைக் கொடுத்து விட்டேன், நீங்கள் தெரிந்தும் அந்த மோசக்காரிக்குப் பணம் ஏன் கொடுத்தீர்கள்?'' என்றாள் .''நான் வழங்கியது அவளது நடிப்பிற்குப் பரிசு'' என்றேன். ''அவள் நடிக்கிறாள் என்பதை முதலில் நீங்கள் எப்படிக் கண்டீர்கள்?'' என்றாள் என் மனைவி. ''மூன்று மாதங்களுக்கு முன் தஞ்சாவூருக்குத் தண்டலுக்குப் போன பொழுது இரயிலடியில் ஒரே கூட்டமாக இருந்தது. இவளேதான், அங்கும் இப்படியே செய்தாள். நானும் ஓர் அணாப் போட்டுவிட்டுத்தான் போனேன். இப்பொழுது வந்த சந்தேகமெல்லாம், பதின்மூன்று மாதமாகியும் இன்னுமா குழந்தை பிறக்க வில்லை என்பதுதான்'' என்றேன். எல்லோருக்கும் ஒரே சிரிப்பு!

பட்டப்பகல் 12 மணி; நாடக அரங்கில்லை ஒப்பனையில்லை; முகத்தில் பவுடர்கூட இல்லை. நான்கு புறங்களில் எந்தப் புறத்திலும் அடைப்பில்லை. அவள் இரண்டு கால்களையும் நீட்டிவிட்டு, வயிற்றைத் தடவி, உடம்பை நெளிந்தது, வாயில் உஸ் உஸ் உச் உச்சு கொட்டி, நெற்றியிலிருந்து கொட்டும் வியர்வையைத் தன் வலதுகையின் ஆள்காட்டி விரலால் வழித்துச் சொட்டுச் சொட்டாக வடியவிட்டுக் காட்டிய நடிப்பு இன்னும் என் உள்ளத்தில் பதிந்திருந்தது, அது நடிப்பு! அவள் நடிகை!

நல்ல கதை; உயர்ந்த கருத்து; குறைந்த பாடல்; சிறிய வசனம்; அமைதியான நடிப்பு; விறுவிறுப்பான போக்கு; இவை அனைத்தும் அமைந்த நாடகமே வெற்றி நாடகமாக ஒளிவீசும். மற்றவை வெற்று நாடகமாகவே போய்விடும்.

நாடக வகைகளில் ''ஒருகள நாடகம்'' ''ஓரங்க நாடகம்'' என்பது ஒன்று. அது காட்சிகளை மாற்றாமல் ஒரே காட்சியை வைத்து, ஒரு சிறு கதையை அமைத்து, ஓர் உண்மையைப் புலப்படுத்த நடத்திக் காட்டுவதாகும். பல காட்சிகளைக் கொண்ட ஒரு பெரிய நாடகத்தைப் பலமணி நேரம் பார்த்து ஓர் உண்மையை அறிந்து கொள்வதைவிட, ஒரு காட்சியில் ஒரு நாடகத்தைக் கண்டு, ஓர் உண்மையை அறிவதை மக்கள் அதிகமாக விரும்புவர். ஒரு கள நாடகம் பொழுதைக் குறைத்துப் பயனைப் பெருக்குவதில் தலைசிறந்ததாகும்.

நாடக வகைகளில் இன்பியல் நாடகம், துன்பியல் நாடகம் என இருவகையுண்டு. இவை முறையே இன்பத்தை முடிவாகக் கொண்டதும், துன்பத்தை முடிவாகக் கொண்டதுமாகும். இவை வெற்றிபெறுவதும், வீழ்ச்சியடைவதும், காண்கின்ற மக்களின் விருப்பத்தைப் பொறுத்ததாக இருக்கும்.

நாடகக்கலை ஓர் உயர்ந்த கலை. பல மாதங்கள் பல மேடைகளிற் பேசி மக்கள் உள்ளத்தில் பதிய வைக்கின்ற கருத்துக்களை ஒரு நாளில் ஒரே நாடகத்தில் மூலம் பதிய வைத்துவிட முடியும். அவ்வாறே பல ஆண்டுகள் படித்து அறியக் கூடியவைகளை, பல மாதங்கள் கேட்டு அறியக் கூடியவைகளை, ஒரு நாளில், ஒரே நாடகத்தைப் பார்த்து அறிய முடியும்.

''நாடகமே உலகம்'' என்பது வாக்கு. ''உலகமே நாடகமேடை'' என்பது மற்றொரு வாக்கு. ''நாடகத்தால் உன்னடியார்போல் நான் நடித்தேன்'' என்பது ஒரு பக்தரின் வாக்கு. ''முன்பு நாங்கள் மட்டுமே நடித்தோம். இப்போது எல்லோருமே நடிக்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்பது ஒரு நடிகரின் வாக்கு. ''மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தும் கலைகளில் நாடகக்

கலையைவிடச் சிறந்த கலையில்லை'' என்பது பேராசிரியர் சம்பந்த முதலியார் அவர்களின் வாக்கு.

நாடக உலகம் ஒரு தனி உலகம், அங்கு ஏழையும் செல்வரும் இல்லை. அரசனும் சேவகனும், அமைச்சனும் பிச்சைக்காரனும் திரைக்குப் பின்னே கைகோத்து மகிழ்ந்திருப்பர். இக் காட்சியைப் பிற உலகத்திற் காண முடியாது.

ஒழுக்கமுள்ளவர் எழுத்துக்குத் தனி எடையுண்டு. ஒழுக்கமுள்ளவர் சொல்லுக்குத் தனி எடையுண்டு என்பது மட்டுமல்ல, ஒழுக்கமுள்ளவர் நடிப்புக்கும் ஒரு தனி எடையுண்டு. இந்த உண்மையை ஒவ்வொரு நடிகரும் உள்ளத்தே வைத்துப் பாதுகாத்தாக வேண்டும். அண்மைக் காலம்வரை ஒழுக்கத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் ஒழுங்கு முறைக்கும் முதலிடம் கொடுத்து நாடகக் கலையைக் காப்பாற்றி வந்தவர்களும் வளர்ந்து வருபவர்களும் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஸி. கண்ணையா அவர்கள்; நவாப் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள்; டி.கே.எஸ். சகோதரர்கள் ஆவர்.

இக் காலத்தில் நாடகம் நடத்துவோரிற் சிலர் காட்சி அமைப்புகளில் கவனத்தைச் செலுத்துவதில்லை.

''யாரும் அற்ற கானகத்தில்'' என்று நடிகன் பாடிக் கொண்டிருப்பான். அக் காட்டில் ஆர்மோனியக்காரன் வாசித்துக் கொண்டிருப்பான்.

''மனமோகன'' மானே உன்மீது மையல் கொண்டேனே'' எனப் பெண் வேடம் பூண்டவனைப் பாராமல், ஆர்மோனியக் காரனைப் பார்த்துப் பாடிக் கொண்டிருப்பான் நடிகன்.

திரையருகில் நின்று இருவர் இரகசியம் பேசுகிற காட்சி வரும். அவர்களுக்குப் பின்னால் ''இராஜ வீதி'' திரையிடப் பெற்றிருக்கும்.

கொலைக்களத்திற்குப் போகிற கோவலன் சரளி வரிசை பாடுவான். ''இராமா நீ சமானம் எவரு'' என்ற பாடலை இராவணன் பாடிக்கொண்டிருப்பான்.

நல்லதங்காள் வேடம் போட்டிருப்பவளுக்கு வயது 20 இருக்கும். அவளருகில் நிற்கும் பிள்ளைகள் ஏழில் மூத்தவனுக்கு வயது 25 இருக்கும்.

இராவணன் வேடம் போட்டிருப்பவன் எடை 80 பவுண்டும், சீதை வேடம் பூண்டவளின் எடை 160 பவுண்டும் இருக்கும். இருந்தால் நாடகம் எப்படி இருக்கும்?

இவை அனைத்தும் காணச் சகியாதவை; நாடகம் நடத்துவோர் எதில் கவனம் செலுத்தாவிடினும் வேடம் பூண்டவருக்கு வேண்டிய வயதிலும், உடல் அமைப்பிலும் கருத்தைச் செலுத்தியாக வேண்டும்.

எவ்வளவு குறைபாடுகளிருப்பினும், ஆதரவற்றிருப்பினும், இன்றைய இந்தியாவில் நாடகக்கலையில் தலை சிறந்து விளங்குவது தமிழகமே யாகும். இதை எண்ணி மகிழ்ச்சியடைய நமக்கு உரிமையுண்டு. நாடகக் கலைஞர்களைப் பாராட்டித் தீரவேண்டிய கடமையும் நமக்குண்டு.

இன்றுதான் தமிழகத்தில் நாடகக்கலை உச்ச நிலையில் இருக்கிறது என்பதல்ல. பழந்தமிழகத்தில் அதாவது 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே உச்ச நிலையில் இருந்திருக்கிறது. உலகுக்கு நாடகக்கலையை வழங்கியதே

தமிழகம்தான் எனத் துணிந்து கூறலாம். நாடகக் கலையைப் பற்றிய, நடிப்புக் கலையைப்பற்றிய உறுப்புக்களை ஆள்வது பற்றிய, முகத்தில் காட்டவேண்டிய மாறுதல் பற்றிய இலக்கண நூல்கள் பல அக் காலத்திலேயே தமிழகத்தில் தோன்றியிருந்தன. அவற்றில் ஒன்று கூட இன்று இல்லை அனைத்தும் அழிந்துபோய் விட்டன. சில நூல்களில் மேற்கோளாக வந்த பாடல்களிலிருந்தும், உரையாசிரியர்களின் குறிப்புகளிலிருந்தும் அந் நூல்களில் சிலவற்றின் பெயர்களை மட்டுமே அறிய முடிகிறது.

## அழிந்துபோன நாடக நூல்கள்

கூத்துவரி, உளநூல், சயந்தம், செயிற்றியம், கூத்த நூல், பரதம், பரத சேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், முறுவல், விளக்கத்தார் கூத்து, அடிவைப்பு, அரி வரிசை, உறுப்பாட்சி, முத்திரை விளக்கம், மெய்ப்பாட்டியல், முகக்குறிமுறை, கைக்குறி முறை, இன்னுரைக் குறிமுறை, நிருத்த நூல், தாளக் கட்டு, நாட்டிய விளக்கம் முதலியன.

இன்னும் என்னென்ன நூல்கள் இருந்தனவோ? அவற்றில் என்னென்ன செல்வங்கள் இருந்தனவோ? அவை அனைத்தும் ஒரேடியாய் எப்படி அழிந்தனவோ? என எண்ணும்பொழுதே நமதுள்ளம் வருந்துகிறது. நமது புண்பட்ட உள்ளத்திற்கு இதுபோது ஆறுதல் அளிப்பதெல்லாம் சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்று காதையும், அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள விளக்க உரையும் மட்டுமே. அவற்றிலிருந்து பல உண்மைகளை அறிய முடிகிறது.

சிலப்பதிகாரத்தை இயற்றமிழ்ப் புலவர்கள் மட்டுமே விரும்பிப் படித்து வருகின்றனர். இசைப் புலவர்களும், நடிப்புப் புலவர்களும்

அதைக் கட்டாயம் படித்துத் தீரவேண்டும். இன்றேல் அவர்களின் கலையில் ஒளியிராது. இயலில் இசையும், நாடகமும் அடங்காது. ஆனால் நாடகத்தில் இயலும் இசையும் அடங்கும். இயலுக்கு ஒரு புலமை போதும். இசைக்கு இயல், இசை ஆகிய இரு புலமையும் வேண்டும். ஆனால் நாடகத்திற்கோ இயல், இசை, நாடகம் ஆகிய முப் புலமையும் வேண்டும். இன்றேல் நாடகத்தில் கலையும் இராது; களையும் இராது.

'ஆடுகள மகளிர், பாடுகள மகளிர் தன்மைகள் எப்படி இருக்கவேண்டும்?' என்பதற்கு இலக்கணங்கள் உள்ளன; ஆடலாசிரியன் அமைதி, பாடலாசிரியன் அமைதி, குழலாசிரியன் அமைதி என, அவர்களுக்கும் இலக்கணங்கள் உள்ளன. அந்த இலக்கணப்படி இன்று ஆடுவோரையோ, பாடுவோரையோ, ஆசிரியரையோ அரங்குகளில் காண்பது அரிதாகவே இருக்கிறது.

''அரங்கு'' என்பதங்கு உரையாசிரியர் ஆடுகளமும் பாடுகளமும் எனப் பொருள் கூறுகிறார். இக் கலைக்களம் நெற்களம், போர்க்களம் போல இடத்தைக் குறிக்கிறது. இச் சொற்கள் இன்பம் பயப்பன.

## அரங்கின் அமைப்பு

ஒரு நாடக அரங்கு எப்படி இருக்கவேண்டும் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

(அ) அரங்கு அமைக்கும் இடம் சாம்பல் தரை, பொடித்தரை, களித்தரை, உவர்த்தரை, ஈளைத்தரை முதலியன கூடாது.

(ஆ) துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்கமும் உண்டு பண்ணும், ஆதலின் அவை நீக்கப் பெற்றன.

(இ) ஊரின் நடுவில் இருத்தல் வேண்டும். அதுவும் தேரோடும் வீதிகள் ஒன்றின் எதிர்முகமாக அமைதலும் வேண்டும்,

(ஈ) அரங்கிற்குப் "புகுமுக வாயில்" "புறப்படு வாயில்" என இரு வாயில்கள் அமைத்தாக வேண்டும்.

(உ) அரங்கு ஏழுகோல் அகலமும், எட்டுக்கோல் நீட்டமும், ஒரு கோல் உயரமும் இருத்தல் வேண்டும். ஒரு கோல் என்பது உத்தமன் கைப்பெரு விரல் 24 கொண்டது. உத்தமர் என்போர் ஒல்லியும் தடிப்பும், நெட்டையும் குட்டையும் இல்லாதவர். இந்த அளவின்படி ஒரு கோல் என்பது ஏறத்தாழ ஒரு முழம் ஆகிறது. இது நமக்கு வியப்பைத் தருகிறது.

## நாடக இலக்கணம்

### 1. ஆடல்

இருவகை: இவை சாந்தி, விநோதம் என்பன; அகக்கூத்து, புறக்கூத்து எனவும் கூறப்பெறும். இவ்விரண்டுவகைக் கூத்தும் 11 தொழிற்பெறும். முதல்வகை அல்லியம் முதலிய 6, மறுவகை துடி முதலாகிய 5.

(அ) சொக்கம். இது சுத்த நிருத்தம். அதாவது தாள லயத்தை ஆதாரமாக உடையது. (ஆ) 'மெய்த் தொழில்; இது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இது உள்ளக் குறிப்பை ஆதாரமாக

உடையது. (இ) 'அபிநயம்' இது கதையைத் தழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்பக் கையைக்காட்டி உணர்த்துவது. (ஈ) 'நாடகம்' இது கதை தழுவி வருகின்ற கூத்து.

இவை நான்கும் நாயகன் சாந்தமாக ஆடும் கூத்தாதலின் 'சாந்திக் கூத்து' எனப் பெறும். பின் வரும் ஏழும் 'விநோதக் கூத்துகளாம் (உ) இது காமமும், வென்றியும் பொருளாகக் கொண்டும், குரவைச் செய்யுளைப் பாட்டாகக் கொண்டும், ஏழு அல்லது ஒன்பது பேர் கை பிணைந்தாடுவது. (ஊ) 'கலிநடம்'; இது கழாய்க் கூத்து எனப்பெறும். (எ) 'குடக்கூத்து' தலையில் கும்பம் வைத்து ஆடுவது. (ஏ) 'கரணம்' வீழ்ந்து ஆடுதல். (ஐ) 'தோற்பாவை'; தோலால் பாவை செய்து ஆட்டுவது. இது பொம்மையாட்டம் எனப்பெறும். (ஒ) 'நகைக் கூத்து'; நகைப்பிற்குரிய வேடிக்கைக் கூத்துகளாம்.

## 2. பலவகைக் கூத்து

இதுவன்றி, வசை என இருவகைப்படும். மாற்றான் ஒடுக்கமும் மன்னன் உயர்ச்சியும் 'வென்றி' யாகும். பலவகை உருவமும் பழித்துக் காட்டுவது 'வசை' யாகும்.

## 3. கூத்தின் இலக்கணம்

இது நிலை, பாதம், அங்கம், வருத்தனை, நிருத்தக் கை என ஐவகைப்படும். இதில் நிலை அறுவகை; பாதம் ஐவகை; அங்கம் பதினாறு வகை; வருத்தனை நான்கு வகை; நிருத்தன்கை முப்பது வகை; ஆக வகை 61.

## 4. விலக்கு உறுப்பு

இது வேந்து விலக்கு, படைவிலக்கு, ஊர் விலக்கு என்னும் விலக்குக்களாகிய பாட்டுகளுக்கு உறுப்பாய் வருவது. இது 14 வகையாகும். 1. பொருள் 2. சாதி, 3. யோனி, 4. விருத்தி இந் நான்கும் ஒரு வகை; 5. அவை, 6. குறிப்பு, 7. சமத்துவம், 8. அபிநயம், இந்நான்கும். மற்றொரு வகை; 9. சொல், 10. சொல்வகை, 11. வண்ணம், 12. வரி; இந்நான்கும் வேறொரு வகை 13. சந்தி, 14. சேதம்; இவ்விரண்டும் பிறிதொரு வகை.

இப் பதினான்கு துறைகளுக்கும் விளக்கங்கள் உள. நான்காவதாக உள்ள விருத்திக்கு ஒரு விளக்கத்தை இதன் அடியிற் காண்க. 'விருத்தி' என்பது நாடகத்தின் இயல்பு என்பதாகும். இவ்வியல்பு நால்வகைப்படும். (அ) 'சாத்துவதி' அறம் பொருளாகக் கொண்டு தெய்வ மானிடர் தலைவராக வருவது (ஆ) 'ஆரபடி' பொருளைப் பொருளாகக் கொண்டு வீரமகன் தலைவனாக வருவது, (இ) 'கைசிகை', இன்பம் பொருளாகக் கொண்டு காமுகராகிய மக்கள் தலைவராக வருவது. (ஈ) 'பாரதி' என்பது கூத்தன் தலைவனான் நடன், நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது என்றாகும்.

## 5. சுவை

சுவை ஒன்பது வகைப்படும். அவை: வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, இன்பம், துன்பம், வெகுளி, நகை, சமநிலை என்பன. இதனை 'நவரசம்' என்பர் வடமொழியாளர். உயர்ந்த நாடகத்தில் இவ் ஒன்பது சுவையும் காணப்பெறும். சிறந்த நடிகர்கள் இத்தனை சுவைகளையும் தம் முகக்குறிகளினாலேயே காட்டி மகிழ்விப்பர்.

## 6. நடிப்பு

இது 24 வகைப்படும். இதனை அவிநயம் எனக் கூறுவதும் உண்டு.

1. வெகுண்டோன், 2. ஐயமுற்றோன், 3. சோம்பினோன், 4. குடித்தோன், 5. மகிழ்ந்தோன், 6.அழுக்காறுடையோன், 7. இன்ப முற்றோன், 8. தெய்வ முற்றோன், 9. மயக்கமுற்றோன், 10. உடன்பட்டோன், 11. உறங்கினோன், 12. உறங்கி விழித்தோன், 13. செத்தோன், 14. மழையில் நனைந்தோன், 15. பனியில் நனைந்தோன், 16. வெயிலிற் காய்ந்தோன், 17. வெட்கமுந்றோன், 18. வருத்தமுற்றோன், 19. கண்ணோவுற்றோன், 20. தலை நோவுற்றோன், 21. நெருப்புப்பட்டோன், 22. சீதமுற்றோன், 23. வெப்பமுற்றோன், 24. நஞ்சு உண்டோன்-என்பனவாம்.

இவை 24-க்கும் சுவை 9-க்கும் சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்று காதைக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டிய பாடல்கள் 33-ம் நல்விளக்கம். அவை ஒவ்வொன்றும் நடிப்புக் கலையின் திறத்தைக் கூறி நம்மை வியப்படையச் செய்கிறது.

இவற்றுள் 24-ஆவதாகிய நஞ்சுண்டோன் நடிப்புக்கு உரிய இலக்கணப் பாடலை மட்டும் இங்குக் காணுங்கள்.

*"கொஞ்சிய மொழியும் கூரெயிறு மடித்தலும்*
*பஞ்சின் வாயிற் பனிநுரை கூம்பலும்*
*தஞ்சம் மாந்தர் தம் முகம் நோக்கிஓர்*
*இன்சொல் இயம்புவான் போல்இயம் பாமையும்*
*நஞ்சுண் டோன்தன் அவிநயம் என்ப"*

பிறவற்றிற்கும் இவ்வாறு நூற்பாக்கள் உள்ளன.

## 7. சொல்

சொல் என்பது ஓர் உறுப்பு. அது உட்சொல் புறச்சொல், ஆகாயச் சொல் என மூவகைப் படும். (அ) உட்சொல் என்பது நெஞ்சோடு கூறுவது. (ஆ) புறச் சொல் என்பது கேட்போர்க்கு உரைப்பது. (இ) ஆகாயச் சொல் என்பது தானே கூறுவது.

## 8. சொல் வகை

சொல்வகையாவது சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என நால்வகைப்படும். (அ) சுண்ணம்; நான்கடியால் வருவது. (ஆ) சுரிதகம்: எட்டடியால் வருவது. (இ) வண்ணம்: பதினாறு அடிகளால் வருவது (ஈ) வரிதகம்; முப்பத்திரண்டு அடிகளால் வருவது இந்நான்கின் விளக்கமும் விரியும் ஆதலின் வண்ணத்தின் விளக்கத்தை மட்டும் அடியிற் காண்க:

(அ) பெருவண்ணம்; இது 6 வகை. (ஆ) இடை வண்ணம்: இது 21 வகை. (இ) வனப்பு வண்ணம்: இது 41 வகை. ஆக வகை 3-க்கும் வண்ணம் 68 ஆம். தொல்காப்பியர் 70 வண்ணம் கூறியுள்ளார். 100 வண்ணம் கூறினாரும் உளர்.

## 9. வரி

வரி என்பது வரிக்கூத்துக்கு உரிய பாடல். இது பண், திறம், செயல், பாணி என நால்வகைப்படும். வரிப்பாடல்கள் திணைநிலைவரி, கிணைநிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி எனப் பலபடப் பாகுபாடு எய்தும்.

இவற்றின் இயல்புகள் அனைத்தையும் சிலப்பதிகாரத்தின் கானல் வரியுள்ளும், வேனிற் காதையுள்ளும் விளங்கக் காணலாம்.

இதுகாறும் நீங்கள் கண்ட நாடகக் கலையின் இலக்கணம் ஒரு நூலின் ஒரு பகுதியிற் கிடைத்த ஒரு சிறு நிழல். இதைக் கொண்டு பார்க்கும் பொழுதே பழந்தமிழகத்தின் நாடகக் கலையின் பெருமை அளவிட்டுக் கூறமுடியாதது எனத் தோன்றுகிறது. இவ்வளவு உச்ச நிலையில் இருந்த கலையில், பெரும்பகுதி அழிந்தே போயிற். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்தில், பாதுகாக்கப் பெற்று வந்தது இக்கலை, மன்னர்கள் மறைய மறைய இக்கலையும் மறைந்து வந்தது போலும்! அவற்றை முழுதும் மறையவிடாமல், வறுமை வாயப்பட்டபோதும் தமது வயிற்றிலும், வாயிலும், கையிலும், காலிலும் வைத்துக்கட்டிப் பாதுகாத்து வந்து, இன்று நம்மிடம் ஒப்புவித்திருக்கிற இயல், இசை, நாடக முத்தமிழ்ப் புலவர்களுக்கும் நாம் வணக்கம் செலுத்தியாக வேண்டும். எப்போதும் செலுத்தாவிடினும், நாம் கொண்டாடுகிற முத்தமிழ் விழாக்களிலேனும் கட்டாயம் செலுத்தியாக வேண்டும்.

இதுகாறும் கூறியவைகளால் நாடகத்தின் சிறப்பை ஒருவாறு அறியலாம். முடிவாகக் கூறுமிடத்து, நாடகத்தமிழ், மொழியின் ஒரு பிரிவு. நாடகக்கலை தமிழகத்தின் செல்வம். ஆகவே, அது தமிழனின் சொந்தச் சொத்து அவற்றை வளர்த்து வாழவேண்டியதும், முடியாவிடில் அழியவிடாமலாவது பாதுகாக்க வேண்டியதும் இன்றைய தமிழ் மக்களின் கடமையாகும்.

வாழட்டும் நாடகக் கலை !

# 15. இலக்கியச் சிறப்பு

## இலக்கியம் என்றால் என்ன?

இலக்கு என்பது குறி. இலக்கியம் என்றால் குறிக்கோளுடையது என்பது பொருள். இதை ''இலட்சியம்'' என வட நூலாரும் கூறுவர். தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. காரணம், சாகா இலக்கியங்கள் பல அதில் இருந்துவருவதே.

## எது சிறந்த இலக்கியம்?

பல்லாண்டுகளுக்கு முன்பு, 'எது சிறந்த இலக்கியம்?' என்ற கேள்வி மேலை நாட்டிலிருந்து கிளம்பியது. இக் கேள்விக்கு பிரஞ்சுப் பேராசிரியர் ஒருவர், ''நாட்டை மொழியை, மக்களை முன்னே வைத்துச் செய்யப்பெறும் இலக்கியங்களே தலைசிறந்த இலக்கியங்கள்'' என விடை கூறினார். ஆம், அரசியலை, சமயத்தை, தனிமனிதனை முன் வைத்துச் செய்யப்பெற்ற இலக்கியங்கள் அனைத்தும் அழிந்து போயின; அழிந்தும் வருகின்றன.

## இலக்கியப் பிரிவுகள்

தமிழைப் போலவே இலக்கியங்களின் பிரிவும் மூவகைப்படும். அவை கவிதை இலக்கியம், உரைநடை இலக்கியம், பேச்சு இலக்கியம் எனப் பெறும்.

## இலக்கியங்களின் வகைகள்

சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம், இக்கால இலக்கியம் என இலக்கியங்களும் மூவகையாகும்.

## சங்க கால இலக்கியம்

சங்க காலம் என்பது, தமிழ் மன்னர்கள் சங்கம் வைத்து நடத்தித் தமிழ்வளர்த்த காலம். அச் சங்கங்களும் முதல், இடை, கடை என மூன்று. அவற்றின் காலமும் முறையே ஐயாயிரம், மூவாயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும், கவிதை இலக்கியங்கள், அதையடுத்துக் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களும் கவிதைகளாகவே அமைந்தன. அவற்றுள் பல இன்றில்லை.

தமிழகத்தில் அடிக்கடி கடற்கோள்கள் ஏற்பட்டுத் தமிழ் நிலப்பரப்பையும், தமிழ்ச் சுவடிகளையும் அழித்து விட்டன. நாலாந்தா நூல்நிலையம் எரிக்கப்பெற்ற போதும் பல அரிய தமிழச்சுவடிகள் எரிந்துபோயின. மக்கள் சுவைக்க வில்லை என்பதை அறிந்த கறையான்கள், நன்றாகத் தமிழ்ச் சுவடிகளைத் தின்று தீர்த்து விட்டன. இன்னும் பல வகையிலும் பல நூல்கள் அழிந்து போயிருக்கின்றன. அவ்வாறு,

## அழிந்துபோன இலக்கிய நூல்கள்

அகத்தியம், அடிநூல், அவிநயம், அவிநந்தமாலை, ஆசிரியமாலை, ஆசிரிய முறை, ஆசிரிய முறி, ஆன்மவியல், ஆட்சி நூல், இந்திரம், இந்திர காளியம், இளந்திரையம், எதிர் நூல்,

ஐந்திரம், ஒப்பு நூல், கச்சபுடம், கடகண்டு கணக்கியல், கலியாண கதை, கலைக்கோட்டுத் தண்டு, கலிப்பாடல், கலிமயக்கிறை, களரியா விரை, களவுநூல், காலகேசி, காக்கைபாடினியம், குருகு, குண்டலகேசி, கோள் நூல் (வான நூல்), சங்க யாப்பு, சயந்தம், சாதவாகனம், சிந்தம், சிற்பநூல், சிறுகுரீஇயுரை, செயன்முறை, தந்திரவுரை, தகடூர் யாத்திரை; தும்பிப் பாட்டு, தேகிமாலை, நாககுமாரம், நீலகேசி, பஞ்சமரபு, பதினாறு படலம், பரிநூல், பழைய பரிபாடல்கள், பல்காப்பியம், பல்காயம், பன்மணிமாலை, பன்னிரு படலம், பறவைப்பாட்டு, பாண்டிய மரபு, பாட்டு மடை, பாண்டியன் பாதம், புணர்பாவை, புதையல் நூல், பூத புராணம், பெரியம்மம், பெரும் பாரதம், பெரு வல்லம், பெருவஞ்சி, போக்கியல், மணியாரம், மந்திர நூல், மயேச்சுர யாப்பு, மாபுராணம், மார்க்கண்ட காஞ்சி, முதுநாரை, முதுகுருகு, முத்தொள்ளாயிரம், முப்பெட்டுச் செய்யுள், மூவடி முப்பது, வஞ்சிப் பாட்டு, வளையாபதி, வாய்ப்பியம், வியாழமாலை, விசாகன் பாரதம்,' வீரமாலை, வீரவிளக்கம், வீரவணுக்கம், வெண்டாளி, வேந்தியன் முறை, வைப்பியம், வைரமாலை, வச்சத்தொள்ளாயிரம் முதலியன.

அந்தோ! இவற்றுள் என்னென்ன செல்வங்கள் புதைந்து கிடந்தனவோ!

## இன்றுள்ளவை

இத்தனை அழிவுகளுக்கும் தப்பி இன்று நமக்குக் கிடைத்திருப்பவை 36 நூல்களே. அவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ப.

# பத்துப் பாட்டு

பத்துப் பாட்டின் முதற்பாட்டு திருமுருகாற்றுப் படை. இது 317 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பா, இதன் ஆசிரியர் நக்கீரர். இரண்டாவது பாட்டு பொரு நராற்றுப்படை. இதுவும் ஆசிரிப்பா; 249 அடிகளைக் கொண்டது; இதன் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். 3ஆவது பாட்டு சிறுபாணாற்றுப் படை. ஆசிரியப்பா வகையைச் சார்ந்தது; 269 அடிகளைக் கொண்டது. இதனைப் பாடியவர் நல்லூர் நத்தத்தனார். நான்காம் பாட்டு பெரும்பாணாற்றுப்படை; 500 அடிகளால் அமைந்த ஆசிரியப்பா. இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். ஐந்தாம் பாட்டு முல்லைப் பாட்டு. இது 103 அடிகளைக் கொண்டது. இதன் ஆசிரியர் பொன்வாணிகன் மகனார் நப்பூதனார்.

ஆறாம் பாட்டு மதுரைக் காஞ்சி; 782 அடிகளைக் கொண்டது. இதை 'வஞ்சிப்பாட்டு' என்றும் கூறுவதுண்டு. இதன் ஆசிரியர் மாங்குடி மருதனார். ஏழாவது பாட்டு நெடுநல்வாடை; 188 அடிகளால் அமைந்த ஆசிரியப்பா. இதன் ஆசிரியரும் நக்கீரனாரே. எட்டாவது பாட்டு குறிஞ்சிப் பாட்டு. இதனைப் பெருங்குறிஞ்சி எனவுங் கூறுவர். 261 அடிகளைக் கொண்டது இதன் ஆசிரியர் கபிலர். ஒன்பதாம் பாட்டு பட்டினப் பாலை. இது 301 அடிகளைக்கொண்டது. இதனை 'வஞ்சி நெடும் பாட்டு' எனவும் கூறுவதுண்டு. இதைப் பாடியவர் பெரும்பாணாற்றுப்படை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார். பத்தாம் பாட்டு மலைபடுகடாம். இதன் ஆசிரியர் பெருங்குன்றூர் பெருங் கோசிகனார், 503 அடிகளைக் கொண்டது! இப் பாடல்கள் பத்தும் 103 அடிகளுக்குக் குறையாமலும், 892 அடிகளுக்கு மேற்போகாமலும் அமைந்தவை.

இவற்றுள் 5 பாட்டுகள் ஆற்றுப்படையாக அமைந்தவை. ஆற்றுப்படை என்பது பரிசுபெற்ற ஒரு புலவர், மற்றொரு புலவனிடம், தனக்குப் பரிசு வழங்கிய கொடை வள்ளலின் பெயர், குணம், பண்பு, ஊர், வழி முதலியவைகளைக் கூறி, அவரிடம் சென்று பரிசு பெற்று மகிழ்க என ஆற்றுப்படுத்துவதாகும்.

ஏழு நரம்புள்ள சிறு யாழ்கொண்டு பாடுவோர் சிறுபாணர். 21 நரம்புள்ள பெரிய யாழ்கொண்டு பாடுவோர் பெரும்பாணர். இவ்விரு திறத்தினர்களுக்கு வள்ளல்களின் இருப்பிடத்தைக் கூறி ஆற்றுப்படுத்தியிருப்பதே சிறு பாணாற்றுப் படையும், பெரும்பாணாற்றுப் படையுமாகும். இப் பாடல்களைக் கேட்ட மன்னர்களும், வள்ளல்களும் பெரும்பொருள்களைப் பொன்னும் மணியுமாகக் கொட்டிக் குவித்து வழங்கியிருக்கின்றனர். வள்ளல்கள் பலர் நிலங்களை வழங்கினர். சில மன்னர்கள், மலைகளை வழங்கியிருக்கின்றனர். இன்னும் சில மன்னர்கள், பல ஊர்களையே வழங்கியிருக்கின்றனர்.

இப் பத்துப் பாட்டுகளையும் படிப்பவர்கள் தமிழ்ச் சுவையை மட்டுமல்ல, பழங்காலத் தமிழ் மக்களின் வரலாற்றை, வாழ்வு முறைகளை, பழக்க வழக்கங்களையும் கண்டு மகிழலாம்.

## எட்டுத் தொகை

எட்டுத் தொகை நூல்கள் ''நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு'' என்பன. இந்த எட்டு நூல்களின் பெயரையுங்கொண்ட செய்யுள் ஒன்றும் உண்டு. அதைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் அது,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்தும் கலியே; அகம்புறமென்
றித்திறந்த எட்டுத் தொகை.

என்பது.

இந் நூல்களிலுள்ள பாடல்கள் அனைத்தும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. சில மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. பல்வேறு புலவர்களால் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றி பல்வேறு காலங்களில், பாடியுள்ள, பல்லாயிரம் பாடல்களிலிருந்து திரட்டி எடுத்துத் தொகுக்கப்பெற்ற, எட்டு நூல்களே எட்டுத் தொகை என்பது.

இதில் 9 அடிமுதல் 12 அடிவரையிலுள்ள 400 பாடல்கள் உள்ள தொகுப்பு நூல் நற்றிணை. 4 அடி முதல் 8 அடி வரையுள்ள 400 பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல் குறுந்தொகை. 13 அடி முதல் 31 அடி வரையுள்ள 400 பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல் அகநானூறு இது நீண்ட அடிகளையுடைய தாகலின் நெடுந்தொகை எனவும் கூறப்பெறும்.

3 அடி முதல் 6 அடி வரையுள்ள குறுகிய அடிகளையுடைய பாடல்கள் ஐந்நூறு கொண்ட தொகை நூல் ஐங்குறு நூறு. 150 பாடல்களை மட்டும்கொண்டு தொகுக்கப் பெற்றது கலித்தொகை. இது கலிப்பாவால் பாடப்பெற்றது; ஆதலின் இப் பெயர் பெற்றது போலும்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரையும், கொடை வள்ளல்கள் பலரையும் பற்றிப் பாடியுள்ள 400 பாடல்களால்

தொகுக்கப்பெற்ற நூல் புறநானூறு. சேரமன்னர்களைப் பற்றி மட்டும் பாடியுள்ள 100 பாடல்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல்தான் பதிற்றுப் பத்து. ஒவ்வொரு பத்துப்பாட்டும் ஒவ்வொரு புலவரால் பாடப் பெற்றது. பத்துப் புலவரால் பாடப்பெற்றது பத்து பத்துப் பாட்டுக்கள் ஆதலின், இது பதிற்றுப்பத்து எனப் பெயர் பெற்றது.

பரிபாடல் என்பது பரிபாட்டுப் பா வகையால் ப்பாடப் பெற்றது. இது இசைப்பாட்டு வகைகளில் ஒன்று இந்நூல் 70 பாடல்களைக் கொண்டது. நூல் முழுவதும் மதுரையை, திருப்பரங்குன்றத்தை, வையையை, திருமாலை, முருகனைப்பற்றிப் பாடப் பெற்றிருப்பதால், இதனைப் பாண்டிநாட்டு நூல் என்றே கொள்ளலாம். இந்நூலுக்கு பழைய உரை ஒன்று உண்டு. அது திருக்குறளுக்கு உரை எழுதியுள்ள பரிமேலழகர் கண்ட உரையேயாம் இப் பாடல்கள் அனைத்தும் அருமையானவை அதுவும் பலரால் பாடப்பெற்றவை. இசையும் அருமையானவை இதனைத் தொகுத்து உதவிய பேரறிஞனின் பெயரைக்கூட அறிய முடியவில்லை.

இந்த எட்டுத் தொகை நூல்களும், அவற்றிலடங்கியுள்ள பொருள்பற்றி அகம், புறம் என இருவகையாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. அகம் என்பது உள்ளத்தே நிகழும் காதலைப் பற்றியது. புறம் என்பது புறத்தே நிகழும் கொடை வீரம் பற்றியது.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களும் அகப்பொருள் நூல்கள், பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு ஆகிய மூன்றும்

புறப்பொருள் நூல்கள். இவை அனைத்தும் தமிழ் மக்களின் காதலை, வாழ்வை, பண்பை, கொடையை, வீரத்தைப் படம்பிடித்துக் காட்டுவன.

## பதினெண் கீழ்க்கணக்கு

நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், கைந்நிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி எனப்பதினெட்டு.

பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் பதினெண் மேல்கணக்கு என்றும்; இங்குக் கூறிய பதினெட்டும், கீழ்க்கணக்கு என்றும் கூறுவதுண்டு. மேல்கணக்கு நூல்கள் பதினெட்டும் காதலையும், வீரத்தையும், கொடையையும் குறிப்பன. கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் வலியுறுத்தி, மக்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பன.

இந்தப் பத்து, எட்டு, பதினெட்டு ஆகிய முப்பத்தாறு நூல்களே, இன்றைய தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள பழஞ்சொத்து, இவையுங்கூட, நமக்கு முழு உருவில் கிடைக்கவில்லை. பத்துப் பாட்டில் முதற் பாட்டுக்கே ஐயப் பாட்டுக்கு இடம் ஏற்பட்டுவிட்டது.

பரிபாடலில் இன்றைக்கு கிடைத்திருப்பவை 22 பாடல்களே. மற்றவையனைத்தும் அழிந்தே போய் விட்டன.

புறநானூறும் நமக்கு முழுதும் கிடைக்கவில்லை. முன்னடியில்லாத பாட்டுக்கள் 2. முடிவில்லாத பாட்டுக்கள் 6 இடையடியில்லாத பாட்டுக்கள் 40. அடியோடு இல்லாத பாட்டுக்கள் 2. ஆகமொத்தம் 400 என்றே இருக்கிறது.

'முத்தொள்ளாயிரம்' என்பது ஓர் அருமையான இலக்கிய நூல், பெயரைக் காணும்பொழுதே 2700 பாடல்களைக் கொண்டது என்பது புலப்படும். பாண்டியனைப்பற்றி 900. சேரனைப்பற்றி 900, சோழனைப் பற்றி 900மும் என மும்மன்னர்களையும் பற்றிப் பாடப் பெற்றவை. அவற்றுள் இன்று நமக்குக் கிடைத்திருப்பவை எல்லாம் 200 பாடல்களே. இந்த 200 பாடல்களில் உள்ள கருத்துச் செல்வங்களைக் காணும்பொழுதே, மற்ற 2500 பாடல்களில் உள்ள செல்வங்களும் எப்போதாவது எங்கிருந்தாவது கிடைக்குமா? என நமது மனம் ஏக்கமடையும்.

சங்ககாலத்திற்குப்பின் தோன்றிய இலக்கியங்களில் குறிப்பிடத் தகுந்தவை ஐம்பெருங் காப்பியங்கள். அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. இவற்றுள்ளும் வளையாபதி குண்டலகேசி என்ற இரண்டும் இன்றில்லை. சிதறுண்டு கிடந்த ஓலைச் சுவடிகளிலிருந்து இதுவரை 20 பாடல்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன.

ஆகவே, பழந்தமிழ் இலக்கியங்களில் குறைபாடுடைய-மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள, 36 நூல்களே இன்று நம்மிடையே உள்ளன. இவையே, தமிழின், தமிழரின், தமிழகத்தின் செல்வம். ஏறத்தாழ இன்றுள்ள 30,000 நூல்களுள் இதிலிருந்து பிறந்தவையே. இன்றைய நூல்களை மட்டும் படித்து மகிழ்வது

என்று இல்லாமல் பழந்தமிழ் நூல்களையும் படித்துப் பயன்பெறுவது நல்லது. பொன்னும், மணியும், முத்தும், பவளமும், மட்டுமல்ல செல்வங்கள். இலக்கியங்களில் புதைந்துகிடக்கின்ற கருத்துக்களும் உயர்ந்த செல்வங்கள் என்ற உண்மையையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

## உலகம்

தமிழ்ப் பேரறிஞர்கள் தாங்கள் இயற்றிய நூல்களையெல்லாம் தமிழகத்திற்கும், தமிழ் மக்களுக்கு என்றில்லாமல் உலக மக்களுக்கென்றே படைத்திருக்கின்றனர். இவ்வுண்மையை அவர்கள் இயற்றிய நூல்களிலெல்லாம் முதற்பாட்டில், முதலடியில், முதற் சொல்லாக; உலகத்தை வைத்துச் செய்திருப்பதிலிருந்தே நன்கறியலாம். சேக்கிழார் பெரிய புராணத்தை ''உலகெலாம் உணர்ந்தது'' என்று தொடங்கினார். கம்பர் தமது இராமாயணத்தை, ''உலகம் யாவையும்'' எனத் தொடங்கியிருக்கிறார். நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையை, ''உலகம் உவப்ப'' என்றே தொடங்கினார். நாற்கவிராசநம்பி அகப்பொருள் நூலை, ''மலர்தலை உலகத்து'' எனத் தொடங்கினார். கபிலர் தமது அகவலை, ''உலகத்தீரே, உலகத்தீரே'' என இருமுறை அழைத்துத் தொடங்கினார். இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தை ''அங்கண உலகளித்தலால்'' என்றுதான் தொடங்கியிருக்கிறார். வள்ளுவரும் திருக்குறளை, ''ஆதிபகவன் முதற்றே உலகு'' என்றுதான் தொடங்கினார். இறுதியாக இவ்வுலகைவிட்டு மறைந்து தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுங்கூட, தாம் இயற்றிய ''படுக்கைப் பிதற்றல்'' என்னும் நூலில், ''உலகை நோக்கு மின், உலகை

நோக்குமின்'' என்றே தொடங்கியிருக்கிறார் இது தமிழகப் புலவர் பெருமக்களின் பரந்து விரிந்த மனப்பான்மையைக் காட்டுவதாகவே அமைந்திருக்கிறது.

## ஒழுக்கம்

பிறநாட்டு நூல் நிலையங்களுக்குச் சென்று, ''வரலாற்றுக்குப் புறம்பாக, விஞ்ஞானத்திற்கும் புறம்பாக, மருத்துவத்திற்குப் புறம்பாக. மதத்திற்குப் புறம்பாக, ஒழுக்கத்தைப் பற்றி மட்டும் கூறுகிற ஒரு நூலை எடுங்கள்'' எனக் கேட்டால், ''இல்லை'' என்ற விடையே வரும். தமிழ் மொழியில் ஒன்றென்ன பல; ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம், நான்மணிக் கடிகை, நாலடியார், திருக்குறள் போன்று ஒழுககத்தைப் பற்றி மட்டும் கூறுகிற நூல்கள் பல உள்ளன. இது தமிழ் இலக்கியங்களின் மற்றொரு சிறப்பு ஆகும்.

## சமயம்

உலகின் எந்த நாட்டிலும், எந்த மொழியிலும் இல்லாத அளவிற்குத் தமிழ் மொழியில் சமய இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன. சைவ சமயம், வைணவ சமயம், சமண சமயம், புத்த சமயம் இஸ்லாம் சமயம், கிறிஸ்துவ சமயம் ஆகிய எல்லாச் சமயங்களுக்கும் தமிழ் மொழியில் அமைந்திருப்பது போன்ற சமய இலக்கியங்கள் எந்த மொழியிலும் அமைந்ததில்லை. இது தமிழ் இலக்கியங்களின் வேறொரு சிறப்பு ஆகும்.

## ஞானம்

உலகத்தின் கண்டங்கள் ஐந்து. அதில் நாம் வாழ்கின்ற கண்டம் ஆசியாக் கண்டம். உலகில் இன்று சிறந்த விளங்குகின்ற ஏழு பெரிய மதங்களும் நாம் வாழ்கின்ற ஆசியாக் கண்டத்திலேயே தோன்றியவை. சைவ மதம், வைணவ மதம், புத்த மதம், சமண மதம், பார்சி மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்துவ மதம் ஆகிய ஏழு பெரிய மதங்களும் ஆசியாக் கண்டத்தில்தான் தோன்றின. இதனால் நமது ஆசியாக் கண்டத்தை ஞானம் பிறந்த கண்டம் எனக் கூறுவதுண்டு. மற்றக் கண்டங்கள் யாவும் ஒப்புக்குக் கண்டங்கள். இத்தனை மதங்களையும் முன்னே வைத்துத் தமிழில் மிக அருமையான இலக்கியங்கள் தோன்றியிருந்தும், அவற்றின் தகுதிக்கும், தரத்திற்கும் ஏற்ற சிறப்பைச் ''சமயம்'' காரணமாக உலக மக்களிடத்தில் பெறமுடியாமற் போயிற்று.

## காலம்

சில தமிழ் இலக்கியங்களில் பெயர், வரிசை, முறை, தோன்றிய காலம் ஆகியவற்றை, இதனை அடுத்துக் கண்டு மகிழுங்கள்.

## கருத்து

இன்றைய அறிஞர்களுக்கும் எட்டாத கருத்துக்கள் பலவற்றைத் தமிழறிஞர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியங்களில் கூறியிருக்கின்றனர். (1) எது நாடு? (2) எவர் மக்கள்? (3) எது வீரம்? (4) எது கொடை? (5) எது செல்வம்? (6) எது காதல்? (7) எது கற்பு? (8) எது இழிவு? (9) எது உயர்வு? என்பது பற்றிய உயர்ந்த கருத்துக்களை அறியவேண்டுமானால்,

இன்று தமிழ் இலக்கியங்களைக் கொண்டுதான் அறியமுடியும். இவை அனைத்தையும் அறியவேண்டுமானால், ''தமிழ்ச் செல்வம்'' என்ற ஒரு நூலாலும் சிறிதளவு அறியலாம்.

## குண்டலகேசி

நிலையாமையைப் பற்றிச் சொல்லவந்த குண்டலகேசி நிலையாமலே போயிற்று. அது சொல்லியுள்ள ஒரு உயர்ந்த கருத்தை, நாம் பிறமொழி இலக்கியங்களிற் காண இயலாது. மனைவி இறந்துவிட்டாளே எனக் கணவன் கதறி அழுகிறான். அதைக் கண்ட குண்டலகேசி ஆசிரியர், ''தம்பி! உன் அழுகையில் எனக்கு நம்பிக்கையில்லை. வீணாக ஏன் அழுகிறாய்? அழுகையை நிறுத்து'' எனக் கூறுகிறார். காரணம் வினவியபோது; அவர் கூறுகிறார்; மனிதனுக்கு பருவம் ஏழு; அவை குழந்தைப் பருவம், பள்ளிப்பருவம், காளைப்பருவம், குடும்பப் பருவம், முதுமைப் பருவம், தடிப் பருவம், பாடைப் பருவம் எனப்பெறும். இவற்றில் நீ ஐந்து பருவங்களில் இறந்திருக்கிறாய். நீ என்றைக்காவது 'ஐயோ' நான் இறந்து போனேன் என அழுதிருக்கிறாயா? இல்லையே. தான் இறந்ததற்காகக் கூட அழாத ஒருவன், பிறர் இறந்ததற்காக அழுகிறான் என்றால் அதை நான் எப்படி நம்புவது?'' என அறைகிறார். ''உலக மக்களே! நீங்கள் சாகப் போகிறவர்கள்; ஆகவே, தவறு செய்யாதீர்கள்'' எனப் பல பேராசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். குண்டலகேசி ஆசிரியர் ஒருவர்தான், 'தம்பி! நீ செத்துப்போனவன்; தவறு செய்யாதே'' எனக் கூறியவர் எப்படி இப்புதிய கருத்து? பாடல் வேண்டுமா? இதோ,

பாளையாந் தன்மை செத்தும் பாலனாம் தன்மைசெத்தும்
காளையாம் பருவம் செத்தும் காமுறும் இளமை செத்தும்
மாளும் இவ்வுடலின் முன்னே மேல்வரும் மூப்புமாகி
நாளும் நாள் சாகின்றோமால் நமக்குநாம் அழாத தென்னே

## ஒரு துறைக் கோவை

அகம், புறம் என்ற இலக்கணத்தைப் போன்று இலக்கியங்களும் பிரிக்கப் பெற்றுள்ளது அகத்துறையில் தோன்றியுள்ள இலக்கியங்கள் எண்ணில் அடங்காதவை. அதில் ஒரு பகுதி 'கோவை' என்பது. இது 400 துறைகளைக் கொண்டது. ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு பாடலாக 400 துறைக்கும் 400 பாடல்களைக் கொண்டது. அத் துறைகள் காட்சி, ஐயம் குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல், நாணுத்துறவுரைத்தல், அலரறிவுறுத்தல், பிரிவாற்றாமை, படர்மெலிந்திரங்கல், நினைந்தவர் புலம்பல் முதலியன. அவற்றில் ஒரு துறை, தலைவி விரும்பிய காதலன் தன் எதிரே வந்து நிற்கக்கண்டதும் வெட்கப்பட்டுக் கண்களை மூடிக்கொள்ளுதல். இத்துறை ''நாணிக் கண்களை மூடிக்கொள்ளுதல். இத் துறை ''நாணிக் கண்புதைத்தல்'' என்றாகும். இந்த ஒரு துறையை மட்டும் வைத்தே 400 பாடல்கள் கொண்ட இலக்கியமும் ஒன்று உண்டு.

''அஞ்சாங் குலத்தவர் பார்ப்பாரைச் சேர்ந்தது அதிசயமே'' என்பது அகத்துறையில், கோவையில் 400 துறைகளிலுள்ள ஒரு துறையில், அகத்துறையிலுள்ள 400 பாடல்களிலுள்ள ஒரு பாடலில், ஒரு அடி. இந்த ஒரு அடியும் மூன்று பொருள்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது.

(1) ஐந்தாவது சாதியினர் அந்தணரைச் சார்ந்தது அதிசயமே என்பது.

(2) ஐந்து அங்குலமுள்ள விரல்கள் கண்களைச் சார்ந்தது அதிசயமே என்பது.

(3) இத்தனை நாளாக என்னைப் பார்க்க விரும்பிக் காத்துக் கொண்டிருந்த நீ, இப்போது என்னைக் கண்டதும் கண்களை மூடிக் கொண்டது அதிசமே என்பது.

(4) இத்தனை நாளாக என்னைப் பார்க்க விரும்பிக் காத்துக் கொண்டிருந்த நீ, இப்போது என்னைக் கண்டதும் கண்களை மூடிக் கொண்டது அதிசயமே என்பது.

இவ்வாறு 400 பாடல்களிலும் வருகிற 1600 அடிகளும், ''வெட்கப்பட்டுக் கண்களை மூடுகிற'' ஒரு துறையைப் பற்றி மட்டுமே பாடப் பெற்றிருக்கும். கண்களை மூடுவதற்குமுன்பு வேறு துறை, கைகளை எடுத்த பின்பு வேறு துறையாகிவிடும் இத் துறையிலும் ஒவ்வொரு பாடலிலுள்ள ஒவ்வொரு அடியிலும், இது போன்ற கருத்துகள் இரண்டு மூன்று சிலேடையாக அமைந்திருக்கும் இந்த நூலைப் பாடியவர் பெயர் அமிர்த கவிராயர்; காலம் 17 ஆம்நூற்றாண்டு

இதுபோன்று மற்றத் துறைகளுக்கும் 400 பாடல்களைக் கொண்ட கோவை பாடியுள்ள புலவர் பெருமக்கள் பலர் இருந்திருக்கின்றனர். இக்கோவை, ''ஒரு துறைக் கோவை'' எனப்படும், மாணிக்கவாசகர் பாடியுள்ள ''திருக்கோவையார்'' என்ற நூல், 400 துறைகளையும் பற்றிப் பாடியவை, திருவள்ளுவர் கூறிய திருக்குறளில், இன்பத்துப்பாலில்; 25 அத்தியாயங்களில், 250 பாடல்களில், சில துறைகளைப்பற்றி மட்டுமே கூறப்பெற்றுள்ளது.

இதுபோன்ற இலக்கியங்களை உலகின் எந்த நாட்டிலும், எந்த மொழியிலும், எந்தக் காலத்திலும், எந்தப் புலவனும் செய்ய தகாத எந்த வரலாற்றிலும் இல்லை.

# முற்கால நூல்கள்

## சங்ககால நூல்கள்

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை :** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை.**

**பதிணெண் கீழ்க்கணக்கு :** திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை, நூற்றைம்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைக்கிளை.

## பல்லவர் கால நூல்கள்

பன்னிரு திருமுறை: திருஞானசம்பந்தர் தேவாரம் 1,2,3, அப்பர் தேவாரம் 4,5,6 சுந்தரர் தேவ்ராம் 7, திருவாசகம் 8, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், குண்டல கேசி, வளையாபதி, நீலகேசி, பாரத வெண்பா.

## சோழர்கால நூல்கள்

பன்னிரு திருமுறை : திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 9, திருமந்திரம் 10, திருவாலவாயுடையார், முதல் பண்பாடல்கள் 11, பெரிய புராணம் 12, சிந்தாமணி. கந்தபுராணம், கம்ப ராமாயணம், நம்பி திருவிளையாடல், தக்கயாகப் பரணி, மூவர் உலா, குலோத்துங்கன், கோவை, அம்பிகா பதிக் கோவை, நன்னூல், யாப்பருங் கலக்காரிகை, யாப்பருங் கலவிருத்தி, வீரசோழியம், நேமிநாதம், நளவெண்பா, நம்பியகப் பொருள், மாறன் அலங்காரம், தண்டி அலங்காரம், தஞ்சை வாணன் கோவை, திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.

## பிற்கால நூல்கள்

பரஞ்சோதி திருவிளையாடல், காஞ்சிப் புராணம் நைடதம், குமரகுருபரர் பிரபந்தங்கள், சிவப்பிரகாசர் பிரபந்தங்கள், வில்லிபாரதம், பாகவதம், தணிகைப் புராணம், விநாயக புராணம், பத்து ஸ்தல புராணங்கள், 96 வகைப் பிரபந்தங்கள், சீறாப் புராணம், தேம்பாவணி, சதுரகராதி (வீரமாமுனிவர்)' வின்ஸ்லோ அகராதி, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நூல்கள், மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி, தமிழ்ப் பேரகராதி, சுவாமி விபுலானந்தர் இயற்றியருளிய யாழ்நூல்.

# உரைநடை இலக்கியங்கள்

தமிழ் இலக்கியங்களில் உரைநடை இலக்கியங்கள் என்பது ஒரு பிரிவு. பண்டைக் கால இலக்கியங்கள் அனைத்தும் கவிதை இலக்கியங்களாகவே அமைந்தவை. தமிழில் உரைநடை இலக்கியங்கள். மிக அண்மைக் காலத்தில்தான் தோன்றின.

அவை நாவல், புதினம், சிறுகதை, பெருங்கதை, கட்டுரைக்கோவை முதலியன. இத்துறையில் இன்றுள்ள இளம் எழுத்தாளர்கள் பலர் முயன்று எழுதி வெற்றி பெற்று வருகின்றனர்.

உரைநடை நூல்கள் அனைத்தும் பிறமொழிச் சொற்கள் கலவாத தனித்தமிழ் நடையில் அமைய வேண்டும் என்பது நல்லறிஞர்களின் கருத்து. அத்துறையில் நமக்கு வழிகாட்டியவர் மறைமலை அடிகளும், திரு.வி. கலியாண சுந்தரனாரும் மட்டுமே. அவ் வழியை முழுதும் பின்பற்றி உரைநடை இலக்கியங்களை எழுதி வெற்றி பெற்றவர்களில் தலைசிறந்தவர் உயர்திரு டாக்டர் மு. வரதராசனார் அவர்கள். இன்று இவர்களைப் பின்பற்றி எழுதும் எழுத்தாளர்கள் பலர் தோன்றித் தமிழ் இலக்கியங்களை வளர்த்து வருகின்றனர். இது மட்டுமல்ல; பேச்சு இலக்கியங்கள் எனவும் சில உண்டு. இவை உள்ளத்தை மகிழ்விப்பவை. பெரும்பாலும் நகைச்சுவையையே அடிப்படையாக கொண்டவை.

ஆகவே, தமிழ் இலக்கியங்கள் கவிதை, உரைநடை பேச்சு ஆகிய மூவகையிலும் சிறந்தவை. என்னே தமிழ் இலக்கியங்களின் சிறப்பு!

# 16. இலக்கணச் சிறப்பு

இலக்கணம் என்பது சட்டம், வரம்பு, ஒழுங்கு, அமைப்பு, அமைதி, அழகு எனப் பொருள்பெறும். இதை வடமொழியில், "அழகு" என்ற பொருளில் 'இலட்சணம்' எனக் கூறுவதும் உண்டு.

## அகத்தியம்

இது ஒரு சிறந்த இலக்கண நூல். இதைப் "பேரகத்தியம்" எனவும் கூறுவர். முதற்சங்கத்திற்கும் இடைச்சங்கத்திற்கும் இதுவே இலக்கண நூலாக இருந்து வந்தது எனவும், அது மிகவும் விரிவான நூல் எனவும், அதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வாழ்த்தியல், அரசியல் அமைச்சியல் முதலியன கூறப்பெற்றிருந்தன எனவும் தெரியவருகிறது. இந்நூல் இப்பொழுது இல்லை. இந் நூலின் சில நூற்பாக்கள் தொல்காப்பியம் இளம்பூரணர் உரையிலும், இலக்கண விளக்க உரையிலும், இலக்கணக் களஞ்சியத்திலும் காணப் பெறுகின்றன. இந்நூலின் காலம் 7000, 9000 ஆண்டுகள் எனக் கூறப்பெற்றாலும், 5000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதல்ல என உறுதியாகக் கூறலாம். இதனைச் செய்து உதவியவர் தமிழ்ச் சான்றோர்களில் ஒருவராகிய அகத்தியர். உலக மொழிகளில் முதல் முதலாக இலக்கணம் பெற்ற பெருமை தமிழுக்கும், அதைக் கண்ட பெருமை இவருக்கும் உண்டு.

## தொல்காப்பியம்

3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நூல்களில் இன்று நம்மிடையே சிறிதும் அழியாமல் முழுவதுமாக உள்ள நூல் தொல்காப்பியம் ஒன்றே. இதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு,

அணி ஆகிய ஐந்திற்கும் இலக்கணம் விரித்து உரைக்கப் பெற்றிருக்கிறது. இதுபோன்ற தொரு இலக்கணத்தை, உலக மொழிகளில் எதுவும் அன்று பெறவில்லை என்பது மட்டுமல்ல, இன்றும் பெறவில்லை. யவன நாட்டு அரித்தாட்டில் நூல்களுக்கும், ஆரிய நாட்டுப் பாணியின் நூல்களுக்கும் முன்னமேயே தொல்காப்பியர் நூலில் செறிவும், செப்பமும், வரம்பும், எழிலும் நிறைந்து காணப்பெற்றன. எபிரேயம், பாரசீகம், சீனம் போன்ற பழைய மொழி நூல்களில் காண முடியாத பல சிறப்பியல்கள் தொல்காப்பியத்திற் காணப் பெறுகின்றன.

## பழைய இலக்கணங்கள்

தொல்காப்பியத்திற்கு முன்னும், அகத்தியத்திற்குப் பின்னும், தமிழில் பல இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. இவ்வுண்மையை ''என்ப'', 'என்மானர் புலவர்'' ''யாப்பென மொழிப யாப்பறி புலவர்'', ''தோலென மொழிப் தொன்மொழிப் புலவர்'' எனத் தொல்காப்பியத்திற் காணப் பெறுவதாலேயே நன்கறியலாம். இந்நூல்களின் காலம் ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகளாகும். அவற்றில் எதுவும் இன்றில்லை.

## பிற்பட்ட இலக்கண நூல்கள்

இறையனார் அகப்பொருள், பன்னிரு படலம், வெண்பாப் பாட்டியல், வெண்பாமாலை, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், தொல்காப்பிய விருத்தி, முதற் சூத்திரவிருத்தி, நன்னூல், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தண்டியலங்காரம், வீர சோழியம் முதலியன பிற்காலத் தமிழ் இலக்கண நூல்களில் தலை சிறந்த விளங்குவன. இவற்றில் சில, மிகப் பழைய இலக்கணங்களோடு வைத்து எண்ணத் தகுந்தவை.

## ஐம்பெரும் பிரிவு

தமிழ் இலக்கணம் ஐந்து பெரும் பிரிவுகளையுடையது; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இப்பிரிவுகளையும், இதன் உட்பிரிவுகளையும், உட்பிரிவின் உட்பிரிவுகளிலுள்ள கிளைகளையும், இலைகளையும் தன்னகத்தே கூறவேண்டு மானால், தமிழ் இலக்கணமானது வேர்முதல் விழுதுவரை எண்ணி வரையறுக்கப்பெற்ற "ஒரு பெரிய ஆலமரம்" என்றே கூறியாக வேண்டும்.

## எழுத்து

"அ, இ, உ, எ, ஒ" என்ற ஐந்தெழுத்தும் தமிழின் உயிரெழுத்துக்கள் மட்டுமல்ல, உயிரின் உயிர் என்றே கூறவேண்டும். ஏனெனில் உலகில் பல மொழிகள் இந்த எழுத்துக் களை உயிரெழுத்துக்களாகக் கொண்டுள்ளன. ஆங்கிலத்திற்கூட இதே ஐந்தெழுத்துக்களைத்தான் உயிர் எழுத்துக்கள் எனக் கூறி A, E, I, O, U என்கின்றனர். "ஆ, ஈ, ஊ, ஏ, ஓ" இதன் நெடில் எழுத்துக்க்ள். ஆங்கிலத்திலும், இந்தியிலும் "எ, ஒ" என்ற இரு உயிர்களும் அடியோடு இல்லை. அதற்கு மாறாக "ஏ," "ஓ" என்ற இரண்டு நெடில்கள் மட்டுமே உள்ளன. இவை தமிழ் எழுத்துக்களின் சிறப்பைப் பின்னும் உயர்த்திக் காட்டுகின்றன.

## இன எழுத்துக்கள்

ஒரு எழுத்துக்கு மற்றொரு எழுத்து இனம் என்பதை எழுத்திலும், தமிழ் இலக்கணத்திலும் தான் காணமுடியும்.

> க-வுக்கு "ங" அதாவது 'ங்' வந்த பிறகு இதன் இனமாகிய "க" தான் வரும் சங்கு, இங்கு, எங்கு, கங்ஙணம், மங்கலம், அங்ஙணம் என வருவன காண்க; இது G ஒலி.

ச-வுக்கு ''ஞ'' செஞ்சி, கஞ்சி, மஞ்சி, பஞ்சணை, வஞ்சணை. இது J ஒலி.

ட-வுக்கு ''ண,'' தண்டனை கண்டம், மண்டலம்; நண்டு, வண்டு முதலியன காண்க. இது D ஒலி.

த-வுக்கு ''ந,'' தந்தை வந்தது, அந்தி, மந்தி, கந்தை, பந்து முதலியன காண்க. இது Dha ஒலி.

ப-வுக்கு ''ம,'' சிலம்பு, பம்பரம், கம்பு, தம்பி, கம்பி, சாம்பு முதலியன காண்க. இது B ஒலி.

ற-வுக்கு ''ன,'' கன்று பன்றி, முன்றில், இன்று, அன்று, சென்று, முதலியன காண்க. இது R ஒலி.

மேலே உள்ளவைகளைப் படித்தபிறகு நீங்கள் தமிழ் எழுத்துகளின் சிறப்பைக் கண்டு மகிழந்திருக்கலாம். ஆனால், அதிலுள்ள நான்கு உண்மைகளும் இன்னும் உங்களை அதிகமாக மகிழ்விக்கும்.

(1) மேலேயுள்ள ''கசடதபற'' என்ற எழுத்துகள் ஆறுமே வல்லினம்.

(2) அதற்கு இனமாக வந்துள்ள எழுத்துக்கள் ஆறுமே மெல்லினம்.

(3) ''யரலவழள'' என்ற இடையின எழுத்துகள் ஆறும், பிறிதொன்றுடன் இனமாக அமையாத ஓர் தனி இனம்.

(4) இனமாக வந்துள்ள ''ந, ண, ன'' எழுத்துகள் எங்கும் எதற்கும் மாறியமையாதவை.

இதனாலேயே முதல் ந-கரத்தை தந்நகரம் எனவும், இரண்டாவது ண-கரத்தை டண்ணகரம் எனவும்,

மூன்றவாது ன-கரத்தை றன்னகரம் எனவும் இலக்கணம் கூறும்.

இப்படி ஒரு எழுத்திலக்கணத்தை எந்த மொழியிலாவது காண முடியுமா? ஆராய்ந்து பாருங்கள்.

## ''உ'' உம், ''இ''யும்

உயிரெழுத்துகளுக்கு ஒரு மாத்திரை அளவு ஓசையுண்டு என முன் அறிந்தோம். ஆனாலும், உ-கரமும் இ-கரமும் சிலவிடங்களில் குறைவான ஓசையோடு ஒலிக்கும். அவற்றிற்குக் ''குற்றியலுகரம்'' எனவும், ''குற்றியலிகரம்'' எனவும் பெயர்.

அக் குற்றியலுகரம், நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றிலுகரம், இடைத் தொடர்க் குற்றிலுகரம் என ஆறு வகைப்படும். இக் குற்றிலுகரங்கள் கடைசி யெழுத்தாகிய தன்னைத் தொடர்கின்ற அயல் எழுத்துகளின் வகைகளினாலே அமையும். குற்றிய லிகரமும் இவ்வாறே அமையும்.

## அளபெடை

உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் தமக்குள்ள அளவைவிடச் சிலபொழுது நீண்டொலிக்கும். அது பெரும்பான்மையாக அழைத்தல், அழுதல், புலம்பல், பாடுதல் ஆகிய நான்கிடத்திலும் வரும். அதுவே எழுத்திலும் கவிதையிலும் வரும்பொழுது, கூவினான் என்பது ''கூஉவினான்'' எனவும் ஊமை என்பது ''ஊஉமை'' எனவும், ஆடை என்பது ''ஆஅடை'' எனவும் உ-வும்' அ-வும் ஆகிய உயிரொன்று ஏறி மூன்று மாத்திரை அளவு ஒலி

தரும். இவற்றிற்கு ''அளபெடை'' எனப் பெயர். ஊ, ஆ, போன்றே ஏனைய நெட்டெழுத்துகளும் அளபெடையாக வருவது உண்டு. மெய்யெழுத்து அளபெடையாக வரும்பொழுது, 'இலங்ங்கு வெண்ண்பிறை என்றாற்போல, மேலும் ஓர் ஒற்று சேர்ந்துவரும்.

## முதனிலை, இறுதிநிலை

தமிழ்ச் சொற்களுக்கு முன்னே வருகிற எழுத்துகள் ''கசதநபம'' என்ற ஆறு எழுத்துகள் மட்டுமே. இந்த ஆறும் பன்னிரண்டு உயிரோடு வரும். ''வ'' எழுத்து எட்டு உயிரோடும், ''ய'' நான்கு உயிரோடும், ''ஞ'' நான்கு உயிரோடும் மொழிக்கு முன்னே வரும். ''எ'' எழுத்து இல்லாத மற்ற 11 உயிர்களும், ''ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள்'' ஆகிய 11 மெய்களும் ஆகிய 22 எழுத்துக்களும் சொற்களின் இறுதியில் வரும், சொற்களுக்கு முன்னே வருகிற எழுத்துகளை முதனிலை எனவும், பின்னே வருகிற எழுத்துகளை இறுதிநிலை எனவும் புலவர் பெருமக்கள் கூறுவர்.

## சாரியை

சாரியை கரச்சாரியை, காரச்சாரியை, கான்சாரியை என மூவகைப்படும். இது உயிர்க் குற்றெழுத்துக்களுக்கும், உயிர்மெய்க் குற்றெழுத்துகளுக்கும் உரியவை. மெய் யெழுத்துகள் ''அ'' என்னும் சாரியையும், அதனோடு கரம். காரம், கான் என்னுஞ் சாரியைகளும் பெறும். உயிர்மெய் நெட்டெழுத்துகள் சாரியை பெற்றும், மெய்கள் சாரியை பெறாமலும் இயங்காது.

இவ்வாறே எழுதிக்கொண்டே சென்றால் மிகவும் விரிவடையும். ஆதலின் எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்குமுள்ள சில இலக்கண வகைகளை மட்டும் இதன் கீழே குறிப்பிடுகிறேன்.

## எழுத்தியல்

எழுத்துகளின் வகை, எழுத்துகளின் இனம், ஆய்த எழுத்து, மாத்திரை, குற்றிலுகரம்; முற்றிலுகரம்; குற்றியலிகரம், அளபெடை, மொழிமுன் வரும் எழுத்துகள், மொழிபின் வரும் எழுத்துகள், போலி எழுத்துகள் ஏற்கும் சாரியை.

## பதவியல்

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

## பெயரியல் வகை

சொல்வகை, திணை, பால், பால்பகா அஃறிணைப் பெயர், இடம், வேற்றுமை, உருபு, மயக்கம், விகாரப் பட்டு உருபேற்கும் சொற்கள், வேற்றுமை உருபு கொண்டு முடியும் சொற்கள், வேற்றுமை உருபுகள் ஏற்கும் சாரியை,

## வினையியல்

வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர். உடன்பாடு, எதிர்மறை, பொது வினைகள்.

## இடையியல்

தத்தம் பொருளைக் காட்டும் இடைச் சொற்கள்

மூவிடத்தும் வரும் அசைநிலை இடைச் சொற்கள்.

## உரியியல்

ஒரு குணத்தையும் பல குணத்தையும் காட்டுகின்ற உரிச் சொற்கள்.

இடைச் சொற்களினின்றும் உரிச்சொற்களினின்றும் பெயர்ப் பகுபதங்களும், வினைப் பகுபதங்களும் பிறக்குமென்பது,

## பொதுவியல்

வழக்கு, வெளிப்படை, குறிப்பு, ஆகுபெயர், வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி, இடைப் பிறவரல், திணை, பால் முதலிய ஏழும் மயங்கிவரின் வழுவாமென்பது; திணை, பால் வழுவமைதிகள்; இட வழுவமைதி, காலவழுவமைதி, அறுவகை வினா, மரபு, ஒரு பொருட் பன்மொழி.

## சொற்றொடரியல்

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்கள்.

## புணரியல்

உயிரீற்றின்பின் உயிர் புணர்தல்; குற்றியலுகரத்திற்குப் பின் உயிர் புணர்தல்; சில முற்றிலுக்கரத்திற்குப் பின் உயிர் புணர்தல்; குற்றியலுகரத்தின் பின்னும் முற்றியலுகரத்தின் பின்னும் யகரம் புணர்தல்; மெய்யீற்றின் பின் உயிர் புணர்தல்; உயிரீற்றின் பின்னும் மெய்யீற்றின் பின்னும் வல்லினம் புணர்தல்; உயிரீற்றின் பின்னும் மெய்யீற்றின் பின்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்; உயர்திணைப் பெயர் பொதுப் பெயர்களின் பின் வல்லினம் புணர்தல்; அஃறிணைப்பெயரின் பின் வல்லினம் புணர்தல், விளிப் பெயரின் பின்வல்லினம் புணர்தல், குற்றியலுகரப்புணர்ச்சி; ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி, லகர ளகர ஈற்றுப் புணர்ச்சி; வகர மகர ஈற்றுப் புணர்ச்சி; எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி திசைப் பெயர்ப் புணர்ச்சி; வடமொழிப் புணர்ச்சி என்பன.

மேலே குறிப்பிட்ட அவற்றில்-

எழுத்தியல்வகை 12-ம் 82 பிரிவுகளைக் கொண்டவை.

பதவியல் 6-ம் 99 பிரிவுகளைக் கொண்டவை.

பெயரியல் 10-ம் 106 பிரிவுகளைக் கொண்டவை.

வினையியல் 9-ம் 111 பிரிவுகளைக் கொண்டவை.

இடையியல் 2-ம் 15 பிரிவுகளைக் கொண்டவை.

உரியியல் 3-ம் 4 பிரிவுகளைக் கொண்டவை.

பொதுவியல் 15-ம் 82 பிரிவுகளைக் கொண்டவை.

சொற்றொடரியல் 3-ம் 10 பிரிவுகளைக் கொண்டவை.

புணரியல் 16-ம் 141 பிரிவுகளைக் கொண்டவை.

ஆக. இந்த இயல் 9-ம் 76 வகைகளையும், 650 பிரிவுகளையும் கொண்டவை.

யாப்பும், அணியும் இவ்வாறே பல இயல்புகளையும், வகைகளையும், பிரிவுகளையும், உட்பிரிவுகளையும் கொண்டவை. இவற்றைப் படித்து அல்லது பாடங்கேட்டு அறிவதே நல்லது.

**பாடம் 1.** சொற்றொடரியல் வகை 3 என்பது எழுவாய், பயனிலை, செயப்படு பொருள். அதன் 10-வது பிரிவு "எழுவாயும் பயனிலையும் திணை, பால் இடங்களில் மாறுபடமால் ஒத்திருக்க வேண்டும்!" என்பது.

**எடுத்துக்காட்டு :** அவன் வந்தான். அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது. அவை வந்தன. நான் வந்தேன், நாம் வந்தோம், நீ வந்தாய், நீர் வந்தீர், நீங்கள் வந்தீர்கள்.

இவற்றுள் அவன், இவன். நான் என்பன இடத்தையும், வந்தான், வருகிறான், வருவான் என்பன காலத்தையும் காட்டுவனவாம்.

பாடம் 2. பெயரியலில் ஆறாவது வகை, வேற்றுமை, வேற்றுமை என்பது "தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமைப் படுத்துவது." இது எட்டு வகைப்படும்.

**விளக்கம் :** முதல் வேற்றுமை பெயர். மரம்.

| | |
|---|---|
| இரண்டாம் வேற்கை உருபு | ஐ. |
| மரத்தை (வெட்டினான்) | |
| மூன்றாம் வேற்றுமை உருபு | ஆல். |
| மரத்தால் (செய்தது) | |
| நான்காம் வேற்றுமை உருபு | கு. |
| மரத்திற்கு (தண்ணீர்) | |
| ஐந்தாம் வேற்றுமை உருபு | இல். |
| மரத்தில் (பெரியது) | |
| ஆறாம் வேற்றுமை உருபு | அது. |
| மரத்தினது (கிளை) | |
| ஏழாம் வேற்றுமை உருபு | மேல். |
| மரத்தின்மேல் (இருந்தது) | |
| எட்டாம் வேற்றுமை உருபு | விளி. |
| மரமே (உனக்கு நன்றி) | |

இந்த இரண்டு பாடங்களுமே சுருக்கமே. விரித்து எழுதினால் பல பக்களாகும். போதும் இந்த அளவு. எப்படி தமிழ் இலக்கணம்? தமிழ் மொழி ஒன்றினால் மட்டுமே இவ்வாறு எழுத, பேச இயலும். பிற மொழிகளால் இயலாது என்பதை அவர்கள் "நம்பளகிகளால் சொல்றான்; மரம் இருக்கிறானில்லே" என்று சொல்வதால் நன்கறியலாம். ஆங்கிலத்தில்கூட நீ, நீர், நீங்கள் என்பதற்கு You என்ற ஒரே சொல். வந்தான், வந்தாள், வந்தது என்பதற்கும் Came

என்ற ஒரே சொல். இந்த இரு சொற்களையும் தமிழ் தெரியாதவர்களை மொழி பெயர்க்கும்படி செய்தால் பெரு நகைப்பை உண்டாக்கும். தமிழ் மொழி ஒரு பண்பட்ட மொழியாக அமைந்த மொழி. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அதற்கு இலக்கணம் அமைந்ததினாலேயே அது ஒரு சிறந்த மொழி என மெய்ப்பிக்கப் பெற்றுள்ளது.

இதுகாறும் கூறியவாற்றால் தமிழ் இலக்கணத்தின் சிறப்பை ஒருவாறு அறியலாம். தமிழ் நூல்களிலுள்ள பொருள்களை அறிய வேண்டுமானால், கட்டாயம் இலக்கணத்தைப் பயின்றாக வேண்டும். இன்றேல் பயனிராது. படித்துப் பயனடையுங்கள்.

வாழட்டும் தமிழகம்

வளரட்டும் தமிழ்மொழி!

## முற்றுப் பெற்றது

*முத்தமிழ்க் காவலர்*

# கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

தமிழ் செல்வம் .... ....
தமிழின் சிறப்பு .... . .
அறிவுக் கதைகள் .... ....
எனது நண்பர்கள் .... ....
வள்ளுவரும் குறளும் ... ....
வள்ளுவர் உள்ளம் .... ....
திருக்குறள் கட்டுரைகள் .... ...
திருக்குறளில் செயல் திறன் .... ....
திருக்குறள் புதைபொருள் .... ....
மும்மணிகள் .... ....
நான்மணிகள் .... ....
ஐந்து செல்வங்கள் .... ....
ஆறு செல்வங்கள் .... ....
அறிவுக்கு உணவு .... ....
தமிழ் மருந்துகள் .... ....
மணமக்களுக்கு .... ....
இளங்கோவும் சிலம்பும் .... ....
நல்வாழ்வுக்கு வழி .... ....
எண்ணக்குவியல் .... ....
வள்ளலாரும் அருட்பாவும் .... ....
எது வியாபாரம்? எவர் வியாபாரி? .... ....
மாணவர்களுக்கு ... ....
திருச்சி விசுவநாதம் வரலாறு .... ....
முத்தமிழ்க் காவலர் பற்றி
100 அறிஞர்கள் .... ....

## பாரி நிலையம்

**184, பிராட்வே, சென்னை-600 108.**

**Wrapper Printed at Mahin Printers, Chennai-1**